பக்கங்கள்: இருபத்தெட்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 23 திங்கட்கிழமை (10.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 318



17 உளநலமான வாழ்வுக்கு உதவிடுவோம்



23 சந்திரனில் கொட்டிக் கிடக்கும் டைட்டேனியம்



25 வென்றது மும்பை இந்தியன்ஸ்

## 21 சபைகளைக் கைப்பற்றி அரசு பெருவெற்றி
## கொழும்பை மாத்திரம் தக்கவைத்தது ஐ.தே.க.

கொழும்பு, ஒக்.10

பல்வேறு எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் மூன்றாம் கட்டமாக நடந்து முடிந்த 23 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் 21 சபைகளைக் கைப்பற்றி தெற்கில் இம்முறையும் தனது பலத்தை வெளிப்படுத்தி உள்ளது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி.

அரச தரப்புடன் பலப்பரீட்சை நடத் திய பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தனது கோட்டை என வர்ணிக்கப்படும் கொழும்பு மாநகரசபையை மட்டும் தக்கவைத்துக் கொண்டு ஏனைய இடங்களைப் பறிகொடுத் துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியிட மிருந்து 58 வருடகாலமாக அசைக்க முடியாதிருந்த கண்டி மாநகரசபையையும், அதேபோன்று நுவரெலியா மாநகரசபையையும் இம் முறை தனதாக்கிக்கொண்டது ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணி.

பக் 27



கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் வெற்றியீட்டிய தனது கட்சியின் மேயர் வேட்பாளர் முஸம்மிலுக்கு ஐ.தே.க. தலைவர் ரணில் வாழ்த்துத் தெரிவித்தார்.

## சூட்டுக் காயத்துடன் சிப்பாயின் சடலம் நேற்றும் ஒப்படைப்பு

காரைநகர், ஒக்.10

காரைநகர் பகுதியில் இருந்து சூட்டுக் காயத்துடன் இராணுவச் சிப்பாய் ஒருவரின் சடலம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டது.

காரைநகர் 51ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த ஏ.ஏ.எஸ்.புஸ்ப குமார (வயது-22) என்ற சிப்பாயின் சடலமே ஒப் படைக்கப்பட்டதாக வைத்தி யசாலை வட்டாரங்கள்

பக் 27

# தமிழர்களின் மீள்குடியமர்வு வடக்கில் தாமதிப்பது ஏன்?

## இந்திய வெளியுறவுச் செயலர் யாழ்ப்பாணத்தில் நேற்று கேள்வி

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 10

**போர் முடிவடைந்து சுமார் 3 ஆண்டுகள் ஆகின்றபோதும் வடக்கில் தமிழ் மக்களை மீளக்குடியமர்த்தும் பணிகள் இன்னமும் முழுமை பெறாதுள்ளதற்கான காரணங்கள் என்ன என்று நேற்று யாழ்ப்பாணத்தில் அரச பிரதிநிதியான ஆளுநரிடம் கேள்வி எழுப்பியுள்ளார் இந்திய வெளியுறவுச் செயலர் ரஞ்சன் மாத்தாய். இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்களின் இடங்கள் (முகாம் பகுதிகள்/உயர் பாதுகாப்பு வலயங்கள்), மற்றும் முல்லைத்தீவில் பல பகுதிகளில் ஏன் இன்னமும் மீள் குடியமர்வு சாத்தியப்படவில்லை என்று அறிவதில் மாத்தாய் ஆர்வம் காட்டினார்.**

மூன்று நாள் பயணமாக இலங்கை வந்த ரஞ்சன் மாத்தாய் தலைமையிலான இந்தியக் குழுவினர் நேற்றுப் பகல் 11.30 மணியளவில் யாழ்ப்பாணம் வந்தனர். விமானம் மூலம் பலாலியை வந்தடைந்த அவர்கள், உடனடியாகக் காங்கேசன்துறைமுகத்துக்குச் சென்று அதன் புனரமைப்புப் பணிகள் குறித்து ஆராய்ந்தனர்.

துறைமுகத்தின் புனரமைப்புக்கான முன்னோடியாக, புலிகளால்

பக் 27

## பாரத லக்ஸ்மன் கொலை
## முதலில் சுட்டவர் யார்? துருவுகிறது பொலிஸ்

கொழும்பு, ஒக்.10

கொலன்னாவ, முல்லேரியாவில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஜனாதிபதியின் ஆலாசகரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொல்லப்பட்டமை குறித்தான விசாரணைகளை மேற்கொள்ளும் இரகசியப் பொலிஸார் இது தொடர்பான முக்கிய தகவல்களைத் திரட்டியிருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.

தேர்தலின்போது ஆளுங்கட்சி ஆதரவாளர் ஒருவர் துமிந்த சில்வாவின் சகாக்களால் தாக்கப்பட்ட சம்பவமே இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்திற்கு வழிகோலியுள்ளதாகத் தெரிகிறது. இது தொடர்பிலான கருத்து முரண்பாடு நேற்று முன்தினம் தீவிரமடைந்திருந்த சமயத்தில் இரு தரப்பினரும் நேருக்கு நேர் சந்திக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. முதலில் இரு தரப்பினரும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட போதிலும் இடையில்

பக் 27



முல்லேரியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் பலியான ஜனாதிபதியின் ஆலோசகர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று அஞ்சலி செலுத்தினார்.

## கொழும்பில் நிலையான ஆட்சிக்கு மனோவை ஐ.தே.க. நாடுகிறது

கொழும்பு, ஒக்.10

நடந்து முடிந்த தேர்தலில் கொழும்பு மாநகர சபையைக் கைப்பற்றியிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றிருக்காத நிலையில், நிலையான ஆட்சியொன்றை முன்னெடுத்துச் செல்வதற்கு ஜனநாயக மக்கள் முன்னணியின் ஆதரவை நேற்று அவசரமாகக் கோரியிருக்கிறது என உதயனுக்குத் தெரிய வந்தது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டதிட்டங்களின்படி நேற்றைய வெற்றியினால் மாநகர சபையில் ஆட்சியமைக்க ஐ.தே.க. உரிமை கோர முடியும். ஆனால், அவ்வாறு ஆட்சியமைத்த பின்னர் வரவு - செலவுத்திட்டம் உட்பட்ட முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றும்போது மாநகரசபையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியானது ஜன நாயக மக்கள் முன்னணி உட்பட்ட இதர கட்சிகள் இணைந்தால் சுயேட்சையுடன் பெரும்பான்மையைப் பெற்றுவிடும்.

இதனால், மனோ கணேசனின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் தமது கட்சி எதிர்பார்ப்பதாகப் பெயர் குறிப்பிட விரும்பாத ஐ.தே.கவின் மூத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

பக் 27

## இலங்கைக் கடற்படையின் தாக்குதல் இந்தியாவுக்கு எதிரான ஆக்கிரமிப்பே!

### காரசாரமாகக் கண்டிக்கிறார் ஜெயலலிதா

கொழும்பு, ஒக்.10

தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலை தேசிய பிரச்சினையாகக் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ரஞ்சன் மாத்தாயிடம் தமிழக முதல்வர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ரஞ்சன் மாத்தாய் முதல்வர் ஜெயலலிதாவைச் சனிக்கிழமை மாலை சந்தித்துப் பேசினார். பின்னர் தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில், ''தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நடத்தும் தாக்குதலை சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. இதனை இந்தியாவுக்கு எதிரான இலங்கை அரசின் தாக்குதலாகக் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்திய எல்லையில் சீனாவும், பாகிஸ்தானும் நடத்தும் தாக்குதலைப் போல இதனையும் எடுத்துக் கொள்ள வேண்டும்'' என்று ஜெயலலிதா வலியுறுத்தினார் என்று கூறப்பட்டுள்ளது.(உ-சி) [விரிவான செய்தி 21 ஆம் பக்கத்தில்]

## வட்டக்கச்சியில் நேற்றுமுன்தினம் இரவு வயோதிபப் பெண் வெட்டிப் படுகொலை

### கைதான நபரிடம் இருந்து நகைகள் மீட்பு

கிளிநொச்சி , ஒக்.10

கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் வயோதிபப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கழுத்தில் வெட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். வட்டக்கச்சிப்பகுதியில் கடந்த மூன்று தினங்களில் இது இரண்டாவது கொலைச் சம்பவம் ஆகும். வட்டக்கச்சி கட்சன் வீதியைச்

பக் 27

## பாதாளக் குழுவுடன் சேர்ந்தோர் அரசியலுக்கு வருவது கொடூரம்

### அமைச்சர் டியூ கருத்து

கொழும்பு, ஒக்.10

பாதாளக்குழுக்களுடன் தொடர்புடையவர்கள் அரசியலுக்கு வந்தால், நாட்டில் இவ்வாறான கொடூரச் சம்பவங்களே அரங்கேறும் எனத் தெரிவிக்கின்றார் சிரேஷ்ட அமைச்சர் டியூ. குணசேகர.

முல்லேரியா பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் ஜனாதிபதியின் ஆலோசகரும், தொழிற் சங்கப் பணிப்பாளரும், முன்னாள் அமைச்சருமான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர உட்பட மூவர் பலியாகினர்.

இந்தச் சம்பவத்தில் கொழும்பு மாவட்ட ஆளுந் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உட்பட பத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

பக் 27

உதயன்
10 ஒக்ரோபர் 2011 திங்கட்கிழமை

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




மன்னார் மாவட்டத்தில் தெளிவான வானிலையும், பிற மாவட்டங்களில் இடி மின்னல் நிலவுவதற்கான சாத்தியம் உண்டு.

# மாகாண விவசாய திணைக்களத்தை இடமாற்றும் முடிவு ஆளுநரால் ரத்து

யாழ்ப்பாணம், ஒக்.10

வடமாகாண விவசாய திணைக்களத்தை கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு மாற்றும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. ''எக்காரணம் கொண்டும் அலுவலகம் மாற்றப்படாது. வடமாகாண ஆளுநர் இதற்கான இரத்து உத்தரவை உடன் அறிவித்துள்ளார்'' என வடமாகாண பொது நிர்வாக பிரதி பிரதம செயலாளர் தி.இராசநாயகம் உதயனுக்குத் தெரிவித்தார்.

வடக்கு மாகாண விவசாய திணைக்களத்தை 12 ஆம் திகதி முதல் யாழ். மாவட்டத்துக்கு கொண்டு செல்லுமாறு வடக்கு ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பி இருந்தது. கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து அலுவலகத்தை யாழ். மாவட்டத்துக்கு கொண்டு செல்வதற்கு வலுவான காரணமில்லை என்பதை விவசாயிகளும், சம்பந்தபட்ட திணைக்கள அதிகாரிகளும், பொது மக்களும் ஆளுநரின் விசேட கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

விவசாய - உற்பத்தியின் மைய மாவட்டமாக கிளிநொச்சி விளங்குவதால் அங்கிருந்து விவசாயத் திணைக்களத்தை இடமாற்றம் செய்வது என்ற தீர்மானத்தை இரத்துச் செய்வதாக ஆளுநர் அறிவித்துள்ளார் என வடக்கு மாகாண பொது நிர்வாக பிரதி பிரதம செயலாளர் தி.இராசநாயகம் தெரிவித்தார். (உ-302)

# காரைநகரில் கடற்படையின் மருத்துவ முகாம்
# 1,200 பேர் நேற்று பங்குபற்றி பயன்பெற்றனர்

காரைநகர், ஒக். 10

காரைநகர் கடற்படையினரின் ஏற்பாட்டில் நடமாடும் மருத்துவ முகாம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு சுமார் 1, 200 பேர் பயன்பெற்றுள்ளனர்.

கடற்படையினரின் மருத்துவர்கள், யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் இணைந்து மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

மூளாய், சுழிபுரம், ஊர்காவற்றுறை போன்ற பகுதிகளில் இருந்தும் மக்கள் இந்த மருத்துவ முகாமில் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.



காரைநகர் கடற்படையினரின் 56 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தப்பட்ட இந்த மருத்துவ முகாமில் கலந்து கொண்ட வட பிராந்திய கடற்படை கட்டளைத் தளபதி றியல் அட்மிரல் விஜய குணவர்த்தன, காரைநகர் கடற்படை தளபதி ஆர்.சி.யு.சில்வா ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு மூக்கு கண்ணாடிகள், அங்கவீனர்களுக்கான முச்சக்கர நாற்காலிகள் என்பவற்றை வழங்கினர்.

அத்துடன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பணப் பரிசில்களும், பாடசாலை மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மாருக்கான சத்துணவு என்பன வழங்கப்பட்டன. (ஒ-250)

## கிளிநொச்சியில் இலவச 'கற்றாக்' சத்திர சிகிச்சை

கிளிநொச்சி, ஒக்.10

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மீளக்குடியமர்ந்தவர்களின் நலன்கருதி 'கற்றாக்' நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இலவச சத்திர சிகிச்சை இன்றும், நாளையும் காலை 9 மணி தொடக்கம் மாலை வரை கிளிநொச்சி வைத்திய சாலையில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ-323)

## கருத்தரங்கு

பருத்தித்துறை, ஒக்.10

கல்வி அமைச்சின் வழிகாட்டலுடன் நாடளாவிய ரீதியில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான கருத்தரங்கு வடமராட்சி கல்வி வலயத்தில் 17 நிலையங்களில் நடத்தப்பட்டு வருகின்றது.

விஞ்ஞான பாடத்துக்கான கருத்தரங்கு இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறுகிறது. 17 நிலையங்களில் இது நடக்கும். ஆங்கிலப் பாடத்துக்கான கருத்தரங்கு 17ஆம் திகதியும், கணித பாடத்துக்கான கருத்தரங்கு 24ஆம் திகதியும், வரலாறு பாடத்துக்கான கருத்தரங்கு 31 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வட இந்து மகளிர் கல்லூரி, வேலாயுதம் ம.வி., தும்பளை சிவப்பிரகாசம் ம.வி., புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, வல்வை மகளிர் கல்லூரி, தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி., உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை, நெல்லியடி மத்திய ம.வி., விக்னேஸ்வராக் கல்லூரி, ஞானசாரியார் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி, வட மத்திய பெண்கள் பாடசாலை, குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை ஆகிய நிலையங்களிலேயே கருத்தரங்கு நடைபெறவுள்ளது. (உ-190)

## சுழிபுரம் சந்தையின் புனரமைப்பு ஆரம்பம்

சுழிபுரம், ஒக்.10

சுழிபுரம் சத்தியக்காட்டு சந்தையின் கட்டிட திருத்தப் பணிகள் இடம்பெறுவதால் சந்தை வியாபாரிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்னரே இந்தத் திருத்தப் பணிகள் இடம்பெற்ற வருகின்றன.

எனினும் சந்தையின் தெற்குப் பக்கம் பொது மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

இதன் வெளிக்கூரை பதிவாக இருப்பதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-28)

## ஐரோப்பிய நாடாளுமன்றில் 'கொலைக்களம்'

சனல் - 4 தொலைக்காட்சி வெளியிட்ட 'சிறிலங்காவின் கொலைக்களம்' காணொளி ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் இந்த வாரம் காட்சிப்படுத்தப்படும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிவித்துள்ளது.

கொலைக்களம் ஆவணப்படத்துக்கு மேலதிகமாக, இறுதிப் போரின் போது செய்மதியால் எடுக்கப்பட்ட படங்களும் ஆதாரமாகக் காட்டப்பட இருக்கின்றன.

'சிறிலங்காவின் கொலைக்களம்' அண்மையில்தான் நியூயோர்க்கிலும், ஜெனீவாவிலும், வோஷிங்ரனில் உள்ள ஐ.நா. சபையிலும் திரையிடப்பட்டிருந்தது.

# பாலியல் ரீதியான தொந்தரவுகள் பலாலி ஆசிரியர் கலாசாலையில்!

நடவடிக்கைக்கு தயாராகிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஒக்.10

பலாலி ஆசிரியர் கலாசாலையில் பாலியல் ரீதியாக பெண்கள் பலர் பாதிப்புகளுக்கு ஆளாகி வருவதாக தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்

யாழ்.மாவட்ட அரச அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில் உயர் மட்ட அதிகாரிகள் முதல் ஏனைய தரங்களில் உள்ளவர்கள் பலர் இவ்வாறான பாலியல் ரீதியான வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் - அவர்களின் பெயர், விவரங்கள் வெளிப்படுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அண்மையில் யாழ். அரச அதிபர் ஊடகங்களுக்கு அறிவித்திருந்தார்.

அதன் முதல் கட்டமாக பலாலி ஆசிரியர் கலாசாலையின் மீது அரச அதிபர் தமது அதிரடி நடவடிக்கையை ஆரம்பிக்கவிருக்கிறார். மேற்படி கலாசாலையில் இருந்து பெண்கள் பலர் எழுத்து மூலமாக தமக்கு முறைப்பாடுகளை அனுப்பி வைத்துள்ளனர் என்றும் அரச அதிபர் கூறுகிறார். இதன் அடுத்த கட்டமாக தாம் பலாலி ஆசிரிய கலாசாலைக்குச் சென்று சம்பந்தப்பட்டவர்களை நேரில் சந்தித்து உரிய நடவடிக்கை எடுக்கத் தயாராகி வருகிறேன் என்றார் திருமதி இமெல்டா சுகுமார். (ஒ-14)

## வழக்கம்பரை ஆலயத்துக்கு புதிய தேர்முட்டி

சுழிபுரம்,ஒக்.10

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்தின் தேர்முட்டி மண்டபம் புதிதாக அமைக்கப்படவுள்ளது.

பழமை வாய்ந்த இந்த ஆலயத்தின் தேர்முட்டி மண்டபம் கடந்த சில திணங்களுக்கு முன்னதாக உடைக்கப்பட்டது.

புதிதாக கட்டப்படவுள்ள தேர்முட்டி மண்டபத்துக்கான அடிக்கல் நடும் பணி விரைவில் ஆரம்பமாகும் என்று நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-28)

# நிகழ்வுகள்

**மாணவர்கள் கௌரவிப்பு**

கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலையில் இன்று ஆசிரியர் தின விழாவும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் பாடசாலை மண்டபத்தில் அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா கலந்து கொள்வார். (ஒ-131)

**ஐவருக்கு சுகாதார விருது**

தேசிய சுகாதார விருது வழங்கும் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும். இந்த நிகழ்வில் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் கடமையாற்றி 30 வருடம் பூர்த்தி செய்த ஐவர் கடமை விருது வழங்கிக் கௌரவிக்கப்பட உள்ளார்கள். (ஒ-36)

**அதிபர்களுக்கான கலந்துரையாடல்**

நல்லூர் கோட்டக்கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல் யாழ். சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இன்று நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அதிபர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா அறிவித்துள்ளார். (ஒ-323)

**வரவேற்பு நிகழ்வு**

யாழ்.பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீட புதுமுக மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இரசாயனவியல்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புதுமுக மாணவர்களை காலை 7.30 மணிக்கு பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் ஒன்று கூடுமாறு விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (ம-313)

**மனனப் போட்டிகள்**

ஊர்காவற்றுறை கோட்டமட்ட மனனப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.புனித மரியாள் மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இந்தப் போட்டியில் பாடசாலை மட்டத்தில் முதல் இடங்கள் பெற்ற மாணவர்கள் அனைவரும் கலந்து கொள்ள முடியும். (ம-267-311)

**சேவை நிலையம் திறப்பு**

ஹற்றன் நஷனல் வங்கியின் வாடிக்கையாளர் சேவை நிலையம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது. (ம-122)

**அச்சுவேலியில் வங்கிக்கிளை திறப்பு**

ஹற்றன் நஷனல் வங்கியின் அச்சுவேலிக் கிளை இன்று திங்கட்கிழமை தொடக்கம் அச்சுவேலி பஸ் நிலையத்துக்கு முன்பாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தில் செயற்படவுள்ளது. (ஒ-11)

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள்

## கொழும்பு மாவட்டம்

### கொழும்பு மாநகரசபை
* ஐ.தே.க. 101,920 வாக்குகள்: உறுப்பினர்கள் 24.
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 77,089 வாக்குகள்: உறுப்பினர்கள் 16.
* ஜனநாயக மக்கள் முன்னணி 26,229 வாக்குகள்: உறுப்பினர்கள் 6.
* முஸ்லிம் காங்கிரஸ் 9,979 வாக்குகள்: உறுப்பினர்கள் 2.
* ஐக்கிய ஜனநாயக முன்னணி 7,830 வாக்குகள்: உறுப்பினர்கள் 2.
* சுயேச்சைக்குழு 2 - 4,085 வாக்குகள்: உறுப்பினர் 1
* ஜே.வி.பி. 3,162 வாக்குகள்: உறுப்பினர் 1
* சுயேச்சைக்குழு 1 - 2,962 வாக்குகள்: உறுப்பினர் 1

### தெஹிவளை - கல்கிஸை மாநகர சபை
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 39,812 வாக்குகள்: உறுப்பினர்கள் 16.
* ஐ.தே.க. 31,082 வாக்குகள்: உறுப்பினர்கள் 11.
* ஜனநாயக மக்கள் முன்னணி 2,167 வாக்குகள்: உறுப்பினர் 1
* ஜே.வி.பி. 1,568 வாக்குகள்: உறுப்பினர் 1

### ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகரசபை
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 26,723 வாக்குகள்: உறுப்பினர்கள் 13.
* ஐ.தே.க. 10,830 வாக்குகள்: உறுப்பினர்கள் 5.
* சுயேச்சைக்குழு 3 - 2,178 வாக்குகள்: உறுப்பினர் 1
* லங்கா சமசமாஜ கட்சி 1,291 வாக்குகள்: உறுப்பினர் 1

### மொறட்டுவ மாநகரசபை
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 45,286 வாக்குகள்: உறுப்பினர்கள் 18.
* ஐ.தே.க. 25,224 வாக்குகள்: உறுப்பினர்கள் 9.
* சுயேச்சைக்குழு 1 - 3,478 வாக்குகள்: உறுப்பினர் 1
* ஜே.வி.பி. 1,585 வாக்குகள்: உறுப்பினர் 1

### கொலன்னாவ நகரசபை
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 11,303 வாக்குகள்: உறுப்பினர்கள் 6.
* ஐ.தே.க. 10,667 வாக்குகள்: உறுப்பினர்கள் 4.
* ஜனநாயக மக்கள் முன்னனி 9381 : உறுப்பினர் 1

### கொட்டிகாவத்த - முல்லேரியாவ பிரதேசசபை
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 37,998 வாக்குகள்: உறுப்பினர்கள் 16.
* ஐ.தே.க. 12,269 வாக்குகள்: உறுப்பினர்கள் 5.

## கம்பஹா மாவட்டம்

### நீர்கொழும்பு மாநகரசபை
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 37,232 வாக்குகள்: உறுப்பினர்கள் 16.
* ஐ.தே.க. 24,712 வாக்குகள்: உறுப் பினர்கள் 9.
* முஸ்லிம் காங்கிரஸ் 1,588 வாக்குகள்: உறுப்பினர் 1

### கம்பஹா மாநகரசபை
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 22,679 வாக்குகள்: உறுப்பினர்கள் 14.
* ஐ.தே.க. 6,478 வாக்குகள்: உறுப் பினர்கள் 3.
* சுயேச்சைக்குழு 03 பெற்ற வாக்குகள் 835: உறுப்பினர் 1

## கண்டி மாவட்டம்

### கண்டி மாநகரசபை
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 23,189 வாக்குகள்: உறுப்பினர்கள் 13.
* ஐ.தே.க. 20,087 வாக்குகள்: உறுப் பினர்கள் 10.
* முஸ்லிம் காங்கிரஸ் 1,248 வாக்குகள்: உறுப்பினர் 1

### குண்டசாலை பிரதேசசபை
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 34,488 வாக்குகள்: உறுப்பினர்கள் 14.
* ஐ.தே.க. 16,934 வாக்குகள்: உறுப் பினர்கள் 6.
* சுயேட்சைக்குழு - 2,128 வாக்குகள்: உறுப்பினர் 1.
* ஜே.வி.பி. 1,561 வாக்குகள்: உறுப்பினர் 1

### கங்கவட்ட கோறளை பிரதேசசபை
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 14,083 வாக்குகள்: 8 உறுப்பினர்கள்.
* ஐ.தே.க. 9,418 வாக்குகள்: உறுப்பினர்கள் 4.

## மாத்தளை மாவட்டம்

### மாத்தளை மாநகரசபை
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 11,407 வாக்குகள்: உறுப்பினர்கள் 9.
* ஐ.தே.க. 4,751 வாக்குகள்: உறுப் பினர்கள் 3.
* சுயேச்சைக்குழு - 05, பெற்ற வாக்குகள் 552: உறுப்பினர் 1

## நுவரெலியா மாவட்டம்

### நுவரெலியா மாநகரசபை
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 6,275 வாக்குகள்: உறுப்பினர்கள் 6.
* ஐ.தே.க. 5,781 வாக்குகள்: உறுப்பினர்கள் 3.
* ஐக்கிய இலங்கை ஜனநாயக முன்னணி 1,237 வாக்குகள்: உறுப்பினர் 1

## காலி மாவட்டம்

### காலி மாநகரசபை
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 23,539 வாக்குகள்: உறுப்பினர்கள் 11.
* ஐ.தே.க. 16,137 வாக்குகள்: உறுப் பினர்கள் 7.
* ஜே.வி.பி. 1,085 வாக்குகள்: உறுப்பினர் 1

## மாத்தறை மாவட்டம்

### மாத்தறை மாநகரசபை
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 20,681 வாக்குகள்: உறுப்பினர்கள் 9.
* ஐ.தே.க. 12,619 வாக்குகள்: உறுப் பினர்கள் 5.
* மக்கள் விடுதலை முன்னணி 1,449 வாக்குகள்: உறுப்பினர் 1

## ஹம்பாந்தோட்டை மாவட்டம்

### ஹம்பாந்தோட்டை மாநகரசபை
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 6,183 வாக்குகள்: உறுப்பினர்கள் 8.
* ஐ.தே.க. 4,742 வாக்குகள்: உறுப்பினர்கள் 4.

### அம்பாந்தோட்டை பிரதேசசபை
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 11,836 வாக்குகள்: உறுப்பினர்கள் 6.
* ஐ.தே.க. 3,788 வாக்குகள்: உறுப்பினர் 1

### சூரியவெவ பிரதேசசபை
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 14,279 வாக்குகள்: உறுப்பினர்கள் 4.
* ஐ.தே.க. 5,388 வாக்குகள்: உறுப்பினர் 1

## அம்பாறை மாவட்டம்

### கல்முனை மாநகரசபை
* முஸ்லிம் காங்கிரஸ் 22,356 வாக்குகள்: உறுப்பினர்கள் 11.
* இலங்கை தமிழரசு கட்சி 9,911 வாக்குகள்: உறுப்பினர்கள் 4.
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 8,524 வாக்குகள்: உறுப்பினர்கள் 3.
* ஐ.தே.க. 2,805 வாக்குகள்: உறுப்பினர் 1

## குருநாகல் மாவட்டம்

### குருநாகல் மாநகரசபை
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 8,578 வாக்குகள்: உறுப்பினர்கள் 8.
* ஐ.தே.க. 4,838 வாக்குகள்: உறுப்பினர்கள் 4.

## அநுராதபுரம் மாவட்டம்

### அநுராதபுரம் மாநகரசபை
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 14,849 வாக்குகள்: உறுப்பினர்கள் 10.
* ஐ.தே.க. 5,028 வாக்குகள்: உறுப்பினர்கள் 3.

## பதுளை மாவட்டம்

### பதுளை மாநகரசபை
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 13,337 வாக்குகள்: உறுப்பினர்கள் 10.
* ஐ.தே.க. 6,982 வாக்குகள்: உறுப்பினர்கள் 5.

## இரத்தினபுரி மாவட்டம்

### இரத்தினபுரி மாநகரசபை
* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 15,626 வாக்குகள்: உறுப்பினர்கள் 11.
* ஐ.தே.க. 6,820 வாக்குகள்: உறுப்பினர்கள் 4.

# செய்தித்துளிகள்

## கல்முனையின் முதல்வர் யார்?

கல்முனை மாநகரசபையின் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மாநகர சபைக்கான முதல்வர் யார் என்பதை இன்னும் இரண்டு நாள்களில் தீர்மானிக்கும் என்று கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸன் அலி நேற்றுத் தெரிவித்தார்.

இரண்டு நாள்களில் கூடும் கட்சியின் உயர்பீடம் மேயரை நியமிப்பது விருப்பு வாக்குகளின் அடிப்படையிலா அல்லது வேறேதும் அடிப்படையிலா என்று முடிவெடுக்கும் என்றும் ஹஸன் அலி கூறினார்.

## ஐ.தே.கட்சியின் வெற்றி ஆரம்பம்

கொழும்பு மாநகர சபையின் வெற்றியுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிப்பயணம் ஆரம்பமாகின்றது என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுக் கூறினார்.

தேர்தல் பெறுபேறுகள் தொடர்பாக நேற்று கருத்துத் தெரிவித்த அவர், ''கொழும்பு மாநகர சபையில் நாம் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளோம். அரச அதிகாரிகளின் ஊழல், மோசடிகளையும் தாண்டி கொழும்பு மக்கள் எமக்கு வாக்களித்துள்ளனர். இந்த வெற்றியுடன் எமது வெற்றிப் பயணம் ஆரம்பமாகின்றது. எமது கட்சியைப் பலப்படுத்திக்கொண்டு செல்வதற்கான முதல் கட்டமாக நாம் இந்த வெற்றியைப் பார்க்கின்றோம். '' - என்றார்.

## சிறுபான்மையினர் ஐவர் மாத்தளையில் வெற்றி

மாத்தளை மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களுள் சிறுபான்மையினர் ஐந்துபேர் வெற்றிபெற்றுள்ளனர். ஆளுங்கட்சியில் போட்டியிட்டு மொஹமட் ஹில்மி கரீம் 7,310 வாக்குகளையும், முத்துசாமி சிவஞானம் 2,943 வாக்குகளையும், சந்தனம் பிரகாஷ் 1,625 வாக்குகளையும், ஹரீஸ் மொஹமட் சிஹார் 1,443 வாக்குகளையும், நாகூர் கனி மரிக்கார் 1,418 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

ஏனைய கட்சிகளிலிருந்து எந்தவொரு சிறுபான்மை வேட்பாளரும் வெற்றிபெறவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

## ஊர்வலங்களுக்குத் தடை

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் வெளியான நிலையில், எதிர்வரும் ஒரு வார காலத்துக்கு ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் ஏனையோருக்கு இடையூறு செய்யாமல் அமைதியான முறையில் கொண்டாட்டங்களில் ஈடுபடுமாறு தேர்தலுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்ன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தல் தினத்தன்று முல்லேரியா சம்பவத்தைத் தவிர பாரிய அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## நவீல்ட் பாடசாலைக்கு அன்பளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.10

கைதடி நவீல்ட் பாடசாலை வருடாந்த பரிசளிப்பு தினத்தை முன்னிட்டு கொழும்பு லயன்ஸ் கழகத்தினர் நிகழ்வுக்கான முழுத் தொகையையும் பொறுப்பேற்று அதனைக் கையளிக்கும் நிகழ்வு இன்று முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும் என்று அதிபர் தெரிவித்துள்ளார். (ஒ-323)

## கௌரவிப்பு நிகழ்வு பிற்போடப்பட்டது

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் உடற்பயிற்சி அணி 2011 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை சம்பியனானதை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த கௌரவிக்கும் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது. (உ-313)

## உயரப்புலத்தில் விபத்து; தாவடி வாசி காயம்

யாழ்ப்பாணம், ஒக்.10

சைக்கிளில் சென்ற கூலித்தொழிலாளியை மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் மோதிவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டார். கடும் உட்காயங்களுக்குள்ளான சைக்கிளோட்டி சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

ஆனைக்கோட்டை, உயரப்புலத்தில் இடம்பெற்ற இந்த விபத்தில் கொக்குவில், தாவடி தெற்கைச் சேர்ந்த க.யோகராசா (வயது 50) என்பவரே காயமடைந்தார். (ஒ-4)

# பாராட்டி வாழ்த்துகிறோம்



கிளிநொச்சி வலயத்தில் நல் அதிபராகத் தெரிவுசெய்யப்பட்டு 06.10.2011 அன்று ஜனாபதியினால் பிரதீபா பிரபா விருது வழங்கி கௌரவிக்கப்பெற்ற எமது பாடசாலை முதல்வர்

**திரு வ.ஜீவரத்தினம்**

அவர்களையும்,



கிளிநொச்சி வலயத்தில் நல்லாசிரியராகத் தெரிவுசெய்யப்பட்டு ஜனாதிபதியினால் கௌரவிக்கப்பெற்ற எமது பாடசாலை ஆசிரியர்

**செல்வி மிக்கேல் அனிற்ரோலியம்மா**

அவர்களையும், மனதார வாழ்த்துவதோடு மேலும் பல உயர்வுகளைப் பெற்று சிறப்புற வாழ்த்துகின்றோம்

பாராட்டி வாழ்த்துவோர்:
பாடசாலைக் கல்விச் சமூகம், கிளி/பளை றோ.க.த.க. பாடசாலை



# மரண அறிவித்தல்

## *கனகசபை சின்னராசா (J.P)*



*[இளைப்பாறிய மாவட்ட முகாமையாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், சத்திய மொழி பெயர்ப்பாளர், செயலாளர்- மயிலணி நலன் புரி சங்கம்]*

நீர்வேலி வடக்கு, காமாட்சி அம்பாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் மயிலணியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை சின்னராசா நேற்று (09.10.2011) திங்கட்கிழமை முற்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவகுரு ஓவசியர் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், குமாரசுவாமி, வல்லிபுரம், செல்வநாயகம், நடராசா ஆகியோரின் சகோதரனும், நடனேஸ்வரன் (லண்டன்), சிவனேஸ்வரன்(நேசன்-அபிவிருத்தி உதவியாளர், கோட்டக் கல்வி அலுவலகம், தெல்லிப்பழை), சியாமளா ஆகியோரின் அன்புத் தந்தையும், புனிதவதி(லண்டன்), கவிதா(ஆசிரியை, கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), சுதாகரன்(யா/ விக்டோரியாக் கல்லூரி, சுழிபுரம்) ஆகியோரின் அன்பு மாமனும், தமிழினி, சாருகா, சாரிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2011) திங்கட்கிழமை பி.ப 3 மணியளவில் சுன்னாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஈஸ்வர வாசம்'
மயிலணி, சுன்னாகம்.

தகவல்:
*குடும்பத்தினர்.*


## கணினி நூலக நிலையம் திறப்பு

தென்மராட்சி, ஒக்.10

உசன் இராமநாதன் மகாவித்தியாலத்தில் அமைக்கப்பட்ட கணினி நூலக நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

லண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலய பரிபாலன சபையினர் வைத்திய கலாநிதி வே.பரமநாதன் ஆகியோரின் நிதி உதவியுடன் கணினி நூலக நிலையம் அமைக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் சி.மனோகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நூலக நிலையத்தை ஓய்வு பெற்ற பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.மாணிக்கம் திறந்து வைத்துள்ளார்.

இந்த நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜ மூர்த்தி, லண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் சி.பிரேமச்சந்திரா ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-207)


### Personal Class

தரம் 6 - A/L வரையான மாணவர்களுக்கு English Personal Class உம் Spoken with Grammar கற்கவிரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். [அனுமதி மட்டுப்படுத்தப்பட்டவை]
தொடர்பு: பருத்தித்துறை வீதி, நல்லூர். தொ.பே. 077 2734184
(பிரபல ஆசிரியர்)

### தேவை

யாழ். நகரிலுள்ள உணவகம் ஒன்றுக்கு சமையல் உதவியாளர் தேவை
தொ.பே: 0771751495

### கார் விற்பனைக்கு

நியம நிலையில் உள்ள *TOYOTA Carina* கார் விற்பனைக்கு உண்டு. மாலை 5 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும்
**077 1397969**


### தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை கேள்வி கோரல்

"எம்மால் கோரப்பட்ட *RDA/DGM/N/JAF/VEMPIRAI/2011/184* இலக்கமுடைய கேள்வி கோரல் முடிவுத் திகதி எதிர்வரும் 18.10.2011 மு.ப 10.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது. கேள்வி திறக்கப்படும் நேரம் முற்பகல் 10.30 மணியாகும்"

பிராந்திய முகாமையாளர்,
யாழ்ப்பாணம்.


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



தென்மராட்சிக் கல்வி வலயத்தால் நல்லாசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தேசிய மட்டத்தில் பிரதீபா பிரபா விருதுபெற்ற எமது பாடசாலை ஆசிரியர்

**திருமதி கிருபாலினி அமிர்தகுலசிங்கம்**

அவர்கள் கடந்த 06.10.2011 அன்று அலரி மாளிகையில் ஜனாதிபதி விருது விழாவில் கௌரவம் பெற்றதையிட்டு பாராட்டுவதோடு அவர் இன்னும் பல வளங்கள் பெற்று சிறப்புற வாழ்வதற்கு வாழ்த்துகின்றோம்

பாடசாலைச் சமூகம்,
யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திருமதி வேதநாயகி பேரின்பநாதன்**
B.Sc.,Dip.in.Ed., M.A., (P.Ad.), SLPS1

தேசிய மட்டத்திலான சிறந்த அதிபர் கௌரவிப்பு நிகழ்வில் பிரதீபா பிரபா உயர் விருதைப் பெற்றுக்கொண்ட எமது யா/ யாழ்.இந்து மகளிர் கல்லூரி அதிபர்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு,
மேலும் எமது கல்லூரியில் இருந்து ஆசிரியர்களுக்கான உயர் விருதைப் பெற்றுக்கொண்ட



**செல்வி நந்தினி சிவசோதி** B.Sc, Dip.in.Ed.



**செல்வி கமலா விநாசித்தம்பி**
Sc.Trd, B.A.,PGDE (merit)

அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு, இவர்கள் மேலும் பல விருதுகள் பெற்று கல்வித்துறைக்கு அளப்பரிய சேவையாற்ற வேண்டுமென பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம், யா/ யாழ்.இந்து மகளிர் கல்லூரி



# நீர விழிகளுடன் இரண்டாண்டு

பூவாக
14.06.1952

சருகாக
02.10.2009

**திருமதி**
**இரத்தினபூபதி - உருத்திரன்**

திதி: சதுர்த்தசி



இரண்டு ஆண்டென்ன எத்தனை ஜென்மமானாலும்
என் தாயைப் போல காண்போமா?
கண்ணுக்குள் வைத்துக் காத்த மனைவியே!
அரவணைத்த என் அன்பு மாமியே
கண்ணுக்குள் கண்மணிபோல எம்மை வைத்தாயே
கண்ணீருடன் நிற்கின்றோம் உம்மைப் பிரிந்து
எம் இதயத்தினுள் தெய்வமே என்றும்
உங்களை மறக்க முடியாதம்மா.

உம் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

பூபதி அகம், காளி கோயிலடி
நீர்வேலி வடக்கு, நீர்வேலி



# இலவசம்.....இலவசம்.....இலவசம்....

இலங்கையில் முதன் முறையாக நவீன இயந்திரங்களின் உதவியுடன் கரிஷ்மா அல்பத்தினை **(With out cover)** இலவசமாக கட்டி பெற்றுக்கொள்ளலாம்.
பிரதியாக்கங்களிற்கு மட்டுமே பணம் செலுத்தினால் போதும்.






Befor : Rs. ~~50000~~ After : Rs.10000

**மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்**
62/17,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.
தொ.இ. 021 222 1358



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**அழகேசன் பிரதீபன்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 06.10.2011 அன்று இடம்பெற்ற 27 ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (B.A Hons.) பட்டம் பெற்ற அழகேசன் பிரதீபன் அவர்களைப் பாராட்டுவதோடு மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
ஐங்கர் குறூப், மீசாலை

36/3, ஏகாம்பரம் வீதி, மீசாலை.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தேர்தல் வெற்றியை அரசாங்கம் தொலைநோக்குடன் பயன்படுத்துமா?

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற மூன்றாம் கட்டத் தேர்தலில் ஆளும் கட்சி, அரச தரப்பு அமோக வெற்றி ஈட்டியுள்ளது. தலைநகர் கொழும்பையும் உள்ளடக்கியுள்ள கொழும்பு மாநகர சபையைக் கைப்பற்றுவதற்கு மேற்கொண்ட முயற்சி மட்டும் அதன் கைக்கு எட்டவில்லை.

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த இரு குழுமங்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல்களால் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் மற்றும் இருவரும் உயிரிழக்க நேர்ந்தது. அத்தோடு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் அவரது ஆதரவாளர்களும் படுகாயமுற்றனர்.

எப்படியோ, பெரும்பான்மை இனச் சகோதரர்கள் அரசாங்கத்துக்கு அமோக ஆதரவளித்துள்ளார்கள். நடைபெற்றது உள்ளூராட்சி சபைத் தேர்தலாக இருந்தபோதிலும், அது நாடாளுமன்றத் தேர்தல் போன்று ஆக்கப்பட்டு மிகுந்த போட்டியுடன் நடைபெற்றது என்றே கணிக்கப்பட வேண்டும்.

ஆகையால், தென்னிலங்கை மக்களில் மிக மிகப் பெரும்பாலானோர், ஆட்சியில் உள்ள அரசாங்கத்தின் திட்டங்களையும் செயற்பாடுகளையும முழு அளவில் ஆதரிக்கிறார்கள் என்று பிசிறின்றிக் கொள்ளலாம். அதுவே இன்றைய மக்கள் ஆதரவு யதார்த்தம் என்பதனைப் புறக்கணிக்கவும் முடியாது.

இத்தகைய ஒரு பின்னணியில், பின்புலத்தில் இனப்பிரச்சினைக்கான உகந்த தீர்வு ஒன்றைக் காண்பதில் அரசு ஆக்கபூர்வமான திசையில் கால்பதிக்க வேண்டும். நாட்டின் இனப்பிரச்சினை கடந்த ஆறு தசாப்த காலமாக தீர்க்கப்படாத ஒன்றாக நீண்டு, நெளிந்து, வளைந்து செல்கிறது. தமிழ் மக்களுக்கு, தமிழ் பேசும் மக்களுக்கு அவர்தம் உரிமைகளை அரை, கால் என்று கணக்குப் பார்க்காமல், தனது விருப்பு வெறுப்புகளை முன்னிறுத்தாமல், நியாயத்தின் வழிநின்று, நீதியின் பாற்பட்டுத் தீர்ப்பதற்கு அரசு மனங்கொள்ள வேண்டும். இவ்வேளை, அதற்கான நல்ல, உரிய சந்தர்ப்பம் எனவும் கருதலாம்.

எதிர்கால வாக்கு வங்கியை மட்டும் முன்னிறுத்தாமல், தூர நோக்குடனும் தூய சிந்தனையுடனும் நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு நீண்ட காலப் பிரச்சினையை அணுகுவதற்கான அரிய வாய்ப்பு உண்டாகி இருப்பதாக, அரசு ஏன் கருதக்கூடாது?

எத்தனை எதிர்க்கட்சிகள் சேர்ந்தாலும் இந்த ஆட்சியை எள்ளளவும் உலுப்பமுடியாது என்றாகியுள்ள பரிமாணத்தை, ஆக்கபூர்வமான செயற்பாட்டுக்குப் பயன்படுத்தி, நிலையான இன ஒற்றுமையை உருவாக்குவதற்கான பொருத்தமான, சாதகமான காலம் வந்திருக்கிறது என்று ஜனாதிபதியும் அரசும் மனங்கொள்வதற்குத் தக்க தருணம் இது.

இந்த நாடு அபிவிருத்தி அடைவதற்கும், பொருளாதார வளம் சிறந்து, அதனூடு மக்கள் வாழ்க்கை நிலை உயர்வதற்கும், இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பது பெரும் தடைக்கல்லாக இருக்கிறது என்பதனை, அரசாங்கம் புரிந்தும் புரியாதது போல், தெரிந்தும் தெரியாதது போல் செயற்படுவதற்கான போக்கை நிறுத்தும் காலம், மாற்றிக் கொள்ள வேண்டிய காலம் நெருங்கிவிட்டது.

இந்த நாட்டில் வாழும் சகல இன மக்களும் தமக்குரிய உரிமைகளுடன் சகவாழ்வு வாழ்வதற்கான சூழலை உருவாக்கக் கூடிய சக்தியையும் பலத்தையும் நடந்து முடிந்த தேர்தல் மூலம் இன்றைய அரசுக்கு தென்னிலங்கை மக்கள் வழங்கியுள்ளார்கள் என்பதனை மறைக்க முடியாது.

நாட்டின் முதன்மைப் பிரச்சினையான இனவிவகாரத்தை துடைத்து, நாட்டில் ஒற்றுமையையும் சௌஜன்யத்தையும் துளிர்விடச் செய்வதில் அரசு மாசற்ற மனது வைத்தால் மூவின மக்களின் ஆதரவு பெருகும். எதிரணிகளோ, தீவிரவாதப் போக்குடையவர்களோ அந்த ஆதரவை சரிக்க முயன்றாலும், அது பெரிய அளவில் சித்திக்காது.

சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசுக்கு அபகீர்த்தி முளைவிட்டுத் துளிர்த்து வரும்வேளையில், நீதி வழி சென்று இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதன் மூலம் அதனைத் தடுக்க முடியும் என்பதனை ஜனாதிபதியும் அவரது அரசும் கருத்தில் கொள்ளக் கூடாதா?

போரும் அதன் விளைவுகளும் - கொடுமைகளும் - இப்போது சர்வதேச மயப்பட்டுவிட்டன என்பதனை மறந்து செயற்படும் காலம் அல்ல இவ்வேளை. உள்நாட்டின் இனவாத சக்திகளால் உண்டாகக் கூடிய சங்கடங்களை அல்லது அரசியல் நட்டங்களை முன்னிறுத்திச் செயற்பட்டால், இப்போதுள்ளதைவிட சர்வதேச நெருக்கடிகள் மேன்மேலும் வலுக்கும் என்பது எவரும் புரிந்துகொள்ளக்கூடிய ஒன்றே.

இவற்றைக் கூட்டிப் பெருக்கிப் பிரித்து மனதில் கொண்டு, ஜனாதிபதியும் அவரது அரசும் செயற்படுத்துவதற்கு முன்வந்தால் என்ன?

மேலே குறிப்பிட்டது போன்று, ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், (மூன்று கட்ட) உள்ளூராட்சித் தேர்தல் என்று சகல தேர்தல்களிலும் தென்னிலங்கையில் மிகு அமோக வெற்றிவாகை சூடி, அசைக்க முடியாத மக்கள் பலத்தை தனதாக்கிக் கொண்டுள்ள அரசு, மனது வைத்தால் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றைக் காண்பது இயலாத காரியம் அல்ல.

தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை கபடமற்ற விதத்தில் கவனத்தில் கொண்டு, தீர்த்து வைப்பதற்கு அரசுக்குக் கிடைத்த வாய்ப்பை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தி, உளத்தூய்மையுடன் செயற்பட அது முன்வருமா?

தனக்குக் கிடைத்த வெற்றியை முதலாகக் கொண்டு தொலைநோக்குடன், எல்லாம் நன்மைக்கே (Optimistic) என்ற சிந்தனையுடன் செயற்பட்டால், அது சாத்தியமாவது வெறும் கற்பனை என்றாகிவிடாது. அந்தத் திசையில் அரசு முதலடி வைத்தால் நாட்டுக்கும் மக்களுக்கும் நல்ல காலம் பிறக்கும். நன்றே செய்வீர், அதனை இன்றே செய்வீர்!

# வடக்கில் இதுவரை 25 ஆயிரம் வீடுகள் உலக வங்கியின் நிதியில் நிர்மாணம்

## திட்டப்பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக்.10

உலக வங்கியின் நிதியுதவியில் வடமாகாணத்தில் 24 ஆயிரத்து 89 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 3, 072 வீடுகள் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அமைக்கப்பட்டுவரும் வீடுகள் யாவும் இந்த மாத இறுதிக்குள் கட்டி முடிக்கப்படவேண்டும். இல்லாவிடின் அவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படமாட்டா.

இவ்வாறு திட்டப் பணிப்பாளர் கே.தெய்வேந்திரம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

உலக வங்கியின் நிதியுதவியோடு வடக்கு கிழக்கில் வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கென 50 ஆயிரத்து 91 வீடுகள் அமைப்பதற்கு இனங்காணப்பட்டது. வடமாகாணத்தில் 27 ஆயிரத்து 392 வீடுகள் அமைப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

இதற்கான பயனாளிகள் தெரிவு 2004 ஆம் ஆண்டில் இருந்து 5 கட்டங்களாக இடம் பெற்று வந்தது. யாழ்.மாவட்டத்துக்கு 13 ஆயிரத்து 350 வீடுகளும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு 5 ஆயிரத்து 506 வீடுகளும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 2 ஆயிரத்து 920 வீடுகளும், வவுனியா மாவட்டத்துக்கு 2 ஆயிரத்து 143 வீடுகளும், மன்னார் மாவட்டத்துக்கு 3 ஆயிரத்து 473 வீடுகளும் ஒதுக்கப்பட்டிருந்தன.

இவற்றில் வடமாகாணத்தில் 23 வீடுகள் பயனாளிகளால் அமைக்கப்படாமையால் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் 47 வீடுகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 152 வீடுகளும், வவுனியா மாவட்டத்தில் ஒரு வீடும், மன்னார் மாவட்டத்தில் 31 வீடுகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு மாற்றி வழங்குமாறு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கோரிக்கையை முன்வைத்தார்.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் 11 ஆயிரத்து 908 வீடுகள், 4 ஆயிரத்து 237 வீடுகள், முல்லைத்தீவில் 2 ஆயிரத்து 588 வீடுகள், வவுனியாவில் 2 ஆயிரத்து 141 வீடுகள், மன்னாரில் 3215 வீடுகளுமாக மொத்தம் 24 ஆயிரத்து 89 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

வடமாகாணத்தில் 3 ஆயிரத்து 72 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அவை இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கட்டி முடிக்கப்படாவிட்டால் அவற்றுக்கான கொடுப்பனவுகள் வேறு எந்த திட்டத்தின் கீழும் வழங்கப்படமாட்டா- என்றார்.

பயனாளிகளுக்கு வீடமைப்பதற்கு தலா 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா 5 கட்டங்களாக வழங்கப்பட்டுள்ளன. (ம-15)

# 2011 இற்கான சமாதானத்துக்கான நோபல் பரிசு மூன்று பெண்களுக்கு

கொழும்பு, ஒக்.10

இந்த வருடத்துக்கான சமாதானத்துக்கான நோபல் பரிசு, பெண்கள் பாதுகாப்பு மற்றும் பெண்கள் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வந்த மூன்று பெண்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடான லைபீரியாவின் அதிபர் எலென் ஜோன்சன் சிர்லீஃப் (Elen Johnson Sirleaf), லைபீரியன் சமூக ஆர்வலர் லேய்மாஹ் க்போவீ (Leymah Gbowee) மற்றும் யேமனின் மனித உரிமை செயற்பாட்டாளர் டவக் குல் கர்மான் (Tawak kul Karman) ஆகியோருக்கு இந்த நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறையைக் கையில் எடுக்காது, பெண்களின் உரிமைகளுக்காகவும், பாதுகாப்புக்காகவும் பாடுபாட்டு, அமைதியைக் கட்டியெழுப்ப தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்கள் என நோபல் பரிசில் குழு அவர்களுக்குப் புகழாரம் சூட்டியுள்ளது.

இவர்களில் ஜோன்சன் சிர்லீஃப் (வயது-72) ஒரு வணிகவியலாளர் ஆவார். ஆபிரிக்காவில் ஜனநாயக முறையில் கடந்த 2005 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது பெண் தலைவர் ஆவார்.

மூன்று பிள்ளைகளின் தாயான யேமனியரான கர்மான் (32) மனித உரிமை செயற்பாட்டுக் குழுக்களிலும், எல்லைகளற்ற பெண்கள் ஊடகவியலாளர் அமைப்புக்களிலும் பங்கெடுத்துக்கொண்டதுடன், யேமனிய அதிபர் அல் அப்துல்லா சாலேஹ்வுக்கு எதிராக கடந்த ஜனவரியில் போராட்டத்தை ஆரம்பித்தவர்களில் முக்கியமானவராகத் திகழ்ந்தார்.

யேமனிய இளைய சமுதாயத்தின் புரட்சிக்காகவும், யேமனிய மக்களுக்காகவும் இந்த நோபல் பரிசை அர்ப்பணிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

எகிப்தின் முன்னாள் அதிபர் ஹோஸ்னி முபாரக்கிற்கு எதிராக பேஸ்புக் மூலம் மக்கள் புரட்சி ஒன்றை ஏற்படுத்திய இளைஞரான கோனிம் உட்பட மத்திய கிழக்கு நாடுகளின் மக்கள் புரட்சிகளுக்கு வித்திட்ட பல சமூக ஆர்வலர்கள் இம்முறை சமாதானத்துக்கான நோபல் பரிசுக்குப் பரிந்துரைக்கப்பட்டனர்.

எனினும் மத்திய கிழக்கு மற்றும் அரபு நாடுகளில் மக்கள் புரட்சி ஏற்படுவதற்கு நீண்ட நாள்களுக்கு முன்னர் இருந்தே கர்மான் போராடி வந்ததாக நோபல் பரிசில் குழு தெரிவித்துள்ளது.

பரிசில் பெற்றவர்களில் மற்றொருவரான, க்போவீ, லைபீரிய நாட்டு போர் வீரர்களுக்கு எதிராக கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமியப் பெண்களை ஒன்றிணைத்து, போராட்டம் நடத்தியவர்.

இன, மத எல்லைகளைக் கடந்து பெண்களை ஒன்று திரட்டிப் போராடச் செய்ததன் மூலம், லைபீரியாவின் நீண்ட நாள் போரை முடிவுக்குக் கொண்டுவரப் பாடுபட்டவர் என்பதுடன், தேர்தலில் பெண்களின் பங்கேற்பையும் உறுதி செய்தார்.

# தலைவருக்கு முகவரியிட்டு அனுப்பப்படாத கடிதங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.10

உள்ளூராட்சி சபை தேர்தலின் பின்னர் சபை உருவாகிய வேளையிலும் சபைத் தலைவர்களுக்கு முகவரியிட்டு கடிதம் வரையப் படுவதில்லை. உண்மையில் இது மனவேதனை தரும் விடயம்.

பூநகரிப் பிரதேச சபைத் தலைவர் பொ.சிறீஸ்கந்தராசா இவ்வாறு தெரிவித்தார்.

சபைகளின் பிரதான நிறைவேற்று அதிகாரி சபைச் செயலாளர். ஆனால் உள்ளூராட்சி சபை தேர்தலின் பின்னர் சபை உருவாகியபோது தலைவர்களுக்கு முகவரியிட்டு கடிதம் வரைவதே சிறந்தது.

வடக்கு மாகாண சபை கடிதங்களும் சபை உருவாகிய பின்னர் சபை செயலாளர் முகவரிக்கே வருகின்றன.

தலைவர், செயலாளர் என்ற வகையில் முகவரியிட்டாவது கடிதங்களை அனுப்ப வேண்டும் என்று பூநகரி பிரதேச சபை தலைவர் பொ. சிறீஸ்கந்தராசா தெரிவித்தார்.

(ம-302)

# வீதிகளைப் புனரமைக்க ரூ.18 மில்லியன் ஒதுக்கீடு செய்தது நல்லூர் பிரதேச சபை

யாழ்ப்பாணம், ஒக்.10

நல்லூர் பிரதேச சபை தனது நிதியில் இருந்து 18 மில்லியன் ரூபா செலவில் வீதி புனரமைப்புக்களை முன்னெடுக்கவுள்ளது.

இதேவேளை, வீதி அபிவிருத்தித் திணைக்களமும் வீதி அபிவிருத்தி அதிகார சபையும் இந்தப் பகுதிக்குட்பட்ட தத்தமது கண்காணிப்பில் உள்ள வீதிகளைத் திருத்தியமைக்கவும் பிரதேச சபை சபையின் அபிவிருத்தி தொடர்பான கூட்டத்தில் ஒப்புக் கொண்டுள்ளன.

நல்லூர் பிரதேச சபையின் அபிவிருத்தி தொடர்பான திணைக்களத் தலைவர்கள் அடங்கிய ஆலோசனைக் கூட்டம் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் கடந்த வியாழக்கிழமை பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் முக்கிய விடயமாக டெங்கு ஒழிப்புத் திட்டம் கவனத்தில் எடுக்கப்பட்டது.

பிரதேசப் பகுதியில் உள்ள டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அவதானித்து அந்தப் பகுதிகளில் சுகாதாரப் பகுதியின் அனுசரணையுடனும் சிரமதானம் மேற்கொள்ளவும் மக்கள் மத்தியில் இது குறித்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மழை ஆரம்பமாகவுள்ளதால் டெங்கு பரவுவதைத் தடுக்கும் முகமாகத் துரித கதியில் இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்தவும் ஆலோசிக்கப்பட்டது.


பிரதேச சபை எல்லைக்குள் மேற்கொள்ளப்படும் வீட்டுத் திட்டங்களை விரைவில் முடிக்கக் கூடியதாக வீடுகள் தொடர்பான வரைபடங்களைத் தாமதமின்றிப் பரிசீலனை செய்து உரிய அனுமதிகளை வழங்கவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

சபையின் நிதியில் இருந்து உதவியற்ற குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கி அவர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை கொள்வனவு செய்து சந்தைப் படுத்தவும் இதில் ஆலோசிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலக உத்தியோகத்தர் வீதி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் சுகாதாரத் திணைக்களம் ஆகியவற்றின் பிரதி நிதிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ம-7)

# திருடப்பட்ட பிள்ளையார் விக்கிரகம் யாழ். முத்திரைச் சந்தையில் சிக்கியது

## இரு சந்தேக நபர்களுக்கும் விளக்கமறியல்



யாழ்ப்பாணம், ஒக்.10

ஐம்பொன்னிலான பிள்ளையார் விக்கிரகத்தைக் கடத்திக் கொண்டு சென்ற சந்தேக நபர்கள் இருவரை யாழ். குற் றத் தடுப்புப் பொலிஸார் முத்திரைச் சந்தைப் பகுதியில் வைத்து மடக்கிப் பிடித்துள்ளனர்.

சுதுமலையைச் சேர்ந்த முத்துராசா நந்தன், சாவற்கட் டைச் சேர்ந்த அந்தோனிப் பிள்ளை ஜேசுரட்ணம் ஆகி யோரே பிடிபட்ட சந்தேக நபர் களாவர்.

சாக்குப்பை ஒன்றில் விக்கிரகத்தைச் சுற்றி மறைத்து சைக்கிளில் எடுத்துச் சென்ற போதே அவர்கள் சிக்கிக் கொண்டனர். முழங்காவில் பகுதியிலுள்ள ஆலயம் ஒன்றிலிருந்து இந்த விக்கிரகம் திருடப்பட்டதாக விசாரணை மூலம் தெரியவந் துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை சந்தேக நபர்கள் இருவரும் யாழ். மேலதிக நீதிவான் அ.பிறேம்சங்கர் முன்னிலை யில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான் 14 நாள்களுக்கு விளக் மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

நீதிமன்றின் உத்தரவின் பேரில் பிள்ளையார் விக்கிரகம் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

# இராணுவ வாகனச் சாரதிக்கு ஒரு வருட கடூழியச் சிறை

தென்மராட்சி, ஒக்.10

இராணுவ வாகனங்கள் இரண்டு ஒன்றுடன் ஒன்று மோதிய வேளையில் ஒருவர் பலியானது தொடர்பாக வாகன சாரதிக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. கடந்த 2011 நவம்பர் மூன்றாம் திகதி சாவகச்சேரி கண்டி வீதியில் இரு வாகனங்கள் மோதிக் கொண்டதில் ஒருவர் பலியானார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வந்தது.

இந்த வழக்கு கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

விளக்கம் முடிவுற்ற நிலையில் இராணுவ வாகனச் சாரதிக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்த நீதிவான் மா.கணேசராஜா எதிரியின் கை விரல் அடையாளங்களை எடுக்குமாறு நீதிமன்ற பொலிஸ் உத்தியோகத்தருக்கு உத்தரவிட்டார். (த-207)

## ஆரோக்கியமான எதிர்காலம்...



வளமான வாழ்வுக்கு: கடந்த ஒருவார காலப்பகுதி சுகாதார அமைச்சால் தேசிய சுகாதார வாரமாகப் பிரகடனப்படுத் தப்பட்டுள்ளது. இதனையொட்டி வேலணை பிரதேச செயலகத்தில் கடந்த புதன்கிழமை சிரமதானம் மேற்கொள்ளப்பட் டது. பிரதேச செயலக உத்தியோ கத்தர்கள் செயலக வளவைத் துப்புரவு செய்கின்றனர். (த-167)

# சிறுவர் பாடசாலைக் கதவுகளின் பித்தளைப் பொருள்கள் திருட்டு

வடமராட்சி, ஒக்.10

சிறுவர்-பாடசாலை இயங்கி வரும் மாடி வீடு ஒன்றில் இரவு வேளையில் கதவுகளின் பூட்டுக்கள், பிணைச்சல்கள் உள்ளிட்ட பித்தளைப் பொருள்கள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் மந்திகை குரும்பசிட்டி வீதிக்கு அருகில் உள்ள மாடி வீடொன்றில் நடைபெற்றுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் இரவு வேளைகளில் இந்த மாடி வீட்டில் உள்ள 17 கதவுகள், ஜன்னல்களில் உள்ள பித்தளைப் பூட்டுக்கள், கொழுவிகள் உள்ளிட்ட 6 ஆயிரம் ரூபா பெறுமதியான பித்தளைப் பொருள்கள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளதாக இந்த வீட்டின் பராமரிப்பாளர் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பருத்தித் துறைப் பொலிஸார் நேரில் வந்து பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-236)

# கருவாடு பதனிடும் நிலையத்துக்கு வேலணை துறையூரில் அடிக்கல்



யாழ்ப்பாணம்,ஒக.10

வேலணை பிரதேச செயலகப் பிரிவான துறையூரில் கருவாடு பதனிடும் நிலையம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

ஜப்பான் நாட்டின் 'பாசிக்' நிறுவனம் பத்து லட்சம் ரூபா செலவில் இதற்கான கட்டடத்தை அமைக்கவுள்ளது.

இக்கட்டடத்துக் கான அடிக் கல்லை கடந்த வியாழக்கிழமை வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், பாசிக் நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் பி.ஜே. அஜித் ஆகியோர் நட்டு வைத்தனர்.

பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பத்தினருக்கான வாழ்வாதார உதவியாக சுகாதார முறைகளுடனும் நவீன தொழில் நுட்பத்துடனும் கூடியதாக அமையவுள்ள இந்தக் கருவாடு பதனிடும் நிலையச் செயற்பாடுகளுக்காக 'ஜெய்கா' நிறுவனம் நிதி உதவிகளை வழங்கவுள்ளது.

புதிய கட்டடம் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இயங்க ஆரம்பிக்கும். கருவாடு பதனிடும் நிலையத்துக்கு இந்தப் பகுதியில் உள்ள மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களில் ஒருதொகையை வழங்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் துறையூர் கிராம கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சமாசத்தின் தலைவர் சி.கார்த்திகேசு உட்படப் பலர் கலந்துகொண்டனர். (த-7)

# ஸ்ரான்லி வீதியில் நெருக்கடி நிலை எப்போது தீரும்?

வண்ணை, ஒக்.10

யாழ்.ஸ்ரான்லி வீதியில் கிழமை நாள்களில் போக்குவரவு செய்ய முடியாதளவுக்கு நெருக்கடிகள் தோன்றுவதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமை வின்ஸர் சந்திக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே அதிகமாகக் காணப்படுகின்றது.

இந்தப் பகுதியில் வீதியின் இருபக்கங்களிலும் வாகனங்கள் தினமும் நிறுத்துவதற்கு அனுமதிப்பதாலே தோன்றுகிறது.

ஒருநாள் ஒருபக்கம் என்ற அடிப்படையில் வாகனங்களை நிறுத்துவதற்கு அனுமதித்தால் நெருக்கடியை நீக்கலாமென கூறப்படுகிறது.

கனரக வாகனங்களில் பொருள்களை வர்த்தக நிலையங்களுக்கு எடுத்து வந்து இறக்குவதும் வர்த்தக நிலையங்களில் கொள்வனவு செய்த பொருள்களை வாகனங்களில் எடுத்துச் செல்வதும் ஒருங்கே நடைபெறுவதால் நெருக்கடி நிலைகள் ஏற்படுவதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-160)

# அராலி ஊரத்தி, சங்கானை மக்களுக்கு காணி உறுதிகள் வழங்க நடவடிக்கை

## வலி.மேற்குப் பிரதேச சபைக்கு அதிகாரம்

யாழ்ப்பாணம், ஒக்.10

அராலி ஊரத்தி- சங்கானை மத்தியில் கடந்த 50 வருடங்களாகக் குடியமர்ந்துள்ள மக்களுக்குக் காணி உறுதி வழங்கும் அதிகாரம் வலி.மேற்குப் பிரதேச சபை தலைவருக்கு உண்டு.

இதற்கான விசேட தீர்மானம் நிறைவேற்றி அடுத்த சபை கூட்டத்தில் காணி உறுதி வழங்கும் நடவடிக்கைக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

இவ்வாறு வலி. மேற்கு பிரதேச சபை அரச தரப்பு உறுப்பினர் சிவகுரு பாலகிருஷ்ணன், வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வலி.மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் பிரதேச செயலர் ஆகியோர் இணைந்து கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் சங்கானை மத்தியில் உள்ள 35 குடும்பங்களுக்கும் அராலி ஊரத்தியில் உள்ள 35 குடும்பங்களுக்கும் காணி வழங் குவதற்கான கோவைகளை முழுமைப்படுத்தியுள்ளனர்.

அத்துடன் காணி தொடர்பான ஆணையாளர்களுடனும் உள்ளூராட்சி அமைச்சுடனும் தொடர்பு கொண்டு இந்தக் குடும்பங்களுக்குக் காணி உறுதி வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

உள்ளூராட்சித் தேர்தலை அடுத்து இந்தப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

தற்போது அராலி- சங்கானை ஆகிய பிரதேசங்களில் உள்ள மக்களின் காணிப் பிரச்சினையை சபை கூட்டங்களில் தீர்மானம் நிறைவேற்றி சபைத் தலைவர் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.- என்று தெரிவித்தனர். (ம-302)

# போத்தல் அடைப்புத் தொழிற்சாலையை வேலணையில் அமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.10

போத்தல் அடைப்புத் தொழிற்சாலையை வேலணைப் பிரதேசத்தில் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாகவடமாகாணபனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் த.சிவலிங்கம் தெரிவித்தார்.

வடமாகாணபனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் சனிக்கிழமை சமா சக் கட்டடத்தில் 89 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா மற்றும் கௌரவிப்பு விழா இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு தலைமையுரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்த தாவது:

பனை, தென்னை வளத்தை யாழ். மாவட்டத்தில் மேம்படுத்துவதற்கு உற்பத்திப் பொருள்களை இலகுவில் சந்தைப் படுத்த வேண்டிய தேவையுள்ளது.

இதனால், வேலணை சங்கத்தின் உதவியுடனும் ஏனைய சங்கங்களின் ஒத்துழைப்புடனும் சமாசம் வேலணைப் பிரதேசத்தில் மிக விரைவில் போத்தல் அடைப்பு தொழிற்சாலையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.- என்றார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவும் கௌரவ விருந்தினர்களாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ப. சீவரத்தினம், யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் இ.பாலச்சந்திரன், யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் இ.இராஜாராம், பனை அபிவிருத்திச் சபை பொதுமுகாமையாளர் எம்.பி. லோகநாதன், யாழ். கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் இ.விஜயமோகனராசா, வலிகாமம் கொத்தணித் தலைவர் செ.செல்வராசா, தென்மராட்சிக் கொத்தணித் தலைவர் சீ. பாலசிங்கம், வடமராட்சி கொத்தணித் தலைவர் சி.சிவகுமார் யாழ். மாவட்ட ப.தெ.வ. அ.கூட்டுறவு நிறுவனங்களின் சங்கத் தலைவர் சி.குணரத்தினம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் 2009, 2010 ஆம் ஆண்டுகளில் தரம்- 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் சிறந்த அங்கத்தவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் 89 ஆவது கூட்டுறவு தின விழா போட்டி வெற்றியாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றன.

அத்துடன் 89 ஆவது கூட்டுறவு தினத்தை முன் னிட்டு விசேட நிகழ்வாக சங்கங்களால் அமைக்கப்பட்ட வீடுகளின் திறப்புகளும் உரிய அங்கத்தவர் களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-313)

## செயற்கை அவயவம் 666 பேர் பயன்பெற்றனர்

யாழ்ப்பாணம், ஒக்.10

இந்திய துணைத் தூதரகத்தின் அனுசரணையுடன் வட மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் கோண்டாவில் பிரதேச வைத்தியசாலையில் இடம் பெற்ற ஜெய்ப்பூர் செயற்கை அவயவங்கள் பொருத்தும் நிகழ்வில் 666 பேர் பயன்பெற்றுள்ளனர்.

இந்தியா ஜெய்ப்பூர் நிறுவனத்தைச் சேர்ந்த வைத்தியர்கள், செயற்கை அவயவங்களைத் தயாரிப்போர் நேரடியாக வந்து மேற்கொண்ட இந்தச் செயற்கை அவயவங்கள் பொருத்தும் நிகழ்வு கடந்த மாதம் 3 ஆம் திகதி முதல் தொடர்ந்து 27 தினங்கள் இடம்பெற்றது.

இதில் 666 பேருக்கு 1124 செயற்கை அவயவங்கள் பொருத்தப்பட்டன என்று தகவல் கூறப்பட்டது. (ம-313)

# 3 குற்றச்சாட்டில் மூளாய்வாசிக்கு இரு வருடங்களுக்கு கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், ஒக்.10

மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு குற்றவியல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மூளாயைச் சேர்ந்த நபர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதை அடுத்து அவருக்கு இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனை உட்பட ஏக காலத்தில் பல தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன.

2003 ஆம் ஆண்டு டிசெம்பர் மாத காலப்பகுதியில் அதே இடத்தைச் சேர்ந்த நபர் ஒருவரைக் கொலை செய்யும் நோக்கில் ஏழு பேர் சட்ட விரோதமாக ஒன்று கூடியமை, பிரஸ்தாப நபரைத் தாக்கியமை மற்றும் கொலை செய்ய முயன்றமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள் குறித்து ஏழு பேர் மீது சுமத்தப்பட்டு வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் அவர்கள் 2003 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டனர். மல்லாகம் நீதிவான் நீதிமன் றில் ஏழு பேரும் ஆஜர்படுத்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக 2005 ஜூன் மாத காலப் பகுதியில் யாழ். மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது.

விசாரணைகளின் போது ஏழு பேரும் குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட்டது. அவர்களில் ஆறுபேர் நீதிமன்றில் ஆஜரானதையடுத்து அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டது. மூளாய் தெற்கைச் சேர்ந்த மற்றைய நபர் தலைமறைவாகி யிருந்தார்.

அவரைக் கைது செய்யும் படி யாழ். மேல்நீதிமன்றால் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு நீதிவான் பிடியாணை பிறப்பித்திருந்தார். இரண்டு வருடங்கள் கழிந்த நிலையில் சந்தேக நபரைப் பொலிஸார் கைது செய்து யாழ். மேல் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். இதன் போது முன்னர் 6 பேருக்கு வழங்கிய தண்டனையை ஏழாவது நபருக்கு நீதிவான் விதித்தார்.

அதன்போது சட்டவிரோதமாக ஒன்று கூடிய குற்றத்துக்காக 6 மாத சாதாரண சிறைத் தண்டனையும், பிரஸ்தாப நபரைத் தாக்கிய குற்றத்துக்காக இரண்டு வருட கடூழிய சிறைத்தண்டனையும் கொலை செய்ய முயன்ற குற்றத்துக்காக இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனையும் ஏழு பேருக்கும் விதிக்கப்பட்டிருந்தது. இவற்றை ஏக காலத்தில் அனுபவிக்க முடியும் எனவும் நீதிவான் உத்தரவிட்டார். எனினும் ஏழாவது நபர் தலைமறைவாகி யிருந்த குற்றச்சாட்டில் அரச செலவாக ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்தும் படியும் தவறின் 3 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்கும் படியும் பாதிக்கப்பட்ட நபருக்கு நஷ்டஈட்டுத் தொகையாக 70 ஆயிரம் ரூபா செலுத்தும்படியும் தவறின் இரண்டு வருட சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்கும் படியும் நீதிவான் உத்தரவிட்டார். (த-4)



தீவக கல்வி வலய ஆசிரியர்களால் மனம் மாறிய மன்னர்கள் வடமோடி நாட்டுக்கூத்து சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் ஆற்றுகை செய்யப்பட்டது. வட்டக்களரி முறையில் இடம்பெற்ற இந்த நாட்டுக் கூத்தை வலய ஆசிரியர்களும் மாணவர்களும் பார்வையிட்டனர். (ம-38)

## வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளில் விளையாட்டு சாதனங்கள் அமைப்பு

### சிறுவர் பாதுகாப்பு நிதியம் உதவி

யாழ்ப்பாணம், ஒக்.10

வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கான பொழுதுபோக்கு சாதனங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் கட்டட திருத்த வேலைகளும் இடம்பெற்று வருகின்றன.

வடமராட்சி கிழக்கில் போரால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி, திருத்த வேலைகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

செம்பியன்பற்று தமிழ்க்கலவன் பாடசாலை, மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, ஆழியவளை பாடசாலை, கேவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கட்டைக்காடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-319)

## தேசிய பாடசாலையாக நெல்லியடி ம.ம.வித்தி.

யாழ்ப்பாணம்,ஒக்.10

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான கடிதம் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.குணசேகரவால் ஒப்பமிடப்பட்டு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் உள்ள நான்கு மத்திய மகா வித்தியாலயங்களில் ஒன்றான நெல்லியடி மகா வித்தியாலயம் தேசிய பாடசாலையாக முயர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-319)

# பழைய பூங்காவில் புதிய கட்டடங்கள்; கைமாறியது மேற்பார்வைப் பொறுப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.10

யாழ்.மாவட்டத்தின் மத்தியிலுள்ள பழைய பூங்காவில் அமைக்கப்பட்டு வரும் யாழ். பிரதேசசெயலகத்துக்கான கட்டடம் மற்றும் பயிற்சி நிலையம் ஆகியவற்றை மேற் பார்வை செய்யும் பொறுப்பை மீளவும் மாகாண கட்டடத் திணைக்களம் ஆளுநரின் உத்தரவுக்கு அமைய பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

யாழ். நகரில் அமைந்துள்ள பழைய பூங்காவில் யாழ். பிரதேச செயலகத்துக்கான நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணி இடம்பெற்று வந்தது.

அத்துடன் அதற்கு அருகில் பயிற்சி நிலையம் அமைக்கும் பணியும் இடம்பெற்று வந்தது.

வழமையாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் யாழ்ப்பாணத்தில் கட்டப்படும் பெரும்பான்மையான கட்டடங்கள், மாகாண கட்டடத் திணைக்களத்தின் மேற்பார்வையிலேயே நடைபெறுவது வழமையாகும்.

இதனடிப்படையில் மேற்படி இரண்டு கட்டடங்களும் மாகாண கட்டடத் திணைக்களத்தின் மேற்பார்வையில் கட்டப்பட்டு வந்தன.

பயிற்சி நிலையத்தின் முதலாம் மாடிக் கட்டடப் பணிகள் முடிவுற்ற நிலையில் பிரதேச செயலக கட்டடத்துக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் மாகாண கட்டடத் திணைக்களம் குறித்த மேற்பார்வை பணியிலிருந்து விலகியது.

இது தொடர்பாக 21 ஆம் திகதி செப்ரெம்பர் மாதம் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியின் உத்தரவுக்கு அமைய கட்டடங்கள், திணைக்களம் குறித்த மேற்பார்வை செய்யும் பணியிலிருந்து விலகுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் பழைய பூங்கா மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளதாலேயே விலகுவதாக கட்டடங்கள் திணைக்களம் கடிதம் மூலம் அறிவித்துள்ளமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் பின்னர் பழைய பூங்காவை மக்கள் பாவனைக்குத் திறந்து விடுவதற்காகக் கடந்த மாதம் 28 ஆம் திகதி அதன் சுற்றுப் புற மதில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் உத்தரவுக் கமைய இடித்தழிக்கப்பட்டது.

இந்த நிலையில் மாகாண கட்டடத் திணைக்களம் கடந்த 3 ஆம் திகதி அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மீண்டும் குறித்த வேலைகளை மேற்பார்வை செய்யும் பொறுப்பை ஆளுநரின் உத்தரவுக்கு அமைய மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை மாகாண கட்டடத் திணைக்களம் குறித்த வேலைகளைக் கைவிட்ட பின்னர் மாவட்ட செயலக பொறியியலாளர் குழு அதனை மேற்பார்வை செய்தமை குறிப்பிடத்தக்கது. (ம-15)

# பொது வைபவங்களில் சிறுவர் கலை நிகழ்வுகள் புறக்கணிக்கப்படுவது கண்டிக்கத்தக்க செயல்

## ஆதலால் அவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகும் நிலை

கிளிநொச்சி, ஒக்.10

பொது நிகழ்வுகள் பலவற்றில் சிறுவர்களின் கலை நிகழ்வுகளை ஏற்பாடு செய்துவிட்டு சில காரணங்களைக் கூறி அந்த நிகழ்வுகளை இடை நிறுத்துவதால் சிறுவர்களாகிய தாம் பெரிதும் உளத்தாக்கத்துக்குள்ளாகிப் பாதிக்கப்படுவதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளும் நிகழ்வுகளுக்கும், இன்னும் பல நிகழ்வுகளுக்கும் சிறுவர்களின் நடனம், பாட்டு, தாளலயம் போன்ற நிகழ்வுகளை ஏற்பாடு செய்து, உரிய கலை நிகழ்வுகளை பழக்கி அதற்கான உடை அணிந்து சிறுவர்கள் காத்திருந்த போதிலும் நிகழ்வுகளில் செய்யப்படும் திடீர் மாற்றங்கள் காரணமாகவும், சிறுவர்களின் கலை நிகழ்வுகளை கருத்தில் எடுக்காத காரணத்தாலும், மறதியின் காரணமாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட சிறுவர் நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்படாது நிறுத்தப்பட்டு உரிய நிகழ்வுகள் நிறைவு பெறுகின்றன.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் நிகழ்வுக்காகக் காத்திருந்த சிறுவர்கள் அழுது கொண்டு தமது உடை அலங்காரங்களை கழற்றியதனையும், சில சிறுவர்கள் உடை அலங்காரங்களுடன் பங்குபற்றாமல் நிற்பதைப் பார்த்து சக சிறுவர்களால் கேலி செய்யப்படுவதனையும் அவதானிக்க முடிந்துள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் தாம் பெரிதும் அவமானப்பட்டது போல உணர்ந்து உளத்தாக்கத்துக் குள்ளாவதாகவும் சிறுவர்கள் சிலர் கவலை வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் 15 வயது மதிக்கத்தக்க சிறுமியின் நடன நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழ்வுக்காக அந்த சிறுமி உரிய உடை அலங்காரங்களை மேற்கொண்டு விட்டு தனது நிகழ்ச்சிக்காகக் காத்திருந்தார். ஆனால் குறித்த சிறுமியின் நிகழ்ச்சி இடம் பெறாது நிகழ்வுகள் முடிவடைந்து அனைவரும் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். சில காரணத்தால் அந்த நிகழ்ச்சியை நடத்த முடியவில்லை என்று அப்போது தான் அறிவித்தல் விடுக்கப் பட்டது. அந்தச் சிறுமி தேம்பித் தேம்பி அழுதபடி தனது உடை அலங்காரங்களைக் கழற்றிக் கொண்டிருந்ததனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதனை அவதானித்த பலருக்கு மன வேதனையாக இருந்தது. சிலருக்கு சிரிப்பாக இருந்தது.

இது ஒரு சிறிய எடுத்துக் காட்டுத்தான். ஆனால் இதனைப் போல பல சம்பவங்கள் நாட்டின் பல இடங்களில் நடைபெற்றுள்ளன. நடைபெற்றுவருகின்றன.

இவ்வாறான சம்பவங்கள் பெரியளவில் தென்படாதுவிட்டாலும் உரிய சிறுவர்களுக்கு பெரும் தாக்கங்களையும், வெறுப்புக்களையுமே தோற்றுவிக்கும். உளவியல் ரீதியாக நோக்கும் போது இது நன்றாகப் புலப்படும்.

நிகழ்வுகள் பலவற்றில் சிறுவர்கள் பங்குபற்றுவதன் மூலம் நிகழ்வுகள் சிறப்பாக இருக்கும் என்பதோடு சிறுவர்களின் திறன்கள் வெளிக்கொண்டுவரப்படுவதுடன் ஆளுமை மேம்பாடடைந்து உள ஆரோக்கியத்தையும் பெற முடியும். மாறாக நிகழ்வுகளுக்கு சிறுவர்களை ஏற்பாடு செய்து விட்டு அவர்களின் நிகழ்ச்சி களை திடீரென நிறுத்துவதன் மூலம் அவர்களின் உளநிலை பாதிக்கப் படுகின்றமை அறிந்த விடயமாகும்.

இவ்வாறான நிகழ்வுகளை ஏற்பாடு செய்பவர்கள் இந்த விடயத்தை கவனத்தில் எடுத்துச் செயற்படுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(வ-426)



கொக்குவில் இந்துவின் மாணவன் ஜி.சித்தாந்தனின் தனியாள் செயற்றிட்டத்துக்கான கலாநிதி அகளங்கனின் ''வேரும் விழுதும்' அறிமுகவிழா அண்மையில் கல்லூரியின் பஞ்சலிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

நூலின் முதற்பிரதியை இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் பொ. பாலகுமார் பெற்றுக் கொள்கிறார். அருகில் அதிபர்.ஏ. அகிலதாஸ், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் சரா.புவனேஸ்வரன், ஆசிரியை கலா சுந்தரேசன், மாணவன் ஜி.சித்தாந்தன் ஆகியோர் நிற்கின்றனர். (வ)

# முகச்சவரம் செய்யாத சாரதிகள் சேவையில் ஈடுபட முடியாது

## மினிபஸ் சங்கத் தலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக்.10

தனியார் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் மினி பஸ்களின் சாரதிகள், நடத்துநர்கள் முகச்சவரம் செய்திருக்க வேண்டும். கடமை நேரத்தில் மதுபானம் அருந்தக் கூடாது. இதனை மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு மீளவும் அறிவுறுத்தியுள்ளார் யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப் பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவர் பொ.கெங்காதரன்.

வெற்றிலை பாக்கு மெல்லுவது, கைத்தொலைபேசியில் உரையாடுவது என்பன சேவையில் ஈடுபடும் போது தவிர்க்கப்படவேண்டும். திடீர் பரி சோதனை மூலம் இவை கண்டுபிடிக்கப்படுமாயின் அவர்களுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் சேவையில் இருந்து இடைநிறுத்தப் படுவதுடன் தண்டப் பணமும் அறவிடப்படும் - என்றார் இணையத் தலைவர். (த-14)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**கந்தசாமி செந்தூரன்**

யாழ்.பல்கலைக்கழகத்தின் 27 ஆவது பட்டமளிப்பு விழாவில் *(06.10.2011)* B.Sc பட்டம் பெறும்

கந்தசாமி செந்தூரன்

அவர்களைப் பாராட்டுவதோடு மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

சி.ரூபகானன், மு.டேனுகாந்
ஸ்ரீ.வினோபவன், ஆ.ஆத்மன்.

# காரைநகர் கடற்படையால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

காரைநகர், ஒக்.10

காரைநகர் கடற்படைத் தளத்தின் 56 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு காரைநகர் கடற் படையினர் தோப்புக் காடு மறைஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 45 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி உள்ளனர்.

கடந்த வாரம் தோப்புக்காடு மறைஞானசம்பந்த வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் கடற்படை அதிகாரிகள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களைவழங்கியதுடன் மாணவர்களின்கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.(வ-250)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**திருமதி விக்னேஸ்வரி குலஞானசுந்தரம் B.Ed**
(கிளி/ உருத்திரபுரம் ம.வி)



2011 ஆம் ஆண்டுக்கான நல்லாசிரியர் விருதான ''பிரதீபா பிரபா'' விழாவில் சிறப்பிக்கப்பட்ட எமது நல்லாசானை நாம் வாழ்த்துவதோடு என்றும் அவர் சேவை சிறப்பாக உயர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மாணவர்கள்.**

ஞா.நிரோஜன், ப. தமிழினியன், ப.தஸ்மிகா

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



''செயற்கரிய செயலாற்றும் சேவையாளர்கள் இறைவனால் அனுப்பப்பட்டோர்'' எனும் கூற்றிற்கிணங்க முயற்சி, உழைப்பு, நேர்மை, சமூக நேயம், மனித நேயம், அறிவுத்திறன் முதலான பண்புகளை ஒருங்கிணைத்த பணியாளன், பண்பாளன் எமது மன்/ சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி முதல்வர்

**ச.சண்முகலிங்கம்**

அவர்கள் மன்னார் வலயப் பாடசாலைகளில் 1000-2000 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளின் சிறந்த அதிபர் தெரிவில் சிறந்த அதிபராகத் தெரிவுசெய்யப்பட்டு ''பிரதீபா பிரபா'' விருதினைப் பெற்றமையை பெருமையுடன் வாழ்த்தி பெருமிதம் அடைகின்றோம்.

**மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.வேலணை செட்டிபுலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடாசலை அதிபர் உயர் திரு. சின்னையா சேவியர் பிரான்சிஸ் அவர்கள் தீவக கல்வி வலயத்தில் சிறந்த அதிபராகத் தெரிவு செய்யப்பட்டு 06.10.2011 அன்று அலரி மாளிகையில் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் ''ஆசிரியர் பிரதீபா பிரபா'' என்னும் கௌரவ விருது வழங்கி கௌரவிக்கப்படும் நிலையில் அவரது சேவையை எமது ஏழாம் நாள் அட்வெண்டிஸ் திருச்சபையினர் சார்பிலும் அட்வெண்டிஸ் சர்வதேச பாலர் பாடசாலையின் சார்பிலும் வாழ்த்துவதுடன் அவரது பணி மேன்மேலும் சிறந்து விளங்கிட எல்லாம் வல்ல இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வேண்டுதல் செய்கிறோம்.

வாழ்த்துவோர்

850, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

7ஆம் நாள் திருச்சபை அங்கத்தினரும்,
அட்வெண்டிஸ் சர்வதேச பாலர் பாடசாலைச் சமூகமும்.



அலைகடல் ஓரத்திலே வீற்றிருந்து அருளாட்சி நடத்தும் மாயக்கண்ணனே
அலை எனத் தேரில் மிதந்து அருளாட்சி கொடுத்திடுவாய்...!

# வாணி ரெக்ஸ்

Vaani Tex
Specialist in Wedding Sarees
& Shalwar Kameez

81, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 5578

## வியளம் கேட்டீர்களா?

### சிறுவர்களை நல்ல முறையில் வளர்த்தெடுப்பது எவ்வாறோ...?

மதுபான நிலையங்களில் மது விற்பனையில் ஈடுபட்ட 21 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுள்ளனர் என்றொரு செய்தி வெளியாகியுள்ளது. சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிக் கதைக்கும் பலரும் பேச மறுக்கும் விடயம் சிறுவர் ஊழியம் பற்றியதாகும்.மத்திய தர,மேற்தர மக்களின் வீடுகளில் தொண்டூழியம் புரிபவர்கள் சிறுவர்களே. இவர்கள் மலிவான தொழிலாளர்கள்.முரண்டு பிடிக்க மாட்டார்கள். முரண்டு பிடித்தாலும் தண்டனை கொடுத்து அடக்கிவிடலாம். எனவே,பெரும் புள்ளிகள் பலரும் செல்லப்பிராணிகளான நாய், பூனைகளோடு சிறுவர்களையும் வளர்க்கிறார்கள்.

கடைகளில் பொருள்களை நிறுத்துக் கட்டித் தருபவர்கள், கோழிக் கடைகளில் கோழி உரிப்பவர்கள்,தொட்டாட்டு வேலை செய்பவர்கள், பேக்கரிகளில் வேலை செய்வோர், இனிப்புத் தொழிலகங்களில் பணி புரிவோர் என அங்கிங்கெனாதபடி தொழில் நடைபெறும் இடங்களில் எல்லாம் சிறுவர்களைத் தரிசிக்கலாம்.முதலாளிமாரின் வசைகளை உள்வாங்கியபடி எந்தவித சலனமும் இல்லாமல் அவர்கள் வேலை செய்து கொண்டிருப்பர்.துவிச்சக்கர வண்டி, மோட்டார் வண்டி திருத்துமிடங்கள், ரயர் ஒட்டுமிடங்கள்,வாகனச் சுத்திகரிப்பு நிலையங்களிலும் இவர்களே கதாநாயகர்கள். ஹோட்டல்களின் அறைப்பையன்களும் (Room Boys) இவர்களே.அத்துடன் மதுபான விற்பனை நிலையங்களிலும்அவ்வளவே!

நமது சூழலில் வறுமை,குடும்பத் தலைவர்களின் இழப்பு, சில பாடசாலைகளின் அடாவடித்தனம் ஆகியவற்றினால் கட்டாயக்கல்வி பெறும் 16 வயது என்ற காலத்திலேயே சிறுவர'கள் பலரும் தொழிலுக்குள் இறங்கிவிடும் நிலைமை காணப்படுகிறது. எமது கல்வி முறை சிறுவர்கள் கல்வி அடைவைப் பொறுத்து, அவர்கள் எந்த நிலையில் இருந்தாலும் குறித்த காலம் வரை கட்டாயம் கல்வி கற்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றது. அதனால் பலரும் 11 வருடங்கள் படித்து நிறைவில் எல்லாப் பாடங்களிலும் சித்தியெய்தத் தவறி விடுகின்றனர். கல்வி கற்கும் காலத்தில் ஒரு பிள்ளை அதிக துலங்கலை வெளிப்படுத்தாவிட்டால் அப்பிள்ளையை தொழிநுட்பக் கல்வியின் பால் ஆற்றுப்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும். மேலை நாடுகளில் அதற்கான பொறிமுறை உள்ளது. இங்கோ தொழிநுட்பக் கல்லூரிகள் இருந்தாலும் பாடசாலைகளுக்கும், அவற்றுக்கும் இடையிலான தொடர்புகள் இல்லை.அதற்கான இணைப் பாக்க வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்படவில்லை.

வீணாகச் சில வருடங்களைச் செலவழித்து அதன் பின் வீட்டில் நிற்பதையே இக்கல்வி முறை பின்தங்கிய மாணவர்கள் தொடர்பில் எமக்குத் தருகின்றது. பிள்ளையின் அடைவை தரம் 9 இல் மதிப்பிட்டு அதற்கேற்ப பிள்ளையைப் பாடசாலைகள் தொழிநுட்பக் கல்லூரிக்கு அனுப்பும் வகையில் பொறிமுறையொன்று செயற்படுத்தப்பட வேண்டும்.இதன் பிரகாரம் பிள்ளை உரிய திறன்களைப் பெற்று சிறுவர் என்ற வயதையும் கடந்து தொழிலுலகுக்குள் பிரவேசிக்க முடியும்.சட்டத்தின் பிடிக்குள் அகப்படும் நிலைமையும் ஏற்படாது.

சிறுவர்கள் தொழிலுக்குப் போகாவிட்டால் அவர்கள் வீட்டில் அடுப்பெரியாது என்பது பல குடும்பங்களின் நிலை.குடும்பங்களின் பாரத்தைச் சுமப்பவர்களாக அவர்கள் உள்ளனர். கணவன் கை விட்டுப் போக, தாய் நோயாளியாக, அந்தக் குடும்பத்தைத் தாங்கும் தூணாக பதின்ம வயது நிரம்பிய சிறுவன் வேலைக்குப் போகும் நிலை ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு வீட்டிலேனும் உள்ளது. அதை விட வயல் வேலைக் காலத்தில், புகையிலை வெட்டுக் காலத்தில் என பருவ வேலைக்குச் செல்பவர்களும் இருக்கிறார்கள். இக்காலத்தில் அதிக தொழிலாளர்கள் தேவைப்படுவதால் அந்த இடத்தைச் சிறுவர்களே நிரப்புகின்றார்கள்.

வறிய, பின்தங்கிய, இச்சிறுவர்களைக் கவனித்து உதவ முன்வருவோர் மிகக் குறைவே. சிறுவர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதற்குப் பதிலாக அவர்கள் குறித்து சமூக மட்டத்தில் ஆராய்ந்து அவர்களுக்கான உதவித் திட்டங்களை வழங்க சமூக அமைப்புக்கள் முன்வர வேண்டும். இன்றைய சிறுவர்களை நல்ல முறையில் வளர்த்தெடுப்பது எதிர்கால சமூக உருவாக்கத்துக்கு அவசியமானதாகும். அவ்வகையில் தொடரானதும், சிறியதுமான முனைப்புக்களே சிறுவர்களின் வாழ்வை மேம்படுத்தும்.

விழிச்சான் குஞ்சு.

# சஜித் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை ஓரம் கட்ட கட்சித் தலைவர் ரணில் முயற்சி

கொழும்பு, ஒக்.10

ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவாகச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து ஓரம் கட்ட கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க முயற்சி மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் முடிவடைந்த பின்னர் இவ்வாறு சஜித் தரப்பினரை ஓரம் கட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

குறிப்பாக சஜித் பிரேமதாசவுக்கு விசுவாசமாகச் செயற்பட்டு வரும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமையை இடைநிறுத்துவது குறித்து ரணில் தரப்பினர் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பில் தமக்கு விசுவாசமான நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே பேச்சு நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ரோசி சேனாநாயக்க, புத்திக்க பத்திரண, சுஜீவ சேனசிங்க உள்ளிட்ட பல கட்சி உறுப்பினர்களை இவ்வாறு ஓரம் கட்டும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)



அமைச்சர் றிசாத் பதியுதீனை இலங்கைக்கான பலஸ்தீனத் தூதர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பில் இரு நாடுகளுக்குமிடையிலான அரசியல்,வர்த்தகம்,கலாசார விடயங்கள் ஆகியவை தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

## பாதுகாப்பு வலயத்தில் மீன்பிடியில் ஈடுபட்டோர் கைது

கொழும்பு,ஒக்.10

அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 16 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர். திருகோணமலை, சம்பூர் அதிஉயர் பாதுகாப்பு வலயக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மீனவர்களுடன் ஆறு மீன்பிடிப் படகுகளும் மீட்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ச)

# தேர்தல் முடிவுகளையடுத்து கொழும்பு நகரில் பாதுகாப்பு

கொழும்பு,ஒக்.10

தேர்தல் முடிவுகளையடுத்து கொழும்பு நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த புறநகர்ப் பகுதிகளில் கூடுதலான பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பதற்ற நிலைமை ஏற்படக் கூடிய சில பிரதேசங்களில் விசேட அதிரடிப்படையினரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்புக் கடமைகளுக்காக 84 பொலிஸ் ரோந்துப் பிரிவினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நேற்றுமுன்தினம் மாலை துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்ற முல்லேரியா, வெல்லம்பட்டி மற்றும் கொலன்னாவ போன்ற பிரதேசங்களில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச)

## திரவப்பாலின் சீனியின் அளவைக் குறைக்க வேண்டுகோள்

### சுகாதார அமைச்சர்



கொழும்பு,ஒக்.10

சந்தையில் விற்கப்படும் திரவ வடிவப் பால் பைக்கற்றுகளில் சீனியின் அளவை ஐந்து வீதமாகக் குறைக்குமாறு பால் விநியோகம் செய்யும் நிறுவனங்களிடம் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்த வேண்டுகோளை நிறுவனங்கள் நிறைவேற்ற மறுத்தால் பால் பைக்கற்றுகளின் சீனியை 5 வீதத்துக்கு மட்டுப்படுத்த சட்டம் கொண்டுவரப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். சந்தையிலுள்ள பெரும்பாலான திரவப் பால்களில் 15 சதவிகித சீனி கலந்துள்ளது என்று அமைச்சர் சுட்டிக்காட்டி உள்ளார். இலங்கையில் நாளாந்தம் சுமார் ஆயிரம் பேர் இறக்கின்றார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார். அவர்களுள் 600 பேர் தொற்றற்ற நோய்களின் மூலம் உயிரிழக்கின்றனர்.

தொற்றற்ற நோய்களில் ஆபத்தானது சர்க்கரை வியாதி.

அதிகளவு சீனி அல்லது உப்பைப் பாவிப்பவர்களுக்கு இலகுவில் தோற்றற்ற நோய்கள் ஏற்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

# சுயாதீன பொலிஸ் சேவை உருவாக்கப்பட வேண்டும்

### சிரேஷ்ட மனித உரிமை ஆர்வலர் கூறுகிறார்

கொழும்பு,ஒக்.10

சுயாதீன பொலிஸ் சேவையொன்று உருவாக்கப்பட வேண்டும் என்று ஜனநாயக சட்டத்தரணிகள் அமைப்பின் அழைப்பாளரும், சிரேஷ்ட மனித உரிமை ஆர்வலருமான சட்டத்தரணி ஜே.சீ.வெலியமுன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட வேண்டியது மிகவும் அவசியமானது.

பொலிஸ்துறைத் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் உயிரிழக்கும் சம்பவங்கள் உயர்வடைந்துள்ளன. இந்த சம்பவங்களுக்கு முற்று புள்ளிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

திட்டமிட்ட வகையில் சட்ட விரோத படுகொலைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களைக் காண்பிக்கச் சென்றபோது பொலிஸார் மீது தாக்குதல் நடத்த முற்பட்ட கைதிகள் கொல்லப்படுவது வழமையானதாக மாறிவிட் டது. எனினும், பெரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய கைதிகள் கைவிலங்கு இடப்பட்டு அழைத்துச் செல்லப்படுவதே வழமை என்பது அனைவரும் அறிந்ததே .

கைதிகள் தாக்க முற்பட்டதாகவும், தற்பாதுகாப்பு நோக்கில் கைதிகளை கொன்றதாகவும் பொலிஸார் வெளியிடும் அறிக்கைகளில் உண்மையில்லை .

மொரட்டுவையில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை சிலர் தாக்கிக் கொன்றமை பெரிய குற்றச் செயல் என்பதில் மறுப்புக் கிடையாது என்ற போதிலும், சந்தேகநபர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டுமே தவிர, பொலிஸாரே தண்டிக்கக்கூடாது.

பொலிஸ் துறையினர் உள்ளிட்ட நாட்டின் எவரும் சட்டத்தைக் கையில் எடுத்துக்கொள்ள அனுமதிக்க முடியாது.

கைதிகளைப் பாதுகாக்க வேண்டியது பொலிஸாரின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும்- என்றார். (ச)

உதயன்
10 ஒக்ரோபர் 2011 திங்கட்கிழமை

# முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைகள் மீள்வரையறைக்கு ஆளாவதை வன்மையாகக் கண்டிக்கின்றனர் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள்

## செல்வம், சிவசக்தி ஆனந்தன், வினோ கூட்டாக அறிக்கை





மன்னார்,ஒக்.10

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைகள் மீள்வரையறை செய்வதற்கான அரசின் முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் மற்றும் வினோ நோகராதலிங்கம் ஆகியோர் வன்மையாகக் கண்டித்துள்ளனர். இந்தவிடயம் தொடர்பாக மூவரும் இணைந்து கூட்டறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளனர்.

இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பலமுறை ஒத்திவைக்கப்பட்டுப் பின்னர் அவசர அவசரமாக 10.10.2011 அன்று மாவட்டத்துக்குள்ளான மீள் எல்லை வரையறை தொடர்பான கலந்துரையாடல் கச்சேரியில் இடம்பெறும் என்று 06.10.2011 திகதிய அரச அதிபரின் கடித மூலம் அழைப்பு விடுக்கப்பட்டது. இதற்கான கால அவகாசம் மிக மிகக் குறைவு. அதி முக்கிய முடிவுகள் எட்டப்படும் விடயங்கள் அனைத்தும் எமது கட்சி மட்டத்திலும் மக்கள் மத்தியிலும் ஆலோசிக்கப்படுவதுடன் நிபுணர்களுடனும் கலந்தாய்வு செய்ய பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு எமக்குப் போதிய அவகாசத்தை வழங்கியிருக்க வேண்டும்.

மேலும் உடனடிப் பிரச்சினையான மீள்குடியேற்றம், மற்றும் மீள்குடியேறியோருக்கான வாழ்வாதார மேம்பாடு தொடர்பில் முக்கிய கவனம் செலுத்த வேண்டிய இந்தத் தருணத்தில், மாரிகாலத்துக்கு முன்பாக பல்வேறு முடிவுகள் எடுக்கவேண்டிய வேளையில், எத்தகைய அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுக்க மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் ஒப்புதல் தேவைப்படுகின்றது. ஆனால் அத்தகைய அவசர வாழ்வாதார விடயங்கள் கிடப்பில் போடப்பட்டு எல்லை மீள் நிர்ணயம் அவசர அவசரமாக மேற்கொள்ளப்படுகின்றது.

அரசின் எந்தவொரு கூட்ட அழைப்பிதழுக்கும் உள்ள பொதுவான கால அவகாசம் கூட இதற்கு வழங்கப்படாமல் அதி முக்கியமான மாவட்ட எல்லை மீள்வரையறை தொடர்பான கூட்டத்துக்கு அவசரஅவசரமாக அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதன் நோக்கம் என்ன?

இந்தக் கலந்துரையாடல் கூட்டத்துக்கான அழைப்பிதழிலேயே மாவட்டத்திற்குள்ளானமீள் எல்லை வரையறை செய்வது என்று தெரிவிக்கப்பட்டதன்மூலம் அரசு தனது உண்மை முகத்தைக் காட்டிநிற்கின்றது. ஏற்கனவே எல்லைகள் மீள வகுக்கப்பட்டு அதனை நடைமுறைக்கு ஒப்புதல் வழங்கி விட்டு எதுவும் தெரியாததுபோல் இத்தகைய அழைப்பிதழ் வழங்கப்பட்டுள்ளதா?

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில், இம் மாவட்டத்தில் எமக்குள்ள சிறப்புரிமைகள் மறுக்கப்பட்டு, மேற்படி கலந்துரையாடல் அழைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் எல்லை மீள் வரையறை ஆணைக்குழு பங்கேற்கும் இந்தக் கூட்ட அழைப்பிதழை நேரடியாக அமைச்சு எமக்கு வழங்காமல், அமைச்சின் நிர் வாகத்தின் ஓர் அங்கமான அரச அதிபரினூடாக அனுப்பப்பட்டுள்ளது. மேலும், இக்கலந்துரையாடலில் பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டு எம்மையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

காணி, மாவட்ட எல்லைகள் மற்றும் சட்டஒழுங்கு போன்ற அதிகாரங்கள் மாகாணங்களுக்குப் பகிரப்படவுள்ள ஓர் அரசியல் தீர்வு நோக்கிய பேச்சுவார்த்தைகள் கொழும்பில் எம்முடன் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், யாழ் மாவட்டத்தில் மக்கள் தொகை குறைந்துள்ளது என்ற காரணத்தைக் காட்டி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையை குறைத்துள்ள அரசு தன்னிச்சையாக ஏற்கனவே இங்குள்ள காணிகளின் எல்லைகளை மீள்நிர்ணயம் செய்ததுடன், பாரம்பரியமாக நிலைத்திருந்த எம்முடைய மாவட்ட எல்லைகளை தமது வசதிக்கேற்ப வரையறை செய்துவிட்டு எம்மை அழைத்து ஒப்புதல் கேட்கும் இத்தகைய வரைமுறையற்ற ஜனநாயக விரோத செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மேலும், காணி மற்றும் நீர்ப் பங்கீடு என்பவை அரசியல் தீர்வுடன் தொடர்புபட்டிருப்பதால் தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு எட்டப்படும் வரை இத்தகைய எல்லை மாற்றும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதனை நாம் முழுமையாக நிராகரிக்கின்றோம்.

காலங்காலமாக ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களால் இடம்பெயர்ந்த மற்றும் விரட்டியடிக்கப்பட்ட முல்லைத்தீவு, சிலாவத்தை, அலம்பில், செம் மலை, கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, கொக்கிளாய், உப்புமாவெளி, நாயாறு, முதலான பூர்வீக கிராம மக்களும் இறுதியாக வெளியேற்றப்பட்ட இந்துபுரம், திருமுறிகண்டி, யோகபுரம், திருநகர், குமுளமுனை, கணுக்கேணி, புத்துவெட்டுவான், புதுமாத்தளன், புதுக்குடியிருப்பு, முள்ளிவாய்க்கால் முதலான ஊர்களைச் சேர்ந்த இடைத்தங்கல் மற்றும் நண்பர்கள், உறவினர்களுடன் தங்கியிருக்கும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களும் இதுவரை முறையாக மீள்குடியமராத நிலையில், அவர்களின் காணியுரிமை உறுதிப்படுத்தப்படாத சூழலில், அவர்களின் விருப்பங்களைத் தெரிந்துகொள்ளாமலேயே மாவட்ட எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யப்படுகின்றன.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இணைக்கப்பட்டிருந்த வடக்கு-கிழக்கு மாகாணத்தினை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பின் மூலம் கூறுபோடுவதற்கு முனைப்புக் காட்டியதைப் போன்று எமது மக்கள் தமது பூர்வீக வாழ்விடங்களில் சென்று வாழ அனுமதிக்கப்படாத நிலையிலேயே மாவட்ட எல்லை மீள் நிர்ணயம் மற்றும் புதிய பிரதேச செயலகப்பிரிவு உருவாக்கல் போன்ற தமிழ் மக்களின் அடிப்படை வாழ்வுரிமையை அழிக்கும் செயற்பாடுகள் மிக லாவகமாக மேற்கொள்ளப்படுகின்றன. இனங்களுக்குரித்தான உரிமை தொடர்பான கொள்கை முடிவுகள் அந்த இனத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகளின் ஒப்புதலுடனும் மக்களின் விருப்பத்துடனும் மேற்கொள்ளப்படுவதே சிறந்த ஜனநாயக முறையாகும். ஆனால் இந்த நாட்டில் கொள்கை தொடர்பான முடிவுகள் ஏற்கனவே எடுக்கப்பட்டு விழா அழைப்பிதழ் போன்று தகவல் தெரிவிக்கும் முகமாகவே எமக்கு அறிவிக்கப்படுகின்றது.

இனங்களுக்கிடையில் நல்லிணக்கமும் ஒருமைப்பாடும் ஏற்பட வேண்டுமானால் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களைக் கபளீகரம் செய்யும் செயற்றிட்டங்களைக் கைவிட்டு, வர்த்தமானி அறிவித்தல்கள், சுற்று நிருபங்கள் அடிப்படையில் இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் உடன் நிறுத்தப்பட வேண்டும். என்று அவ்வறிக்கையில் மூவரும் தெரிவித்துள்ளனர். (க-601)

## கிளிநொச்சி வலய சிறந்த அதிபராக முருகானந்தா ம.வி.அதிபர் தெரிவு



கிளிநொச்சி,ஒக்.10

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கல்வி அமைச்சால மகிந்த சிந்தனை தேசிய புனர்வாழ்வு செயற்றிட்டத்துக்கு ஏற்ப பயன்மிக்க கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்கும் ஆசிரியர், அதிபர்களால் ஆற்றப்படும் அளவிலா சேவையைக் கௌரவித்து விருது வழங்கும் வைபவம் ‘ஆசிரியர் பிரதீபா பிரபா’ என்னும் தலைப்பில் கடந்த 6 ஆம் திகதி அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. இந்த விருது வழங்கும் நிகழ்வில் கிளிநொச்சி முருகானந்தா மகா வித்தியாலய அதிபர் தில்லையம்பலம் வரதன் கிளிநொச்சி வலயத்தின் 1000 மாணவர்களுக்குட்பட்ட பாடசாலைகளில் சிறந்த அதிபருக்கான விருதைப் பெற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாணம் அருணோதயக் கல்லூரி, யூனியன் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவரான இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவப் பட்டதாரியும் தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமாதாரியும் ஆவார். (405)

## மதுபோதைக்கு தண்டம் விதிப்பு

கிளிநொச்சியில் மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு 6,500 ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் பதிவு செய்யப்படாத மோட்டார் சைக்கிளை மதுபோதையில் செலுத்திச் சென்ற ஒருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த 7 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். குறித்த நபருக்கு 6,500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன்தண்டப்பணம் செலுத்தத்தவறின் ஒருமாத காலச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும்எனவும் மாவட்ட நீதிபதி பெ.சிவகுமார் உத்தரவிட்டார். (க-6)

## 13 கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் கொரிய அரசின் நிதியுதவியுடன் புனரமைப்பு

கிளிநொச்சி,ஒக்.10

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 13 பாடசாலைகள் கொரிய அரசின் நிதி உதவியின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

கடந்த யுத்தத்தின் போது கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலைக் கட்டடங்கள் முற்றாக அழிவடைந்தன.

இதனால் மக்கள் இந்த மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்துள்ள போதிலும் கல்விச் செயற்பாடுகளில் அதிக கஷ்டங்கள் நிலவி வந்தன. குறிப்பாக பௌதிக வளங்களின் குறைபாடுகளால் மாணவர்களும், ஆசிரியர் களும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளனர்.

தற்போது கொரிய அரசின் நிதி உதவியின் கீழ் 105 வகுப்பறைகளும் 13 செயற்பாட்டறைகளும் 12 ஆசிரியர் விடுதிகளும் அமைக்கப்படவுள்ளன.

இதற்கென 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கொரிய அரசின் கல்வி நிதியுதவித் திட்டத்தின் கீழ் இந்தச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

(க)

## கிளிநொச்சி மாணவரிடையே வணிக விழாப் போட்டிகள்

கிளிநொச்சி,ஒக்.10

பாடசாலை மாணவர்களிடையே வணிகத்துறை சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிளி நொச்சி கல்வி வலயத்தில் நாளையும் நாளை மறுதினமும் வணிக விழாப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் மூன்று பிரிவுகளாக இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன. தரம் -10 மாணவர்கள் பிரிவு I இலும் தரம் -2 மாணவர்கள் பிரிவு II இலும் தரம் 12, 13 மாணவர்கள் பிரிவு III இலும் போட்டிகளில் பங்கு கொள்ளவுள்ளனர். இந்தமூன்று பிரிவுகளிலும் குழு வினாவிடை, பேச்சு, கட்டுரை ஆகிய மூன்றுவகையான போட்டிகள் நடைபெறவுள்ளன.

மூன்று பிரிவுகளுக்குமான குழுவினாவிடைப் போட்டி 11 ஆம் திகதி காலை 9 மணிக்கும் கட்டுரைப் போட்டி 11 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கும் பேச்சுப் போட்டி 12 ஆம் திகதி காலை 9 மணிக்கும் நடைபெறவுள்ளன. எனவே சம்பந்தப்பட்ட போட்டியாளர்களை தவறாது பங்கு கொள்ளுமாறும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க-405)

## முல்லைத்தீவு கல்வி வலயத்தில் ‘பிரதீபா பிரபா’ விருது பெறுவோர்

முள்ளியவளை,ஒக்.10

முல்லைத்தீவுக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பின்வரும் பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் ஜனாதிபதியால் ‘பிரதீபா பிரபா’ விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

**அதிபர்**

**மாணவர் தொகை -**

1-200- மாணிக்கம் செல்வராசா (வட்டுவாய்க்கால், அ.த.க. பாடசாலை).

201- 300 - இ.அந்தோனிப்பிள்ளை (வேணாவில் ஸ்ரீ முருகானந்தா வித்தியாலயம்).

301-1000 -க.ஜெயவீரசிங்கம் (கலைமகள் வித்தி யாலயம், முள்ளியவளை).

1001-2000 - க.சிவலிங்கம் ( முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி).

**ஆசிரியர்கள்**

1-200 - ஆரம்பப்பிரிவு - திருமதி. ரஜிதா சிறீதரன்( நெத்தலியாறு தமிழ் வித்தியாலயம்).

இடைநிலைப்பிரிவு - திருமதி இரவீந்திரன் யசிந்தா இராசம்மா (தேவிபுரம் அ.த.க.பாட சாலை).

201-300 - ஆரம்பப் பிரிவு - முத்தையா சௌந்தரராசன் (தேவிபுரம் அ.த.க.பாடசாலை)

301-1000 - ஆரம்பப்பிரிவு- திருமதி புஸ்பமலர் பகீரதன் (விசுவமடு மகாவித்தியாலயம்).

இடைநிலைப்பிரிவு - திருமதி கோகிலாதேவி வீரசிங்கம் (உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம்).

உயர்தரம் - சி.ஜெயபாலன் (முல்லைத்தீவு மகா வித்தியாலயம்).

1001-2000 - இடைநிலைப் பிரிவு - திருமதி கண்மணி கிறிஸ்ரியான் (உடையார்கட்டு மகா வித்தியாலயம்).

உயர்தரம் - திருமதி சோமாவதி சிவரஞ்சன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி).(க-433)

# கொக்கிளாய் இலந்தைமுனைப் பகுதியில் மக்கள் மீள்குடியமர்வதற்குப் பின்னடிப்பு

முல்லைத்தீவு, ஒக்.10

முல்லைத்தீவு, கொக்கிளாய் இலந்தைமுனைப் பகுதியில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு முன்னர் குடிதண்ணீர் வசதி மற்றும் போக்குவரத்துக்கான வீதிகள் சீர்செய்யப்பட வேண்டும் எனவும் இதனைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரியிருப்பதாகவும் பிரதேச பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

முல்லைத்தீவு கொக்கிளாய்ப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் இலந்தைமுனைக் கிராமத்தைச் சேர்ந்த குடும்பங்கள் அந்தப் பகுதி முழுவதும் பற்றைக்காடுகள் மண்டிக் காணப்பட்டதாலும் போக்குவரத்துக்கான வீதிகள் இல்லாததாலும் மீள் குடியமர்வதற்கு முன்வரவில்லை.

இந்த நிலையில் குறித்த கிராம மக்கள் கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, புளியடிமுனை ஆகிய பகுதிகளில் உள்ள உறவினர்களின் காணிகளில் தற்காலிகமாகக் குடியமர்ந்துள்ளனர்.

இவர்கள் தமது சொந்த இடத்துக்குச் செல்ல விரும்பியுள்ள போதும் இந்தக் கிராமத்தின் வீதிகள் எவையும் அடையாளம் தெரியாதவாறு பற்றைக்காடுகள் மண்டிக் காணப்படுவதுடன் குடிதண்ணீர் வசதிகளும் இன்றிக் காணப்படுவதாகவும் இவற்றைச் சீர்செய்துதந்தால் தாம் மீள்குடியமர முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.

இந்தவிடயம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு கோரியுள்ளதாக கொக்கிளாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (க-6)

# வாய்பேச முடியாத 15 வயது சிறுமி மீது 65 வயது ஆசாமி பாலியல் பலாத்காரம்

மன்னார்,ஒக்.10

மன்னாரில் வாய்பேச முடியாத 15 வயதுச் சிறுமியைப் பாலியல் பலாத்காரம் புரிந்த 65 வயது முதியவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் தோட்டவெளிக் கிராமத்தைச் சேர்ந்த 15 வயதுடைய வாய் பேச முடியாத சிறுமியொருவர் சமையல் பொருள்களை வாங்குவதற்காக அங்குள்ள கடையொன்றுக்குச் சென்றுள்ளார்.

அப்போது அங்கிருந்த கடையை நடத்துபவரின் சகோதரரான 65 வயதுடைய வயோதிபர் அந்தச் சிறுமியைக் கடையின் பின்புறமாக அழைத்துச் சென்று பாலியல் பலாத்காரம் புரிந்துள்ளார்.

அங்கிருந்து வீட்டுக்குச் சென்ற சிறுமி தனது பெற்றோரிடம் நடந்த சம்பவத்தைக் கூறியுள்ளார். பெற்றோர்கள் உடனடியாக இந்த விடயம் தொடர்பாக சிறுவர் நன்னடத்தைப் பிரிவு அதிகாரிகளுக்கும் மன்னார் பொலிஸாருக்கும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதற்கிடையில் குறித்த முதியவர் தலைமறைவாகிவிட்டார். சிறுமியும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். தலைமறைவாகியிருந்தமுதியவரை மன்னார் பொலிஸார் தற்போது கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-601)

# துணுக்காய் கல்வி வலயத்தின் பௌர்ணமி கலைவிழா நாளை

மல்லாவி,ஒக்.10

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் துணுக்காய் கல்வி வலயத்தினரால் பௌர்ணமிக் கலைவிழா நடத்தப்படவுள்ளது.

இந்தப் பௌர்ணமிக் கலைவிழா நாளையதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தின் கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரும் ஆளுநரின் செயலாளருமாகிய இ.இளங்கோவன் இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் விழாவுக்குத் தலைமை தாங்குவார்.

இந்தப் பௌர்ணமிக் கலைவிழாவில் கலைநயம் மிக்க பல நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன. முதலில் மல்லாவி மத்திய கல்லூரி மாணவிகள் வரவேற்பு நடனத்தை வழங்குவார்கள்.

மேலும் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், கற்சிலைமடு அ.த.க.பாடசாலை மாணவிகளின் நடன நிகழ்ச்சிகளும் ஒட்டுசுட்டான் மயில்வாகனம் தமிழ் வித்தியாலய மாணவர்களின் சிறுவர் நடன நிகழ்வும் இடம்பெறவிருக்கின்றன.

அத்துடன் ஆசிரியர்களின் வாத்திய விருந்து, சமூக நாடகம், நாட்டிய நிகழ்வு, மெல்லிசைப் பாடல் நிகழ்வு ஆகியனவும் இடம்பெறவுள்ளன.

மேலும் யோகபுரம் மகா வித்தியாலய மாணவர்களின் நாட்டார் பாடல் நிகழ்வு, ஒலுமடு தமிழ் வித்தியாலய மாணவர்களின் இசை நிகழ்வு ஆகியனவும் இடம்பெறவுள்ளன.

இந்தப் பௌர்ணமிக் கலைவிழாவின்போது பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் கலைத் திறமைகள் வெளிக்கொணரப்படுவது சிறப்பு அம்சமாக உள்ளது.

இந்தப் பௌர்ணமிக் கலைவிழாவில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பாடசாலைச் சமூகத்தினர், கலை ஆர்வலர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொள்வரென எதிர்பார்க்கப்படுகின்றது. (க-425)

## நல்ல பணியாளர்கள்...



உழைப்புக்கு கௌரவம்: தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு மன்னாரில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சுகாதார சேவைப் பணியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் சுகாதார சேவைகளைச் சேர்ந்தவர்கள் காணப்படுகின்றனர். (601)

# மன்னாரில் தனியார் பஸ் மோதி வயோதிபர் அந்த இடத்திலேயே சாவு

மன்னார்,ஒக்.10

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி கீலியன் குடியிருப்புச் சந்தியில் நேற்று முந்தினம் சனிக்கிழமை மதியம் 12.45 மணியளவில் இடம் பெற்ற வாகன விபத்தில் கட்டுக்காரன் குடியிருப்புக் கிராமத்தைச் சேர்ந்த 65 வயதான பாவுலு சந்தியாப்பு எனும் வயோதிபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக தலைமன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கட்டுக்காரன் குடியிருப்பு கிராமத்தில் இருந்து கீலியன் குடியிருப்பு கிராமத்திற்கு துவிச்சக்கர வண்டியில் சென்று விட்டு மீண்டும் அங்கிருந்து தனது வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போது கீலியன் குடியிருப்பு வீதியில் வைத்துப் பின்புறமாக வேகமாக வந்த குறித்த தனியார் பஸ் சந்தியாப்பு மீது மோதியுள்ளது.

இதன் போது சந்தியாப்பு சம்பவ இடத்திலேயே இரத்த வெள்ளத்தில் உயிரிழந்தார்.

பின் தலைமன்னார் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து குறித்த பஸ் சாரதியைக் கைது செய்தனர்.

இந்த பஸ்ஸில் வந்தவர்கள் அனைவரும் தென் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் அனைவரும் சுற்றுலாவாக வந்து மடு தேவாலயத்திற்குச் சென்று விட்டு தலைமன்னார் பகுதிக்கு சென்றபோதே மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸாரின் விசாரணைகளின் மூலம் தெரியவருகின்றது.

குறித்த பஸ் வேகமாக சென்ற போது பல இடங்களில் பொலிஸார் இடை மறித்த போதும் பஸ்நிறுத்தாமல் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பஸ் சாரதி மது போதையில் இருந்ததாக சம்பவ இடத்தில் நின்றவர்கள் தெரிவித்தனர்.

சடலம் மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-601)

## டாஷ் கண்ணிவெடியகற்றும் நிறுவனத்தால்

# கண்டாவளை, ஆனையிறவுப் பகுதிகளில் 22 ஆயிரம் வெடிபொருள்கள் மீட்பு

கிளிநொச்சி,ஒக்.10

கிளிநொச்சி, கண்டாவளை ஆனையிறவு ஆகிய பகுதிகளில் சுமார் 22 ஆயிரத்துப் பத்து வெடி பொருள்கள் டாஸ் நிறுவனத்தால் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் உள்ள பெரியகுளம், புளியம்பொக்கணை, ஊரியான், மயில் வாகனபுரம், ஆனையிறவு ஆகிய பகுதிகளில் உள்ள வெடி பொருள்கள் அடையாளம் காணப்பட்ட இடங்களில் அவுஸ்திரேலியா மற்றும் யப்பான் அரசுகளின் நிதியுதவியுடன் டாஸ் நிறுவனத்தால் வெடி பொருள்கள் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் ஆனையிறவு, மயில் வாகனபுரம், பெரியகுளம் ஆகிய பகுதிகளில் இருந்து 243 மிதி வெடிகளும் வெடிக்கும் நிலையில் காணப்பட்ட எறிகணைகள், கைக்குண்டுகள், ஏனைய வெடி பொருள்கள் என 157 வெடி பொருள்களும் 21 ஆயிரத்து 610 துப்பாக்கி ரவைகளும் என மொத்தம் 22 ஆயிரத்து பத்து வெடிபொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மேற்படி இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் வெடிபொருள்களை அகற்றும் பணிகள் டாஸ் நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (க-6)

# கோடா வைத்திருந்தவருக்குத் தண்டம்

கிளிநொச்சி,ஒக்.10

கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் கோடா வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் 15 ஆயிரம் மில்லி லீற்றர் கோடா வைத்திருந்த ஒருவர் கிளிநொச்சி மதுவரித் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு கடந்த 7 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதிவான் பெ.சிவ குமார் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது இவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் கட்டத் தவறும் பட்சத்தில் மூன்றுமாதம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (க-6)

# பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளும் கிளிநொச்சி கண்ணகிநகர் மக்கள்

கிளிநொச்சி,ஒக்.10

கிளிநொச்சி, கண்ணகிநகர் கிராமத்தில் மீளக்குடியமர்ந்த மக்கள் தாங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கண்ணகி நகர் கிராமத்தில் இதுவரை 337 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் 180 குடும்பங்கள் நிரந்தர வீடுகள் இன்றி வாழ்ந்து வருகின்றனர்.

மேற்படி கிராமத்தில் உள்ள 70 விதவைகளில் 49 பேர் இளம் விதவைகளாகவே காணப்படுகின்றனர். இவர்கள் தமக்கான வாழ்வாதார உதவிகளையும் தமது பிள்ளைகளின் கல்விக்கான உதவிகளையும் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

இந்தப் பகுதியில் 352 கடற்றொழிலாளர்கள் உள்ளபோதும் இவர்களுக்கான கடற்றொழில் உபகரணங்கள் மற்றும் உதவிகள் எவையும் சரியான முறையில் கிடைக்கவில்லையெனவும் இவர்கள் கூறுகின்றனர். (க-6)

# சிறுவர் அரங்கப் போட்டி


கிளிநொச்சி,ஒக்.10

கிளிநொச்சிக் கல்வி வலய பளைக்கோட்ட ஆரம்பக் கல்வி மாணவருக்கான சிறுவர் அரங்கப் போட்டியில் பளை மத்திய கல்லூரி முதலாமிடத்தைப் பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் இரண்டாம் இடத்தை இயக்கச்சி அ.த.க. பாடசாலையும் மூன்றாம் இடத்தை சோரன்பற்று கணேச வித்தியாலயமும் பெற்றுள்ளன. (க-405)

# பெண்கள் தாலி அணிந்திருப்பது பாதுகாப்பானதே...

'தாலி பெண்ணுக்கு வேலி' என்று கூறுவதுண்டு. இந்தக் கூற்று மிகப் பொருத்தமானதே. திருமணத்தின்போது கணவனால் கட்டப்படும் தாலி ஒரு பெண்ணுக்கு மிக மிக அவசியமானது. மணமானவள் என்பதற்கும் மேலாக கணவன் மனைவியிடையே அன்பான பந்தத்தை வளர்க்கக் காரணமாகத் தாலி அமைகிறது. மனைவியின் கழுத்தில் தாலியைக் காணும் கணவன் இவள் எனது மனைவி ; எனக்குச் சொந்தமானவள்; இவள் மீது அன்பு செலுத்துவதுடன் வாழ்நாள் முழுவதும் கஷ்டப்படாது இவளை வாழவைக்க




நித்தியா.

வேண்டியது எனது கடமை என்று நினைப்பான். தாலியைச் சுமந்திருக்கும் பெண்ணோ, இவன் எனக்குப் புதிய வாழ்வு தந்தவன்; அவனுக்கு உரியவளாக நான் வாழ வேண்டும். என்று நினைக்கின்றான். இவ்வாறான எண்ணங்கள் இருவரிடையே உள்ள பந்தத்தை வலுவுடையதாக்குகின்றன.

தாலியை மஞ்சள் கயிற்றில் கோர்த்துக் கட்டுவதே பழைய காலத்து மரபாக இருந்தது. ஆனால் காலப்போக்கில் அந்தஸ்த்தைப் பறை சாற்றும் சின்னமாகத் தாலி மாறிவிட்டது. இது ஒவ்வொருவரதும் தனிப்பட்ட விருப்பத்தைப் பொறுத்தது. திருமண நாளன்று அணியப்படும் தாலி என்ற மங்கலச் சின்னம் முக்கியமானதே தவிர அது எத்தனை பவுணில் செய்யப்படுகிறது என்பது முக்கியமானதல்ல. அது மணமகளுக்கு அந்தஸ்தையும் கௌரவத்தையும் வழங்குகிறது.

இந்தத் தாலியில் அவரவர் சமயப் பண்பாட்டுச் சின்னங்கள் பொறிக்கப்படுவதும் வழக்கம். மஞ்சள் பூசப்பட்ட நூல் மணமகனால் மணமகள் கழுத்தில் கட்டப்படும். இதனைக் கட்டும் போது மணமகன் முதல் முடிச்சைப் போட அவரது சகோதரிகள் மிகுதி இரண்டு முடிச்சுக்களையும் போடுவார்கள். முதலாவது முடிச்சு இந்தத் திருமணம் சம்பிரதாய பூர்வமான திருமணம் என்பதைக் குறிக்கும். இரண்டாவது முடிச்சு மணமகளை மணமகனது குடும்பம் வரவேற்கிறது. மூன்றாவது முடிச்சு இந்தப் பெண் எல்லோர் முன்னிலையிலும் திருமணமானவள் என்பதைச் சமூகத்துக்கு அறிவிக்கிறது. ஆனால் தற்காலத்துப் பெண்கள் சிலர் இந்தத் தாலியை அடிமைச் சின்னமாகக் கருதி அணிய மறுத்துவருகின்றனர். அதுமட்டுமன்றி தற்காலத்தில் வசதி படைத்தவர்கள் கூடிய பவுணில் தாலியை அணியும் போது வசதி குறைந்தவர்கள் மஞ்சள் கொடியையேனும் கழுத்தில் அணிந்திருப்பதைக் கௌரவக் குறைச்சலாகக் கருதி அணிவதில்லை. இதனால் திருமணமான பெண்களுக்கும் திருமணமாகாத பெண்களுக்கும் வேறுபாடு புரியாமல் பல்வேறு வகையான சமூகப் பிறழ்வுகளுக்குக் காரணமாக அமைகின்றது. இத்தகைய சீரழிவுகளிலிருந்து தப்பித்து வாழ வேண்டுமெனில் திருமணமான பெண்கள் தாலியை அணிந்திருத்தல் வேண்டும். ஆகவே தாலி என்பது அடிமைச் சின்னமல்ல; கணவன் மனைவியிடையே அன்புப் பிணைப்பையும் ஏற்படுத்துவதோடு பாதுகாப்பையும் வழங்குகின்ற ஒரு மங்கலச் சின்னமாகும். அதைப் பெண்கள் தினமும் அணிந்திருப்பது அவர்களுக்குப் பாதுகாப்பானதே.

# நிமிர்ந்து நில் சாதனைப் பெண்ணாய்



பெண்ணே...
இன்னுமா நீ
இருளில் இருக்கின்றாய்...?
உன் முகவரி
முகம் காட்ட வேண்டாமா?
பௌர்ணமி
என்றுதான் உன்னை
சொன்னார்கள்
ஆனால் நீயோ...
இருளில் இருக்கின்றாய்
உலகுக்கு ஒளி
கொடுக்க வேண்டாமா?
நிலவு என்றுதான்
உன்னைச் சொன்னார்கள்
ஏன்
தேய்பிறையாய்
இருக்கிறாய்...?
தென்றல் என்றார்கள்
உன்னை- அதற்காக
சூறாவளியாய் வேண்டாம்
புயலாய் எழ வேண்டாமா...?
உன்னை
தலை குனிந்து
நடக்கச் சொன்னார்கள்
அது உன்
அடக்கத்துக்கு அல்ல
உன் அழிவுக்கு!
நீ...
தலைநிமிர்ந்தால்
நாளைய சாதனைப் பெண்
நீதான்!
நிமிர்ந்து நில்..!

ரீ.அகிலா,
கஸ்தூரியார் வீதி.

# ஆடைகளை வைத்துப் பெண்களை எடைபோடலாமா?



நிசானிக்கா சுந்தரேஸ்வரன்,
சுன்னாகம்.

இந்த நவீன உலகிலே பெண்கள் பல்வேறு வகையான ஆடைகளை அணிந்து வலம் வருகின்றனர். இந்த ஆடைகளின் வடிவங்கள் வெவ்வேறு நாடுகளின் கலாசார வேறுபாடுகளுக்கு ஏற்ற வகையில் மாறுபடுகின்றன. தற்போது எமது நாட்டிலும் பெண்கள் தமக்குப் பிடித்தமான ஆடைகளை அணிவதில் நாட்டம் கொள்கின்றனர். எனவே ஆடைகளை வைத்து எல்லாப் பெண்களையும் எடைபோட முடியாது.

முன்னர் கொழும்பு போன்ற நாகரீக வளர்ச்சி பெற்ற நகரங்களில் பெண்கள் மேலை தேய ஆடைகளை அணிந்து தமது நாகரீக வளர்ச்சியைக் காட்டினர். ஆரம்ப கட்டத்தில் நாட்டின் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த பெண்கள் இவர்களை ஏளனம் செய்ததோடு இத்தகைய ஆடைகளைப் பெண்கள் அணிவது கேவலமானது என்றும் புறமொதிக்கினர். ஆனால் இன்றோ நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. சாதாரண கிராமத்தைச் சேர்ந்த பெண்களும் நீளக்காற் சட்டை அணிந்து செல்வதைக் காணமுடிகிறது. இதனை ஒரு சிலர் வெறுக்கலாம். அல்லது இத்தகைய ஆடை அணிந்து செல்லும் பெண்களைத் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கலாம். இது ஒரு தவறான செயலாகும். ஒருவர் அணியும் ஆடைக்கும் அவர்களது குணாதியங்களுக்கும் தொடர்பே கிடையாது. சேலை கட்டிய பெண்கள் எல்லோருமே கலாசாரத்தைப் பேணுபவர்கள் என்று கூறமுடியுமா? பெண்கள் ஆபாசமான முறையில் ஆடை அணிந்து செல்வது தவறானது என்பதில் மாறுபட்ட கருத்துக்கு இடம் இல்லை. இத்தகைய செயல்கள் தேவையற்ற பிரச்சினைகளைத் தோற்றுவித்துவிடும். ஆகவே பெண்கள் கவர்ச்சிகரமான ஆடைகள் அணிவதை விடுத்து தமது சௌகரியங்களுக்கு ஏற்றவாறு ஆடை அணிந்து செல்வதில் தவறில்லை. எனவே பெண்கள் தமது வசதிக்கேற்றவாறு எத்தகைய ஆடைகளையும் அணியலாம். ஆனால் அவை எமது சமூகத்தில் தேவையற்ற பிரச்சினைகளைத் தோற்றுவிக்காது பார்த்துக் கொள்ளுதல் அவசியமாகும். அத்துடன் சகல விடயங்களிலும் ஆணுக்குப் பெண் நிகர் என்று கூறும் சமூகம் பெண்களது ஆடை விடயத்தில் கட்டுப்பாடுகளை விதிப்பது பெண்களை அடக்கி ஒடுக்கும் செயல்களாகவே கருதப்படும்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
'திலகம்',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# போதும் என்ற மனமே...



வதனா,
ஏழாலை.

பெண் என்பவள் என்னதான் படித்துப் பட்டம் வாங்கியவளாக இருந்தாலும் பெரிய பதவி வகித்தாலும், அவளுக்கென்று அவளால் மாற்ற முடியாத விஷேச குணங்கள் சில உண்டு. அதாவது, தன்னிடம் இருப்பதைக் கொண்டு திருப்திப்படும் குணம் பொதுவாகப் பெண்களுக்கு இல்லை. இன்னும் வேண்டும் ...வேண்டும் என்று ஆசைப்பட்டுக்கொண்டே இருப்பார்கள். எமக்கு உள்ள தகுதிக்கு ஏற்பதான் எமது ஆசைகளும் இருக்க வேண்டும் என்று சிந்திப்பதில்லை. தன்னைப் பிறர் வளர்ச்சியோடு ஒப்பிட்டுப் பார்ப்பதே மனிதனின் இயல்பாக இருக்கிறது. இதில் பெண்கள் மட்டும் விதிவிலக்கா என்ன? இந்த இயல்பு பெண்களிடம் ஆசையையும் பொறாமையையும் ஏற்படுத்துகின்றது.

தன் வீட்டில் எவ்வளவுதான் செல்வம் கொட்டிக்கிடந்தாலும், அடுத்த வீட்டில் செல்வம் எப்படிக் கொட்டுகிறது என்று எட்டிப் பார்ப்பாள். இதற்கு அவர்களின் திருப்தி இல்லாத மனம்தான் காரணம். என்னதான் தன்னிடம் தேவையான ஆடைகள், ஆபரணங்கள் இருந்தாலும் இவை போதும் என எந்தப் பெண் நினைக்கிறாள்.

இன்னொரு பெண் அழகான சேலை அணிந்திருந்தால் அதனை எத்தனை பெண்கள் இரசிக்கின்றனர். அந்த நல்ல குணம் நிச்சயமாக அவர்களிடம் இல்லை. பொறாமைக் கண்ணோடுதான் பார்ப்பார்கள். சில சமயங்களில் பொறாமைத் தீயை வார்த்தைகளால்கூட வெளிப்படுத்திவிடுவர். இவர்களது இத்தகைய குணங்களை மாற்றுவது என்பது கடினமான விடயம்தான். எனினும் பிறருடன் தன்னை ஒப்பிடுவதை விட்டு இன்னொருவனின் வெற்றிக்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்து தன்னைத் தானே கேள்வி கேட்டுக் கொண்டால் பெண்களின் இந்தக் குணங்கள் நாளடைவில் இல்லாமல் போய் மகிழ்ச்சி குடிகொள்ளும்.

# கொட்டியாகலை தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைக்கு தொழில் திணைக்களத்தில் தீர்வு

### நாளொன்றுக்கு 13 கிலோ கொழுந்து நிர்ணயம்

நுவரெலியா,ஒக்.10

பொகவந்தலாவை, கொட்டியாகலை தோட்டத் தொழிலாளர்கள் முகம் கொடுத்து வந்த பிரச்சினை முடிவுக்கு வந்துள்ளது. தொழிலாளர்கள் தமது ஒரு நாள் சம்பளத்திற்கு 13 கிலோ கொழுந்து பறித்தால் போதும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, இந்த தோட்ட அதிகாரி மீது நடவடிக்கை எடுப்பதற்கு மூன்று மாத அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு தோட்டக் கம்பனியும் சம்மதம் தெரிவித்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

ஹற்றன் தொழிலாளர் திணைக்களத்தில் தொழில் அதிகாரி அனுரபெர்னாண்டோ முன்னிலையில் கடந்த வியாழக்கிழமை விசாரணை நடைபெற்ற போதே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட 18 கோரிக்கைகளையும் அடுத்த 20 நாள்களில் தீர்த்து வைப்பதாகவும் தோட்ட நிர்வாகம் ஒத்துக்கொண்டுள்ளது.

ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை மதிக்காமல் தன்னிச்சையாக நடந்து கொள்ளும் தோட்ட நிர்வாகங்களுக்கு எதிராகப் போராடும் தொழிலாளர்களுக்கு நாம் துணையாக இருந்து செயல்படுவோம்.

அதுமட்டுமின்றி தொழிலாளர்களுக்கு பங்கத்தை விளைவிக்கும் எந்தவிதமான நிர்ப்பந்தங்களுக்கும் நாம் சம்மதிக்க போவதில்லை என்பதைக் கம்பனிகள் புரிந்துகொள்ள வேண்டும். இந்த அடிப்படையிலேயே கொட்டியாகலை தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைக்கு தற்காலிகமாகத் தீர்வுகாணப்பட்டது.

கடந்த மாதம் 19 ஆம் திகதி முதல் இந்தத் தோட்டத்தின் நிர்வாகி ஒரு நாளைக்கு 16 கிலோ கொழுந்து பறிக்க வேண்டும் என்றும் முடியாத பட்சத்தில் முழுமையான ஒருநாள் சம்பளம் வழங்கப்படமாட்டாது என்று அறிவித்ததையடுத்தே தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர்.

இதையடுத்து கொழும்பில் பேச்சுக்கள் நடந்தபோதும் சுமூகமான முடிவு எட்டவில்லை. இந்தநிலையில் கடந்த மாதம் 29 ஆம் திகதி தோட்டத்திற்கு சகல தொழிற்சங்க தலைவர்களும், பிரதிநிதிகளும் அட்டன் பிரதி தொழில் ஆணையாளர் கீர்த்தி சிங்கவினால் அழைக்கப்பட்டு பேச்சு நடத்தப்பட்டதை அடுத்து தொழிலாளர்கள் வேலைக்கு செல்வதற்கு சம்மதித்தனர்.

பெரிய தொழிற்சங்கம் என்று கூறிக் கொள்பவர்களே இந்தப் பிரச்சினையை உருவாக்கியவர்கள்.

எனினும், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் இந்த விடயத்தில் தொழிலாளர்களின் சுக துக்கங்களுக்கு இசைவாகவே நடந்து கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் தோட்டங்களைப் பாதுகாப்பதில் அக்கறை காட்ட வேண்டும் - என்றார். (ச)

## பிள்ளைகளுக்கு இறுக்கத்தைக் குறைத்து சுதந்திரமாக வாழ்வதற்கு வித்திடுங்கள்

### திருமலை பிரதேச செயலாளர் சசிதேவி வேண்டுகோள்

திருகோணமலை,ஒக்.10

பிள்ளைகளுக்கு இறுக்கத்தைக் குறைத்து சுதந்திரமாக வாழ வித்திடுங்கள் என்று திருமலை பிரதேச செயலாளர் சசிதேவி ஜலதீபன் தெரிவித்துள்ளார்.

திருமலை மாதுமை அம்பாள் வித்தியாலயத்தில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

புன்னகை பூத்திருக்கும் இந்தச் சிறுவர்கள் என்ற பூக்களுக்கு மத்தியில் உரை நிகழ்த்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் மிக மகிழ்ச்சியடைகிறேன். இந்த உலகில் வஞ்சகமறியா உள்ளங்களைக் கொண்டவர்கள்தான் இந்தச் சிறுவர்கள். சமுதாயத்தில் நாம் பாதுகாக்கவேண்டிய மிகப் பெரிய சொத்து இவர்கள்தான்.

பிள்ளை களின் இயலுமை, இயலாமைகளை அடையாளம் காணுங்கள். அட்டவணைபோட்டு அவர்களை வழிநடத்தும் முறைகளைத் தவிர்த்து அவர்களை சுதந்திரமாக விடுங்கள். அவர்கள் குழந்தைகள். இந்தத் தினத்திலிருந்து அவர்களின் சுதந்திரத்திற்கு வித்திடுங்கள் - என்றார். (ச)

## மொனராகலையில் திடீர் சூறாவளி; நான்கு வீடுகள், பாடசாலை சேதம்

மொனராகல,ஒக்.10

மொனராகலை, தம்பகல்ல பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை வீசிய சூறாவளியால் நான்கு வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் தம்பகல்ல பியரத்ன வித்தியாலயத்தின் கட்டடம் ஒன்றும் முற்றாகச் சேதமடைந்துள்ளது என்று மாவட்ட அனர்த்த நிவாரண முகாமைத்துவ அதிகாரி ரவீந்திர புஷ்பகுமார தெரிவித்தார். இதன்போது பாடசாலை ஆசிரியர் விடுதியின் மீது மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததாகவும், உள்ளே இருந்த இரு பிள்ளைகளும் மயிரிழையில் உயிர் தப்பினர் என்று அவ்ர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## சீக்கிய இனத்தின் அறிமுகத்தை காக்கும் திருமலை சைவர்கள்



மூதூர், ஒக்.10

திருகோணமலையில் நவராத்திரியின் நிறைவான விஜய தசமி விழாவான கடந்த வியாழக்கிழமை கடந்த ஒன்பது தினங்கள் ஆலயங்களில் வைத்து பூஜிக்கப்பட்ட கும்பங்கள் விசேட அலங்காரங்கள் செய்யப்பட்டு வீதிகளில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.

உலகத்தில் சைவமக்கள் வாழும் எந்த ஒரு நாட்டிலும் இல்லாத மிக நீண்ட பாரம்பரிய வரலாற்றைக்கொண்ட இந்தக் கும்ப ஊர்வலம் இலங்கையின் திருகோணமலையில் மட்டுமே பழமை வாய்ந்த சமய கலாசார நிகழ்வாக நடைபெற்று வருகின்றது.

இந்தியாவின் சீக்கிய இனத்தவர்கள் திருகோணமலையில் வாழ்ந்த காலத்தில் விஜயதசமியை அடிப்படையாகக் கொண்ட கும்ப அலங்கார ஊர்வலம் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது எனப் புராதன செவி வழிக்கதை ஒன்று திருகோணமலையில் உள்ளது. எனினும், சீக்கிய இனத்தவரால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தச் சமய நிகழ்வு கடந்த வியாழக்கிழமை திருகோணமலையின் மிகச்சிறப்பான அடையாளமாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 153 பாடசாலைகளில் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க நடவடிக்கை

சப்ரகமுவமாகாணத்தில் 153 பாடசாலைகளில் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க மாகாண கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மாகாண கூட்டுறவு அமைச்சுடன் இணைந்து அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாணத்தில் 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகள் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச)



மட்டக்களப்பில் நடைபெறும் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியைக் கடந்த வெள்ளிக்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில்ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்துள்ளார். அருகில் சிவநேத்துரை சந்திரகாந்தன் உட்படப் பல பிரமுகர்கள் காணப்படுகின்றனர். (ச)

## தந்தையைத் தெரியாத பிள்ளைகளுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கல்

மூதூர், ஒக்.10

வெருகல் பிரதேசத்தில் தமது தந்தையையே தெரியாத பிள்ளைகளுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெருகல் பிரதேச செயலகத்தில் நடந்த பிரதேச சிறுவர் கண்காணிப்புக் குழுக் கூட்டத்திலேயே இதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக்கூட்டம் இடம்பெற்ற வேளை, தந்தையைத் தெரியாத மூன்று பிள்ளைகள் இனம்காணப்பட்டுள்ளனர். இவர்களின் பதிவு தொடர்பாக ஆராயப்பட்ட போதே இவ்வாறான முடிவு எடுக்கப்பட்டது. இதேவேளை, சிறுவர் தொடர்பான துஷ்பிரயோக பிரச்சினைகளில் பொலிஸாரையும் சற்று அக்கறை செலுத்துமாறு பிரதேச செயலாளர் வேண்டுகோள் விடுத்தார்.(ச)

## மாலையர்கட்டு கிராம மக்களின் தீராத அவலம்

நாவிதன்வெளி, ஒக்.10

போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாலையர்கட்டுக் கிராமத்துக்கான அடிப்படை வசதிகள் எதுவும் இதுவரை செய்துகொடுக்கப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்தகால யுத்த சூழ்நிலையால் பெரிதும் பாதிக்கப்பட்டு யுத்தம் ஓய்ந்த நிலையிலும் கூடச் சுகாதாரம், போக்குவரத்து, மின்சாரம் ஆகியவை எதுவும் இதுவரை நிறைவேற்றித்தரப்படவில்லை என்று மாலையர் கட்டுக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். அதேவேளை, மாலையர் கட்டுக் கிராமத்தையும் 16ஆம் கொலனியையும் ஊடறுத்துச் செல்லும் மூங்கிலாற்றுக்கு இதுவரை பாலம் அமைக்கப்படவில்லை.

இதனால் மழை காலங்களில் நீண்ட தூரம்சுற்றிச் சென்றே தங்கள் தேவைகளை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது என்றும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ச)

# தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் 515 ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை

### அமைச்சர் தயாசிறி திசேரா தெரிவிப்பு

நுவரெலியா,ஒக்.10

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 515 ரூபாவாக் அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அரச வளங்கள் மற் றும் பெருந்தோட்ட அமைச்சர் தயாசிறி திசேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

லிபியாவில் நிலவும் பிரச்சினையால் மத்தியகிழக்கு நாடுகளுக்கான தேயிலை ஏற்றுமதி கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதன் காரணமாக பெருந்தோட்டக் கம்பனிகளினதும், மக்கள் பெருந்தோட்டங்களினதும் வருமானம் வெகுவாகக் குறைந்துள்ளது.

எனினும், முதலாளிமார் சம்மேளனத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் உடன்பட்ட நாளாந்த சம்பளமான 410 ரூபாவை 515 ரூபாவாக அதிகரிப்பதற்கான பேச்சுகள் நடைபெற்று வருகின்றன. அதேசமயம் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தித் தோட்டங்களில் பணிபுரிந்து உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு வழங்க வேண்டியிருந்த நிலுவைப் பணமான ஒரு கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளது - என்றார். (ச-5)



# வடமர

# வல்லிபுர ஆழ்வார் தே

## ஆசியுரை

துன்னையூர் வல்லிபுரத்தில் எழுந்தருளியுள்ள மாயவன் சேத்திரத்தில் இடம்பெறும் மகோற்சவ தொடரிலே தேர் உற்சவம் ஒக்ரோபர் 10 ஆம் நாள் இடம்பெறும் போது அன்று ஒரு சிறப்பு மலர் வெளியீட்டுக்கு ஓர் ஆசியுரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆண்டவனை வழிபடுவதில் எமது அடியவர்கள் பல முறையைக் கையாள்கின்றார்கள். நேரடியாக சமுகம் தந்து ஆலயத்தில் தரிசனம் செய்யும் பாக்கியத்தை பெறாதவர்கள் ஆண்டவனை நினைவு கூரும் ஒரு கருவியாக இச் சிறப்பு மலர் விளங்கும் என்பது எனது நம்பிக்கை. அதை எல்லோரும் பெற்று பயனடைய வேண்டும். மாயவனின் அருளைப் பெற வேண்டும் எனப் பிரார்த்தித்து 'உதயன்' நிறுவனத்தாரின் இந்த முயற்சிக்கு நன்றி கூறி இப்பணி தொடர வேண்டும் எனவும் எம்பெருமான் அருள் கிடைக்கும் எனவும் கூறி விடைபெறுகின்றேன்

**இ.அன்னலிங்கம்.**

## மகத்துவம் நிறைந்த பெருவிழா



இலங்காதீபத்தின் வடபகுதியில் அமைந்துள்ள புண்ணிய பூமியாம் யாழ்ப்பாணத்தின் வடகரையில் பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் தேர் உற்சவம் இன்று நடைபெறுகின்றது.எல்லா அடியார்களாலும் பக்தியோடு ''மாயவன்'', ''சக்கர ஆழ்வார்'' என்று அழைத்து வழிபடுகின்ற இந்த ஆலயத்தின் இன்றைய தேர்த் திருவிழா மகத்துவம் நிறைந்த ஒரு பெருவிழாவாகும். ஊர் கூடித் தேர் இழுக்கும் பக்தி பூர்வமான காட்சி அற்புதமானதாகும்.''கண்ணா காப்பாற்று'', ''மணிவண்ணா காப்பாற்று'', ''மாயவா'' ''கோவிந்தா'', ''ஸ்ரீ கோவிந்தா'' என்று பக்தி கோஷத்துடன் அடியார் வடம்பிடித்து இழுத்து வரும் இரதோற்சவம் பார்ப்பதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

சக்கர ஆழ்வாருடைய பேரருட்கடாட்சம் எல்லா அடியவர்களுக்கும் கிடைக்க அவன் அருளையே நாடி நிற்போமாக.

**இ.வரதீஸ்வரன்**
**பிரதேச செயலாளர், பருத்தித்துறை.**

## பிரதம குருமாரின் ஆசிகள்



இதம் தே நாத பஸ்காய நாப ₄ க்தாய கதா₃சந!
ந சா சுஸ்ரூஷவே வாச்யம் நசமாம் யோ அப்ய₃ ஸூயதி 11 ஸ்ரீமத்பகவத் கீதை 18 ஆம் அத் 167
உனக்குக் கூறப்பட்ட இந்த ரஹஸ்யமான கீதோபதேசத்தை ஒருபோதும் தவம் இல்லாதவனுக்கு சொல்லக்கூடாது, பக்தி இல்லாதவனுக்கும் சொல்லக் கூடாது கேட்க விருப்பமில்லாதவனுக்கும் சொல்லக் கூடாது எவன் என்னிடம் குறைகாண்கிறானோ அவனுக்கும் சொல்லக்கூடாது!!

அவனருளாலே அவன்தாழ் வணங்கி

சரித்திரப் பிரசித்தி பெற்ற, எல்லாம் வல்ல ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலின் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் புரட்டாதி 09 ஆம் திகதி (26.09.2011) திங்கட்கிழமை அன்று கொடியேற்றத்துடன் மிகவும் இனிதே ஆரம்பமாகி அமைதியான முறையில் திருவிழாக்கள் தொடர்ந்து நடைபெற்று இன்றையதினம் சங்காரத்தொழிலைக் குறிப்பதாகிய இரதோற்சவம் நடைபெறுகின்றது.

நித்திய பூசைக் கிரியைகளில் ஏற்படுகின்ற தவறுகளைப் போக்கவே ''நைமித்திகம்'' எனப்படுகின்ற ''மகோற்சவம்'' ஆலயங்களிலே வருடந்தோறும் நடத்தப்படுகின்றன. இறைவனது ஐந்தொழிலைக் குறிப்பதாகவும் மகோற்ச்வம் இடம் பெறுகின்றது. அழித்தல் தொழிலைக் குறிப்பது ''இரதோற்சவம்'' எனப்படுகின்ற தேர்த்திருவிழாவாகும். ஆன்மாக்களின் தீய செயலைத் தூண்டுகின்ற ''ஆணவம்'' எனப்படுகின்ற தீய குணத்தை அழிப்பதைக் குறிக்கும்.

அக்கினி வடிவாயமைந்த திருத்தேரில் சக்கர மாயவன், விநாயகர், மகாலக்குமி சமேதராக வீதிவலம் வரும் போது ஆன்மாக்களைப் பீடித்துள்ள ஆணவ மலம் அழிக்கப்படுகின்றது.

எல்லாம் வல்ல காத்தற் கடவுளான சக்கர மாயவன் திருவருளினாலே அனைத்து மக்களினதும் துன்பதுயரங்கள் நசிவடைந்து புண்ணியம் மேலோங்கி சுபீட்சம் நிறைந்த நல்வாழ்வும், ஒளிமயமான எதிர்காலமும் தோன்றும் என்பது உறுதி.

அனைத்து மக்களின் நலன் வேண்டி மாயவனை நாமும் பிரார்த்தனை செய்து சக்கர மாயவனது நல்லாசிகளையும் எமது நல்வாழ்த்துக்களையும் கூறிக் கொள்கின்றோம்.

**கண்ணன் கழலடி போற்றி**
**ஸ்ரீஆழ்வார் பீடம்**
**ஸ்ரீ வல்லிபுரக் கோயில்**
**புலோலி.**

**பிரம்மஸ்ரீ ச.க. சுதர்சனக்குரு**
**பிரம்மஸ்ரீ ச.க.புருஷோத்தமக் குரு**
**பிரதம குருமார்கள்.**

**மகோற்சவ குரு**
**இளைய குரு**
**பிரம்மஸ்ரீ சு.கணபதீஸ்வரக் குரு.**

வெஸ்ரேன் யூனியன் பணப் பரிமாற்றல் சேவை மூலம் வெளிநாட்டில் உள்ள உறவுகளிடம் இருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்
**புதிய அம்பிகா** பல்பொருள் வாணிபம்
இல.33, பிரதான வீதி, நெல்லியடி, தொ.பே.: 2263139, 0212264197
New.Ambega@yahoo.com

**SRIMURUGAN MEDICAL STORES**
Main Street, Point Pedro

ஐஸ்கிறீம் வகைகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்ளல்லாம்
**நியூ சந்திரா கிறீம் ஹவுஸ்**
கந்தரோடை மேற்கு, சுன்னாகம்.
தொ.பே 0775008709.

★ குமரன் விபூதி ★ துர்க்கா பத்தி
★ சாயி சுகந்தா ★ ரோஸ் பத்தி
வாழ்க்கை முழுவதும் வளமுடன் வாழ
★ வளர்ந்துவரும் குழந்தைகளுக்கும்
★ கர்ப்பிணித் தாய்மார்களுக்கும்
★ பாலூட்டும் தாய்மார்களுக்கும்
★ போஷாக்கு குறைவான குழந்தைகளுக்கும்
அண்ணா கறிமிளகாய்த் தூள்
அண்ணா கோப்பி
அண்ணா அப்பம் மா
அண்ணா பற்பொடி
அண்ணா அரிசி மா
அண்ணா தோசை மா
**"ஜீவாகாரம்"**
தேக ஆரோக்கியத்துக்குப் போஷாக்கு நிறைந்த ஜீவகாரம்
இல்லத்தரசிகளே! அண்ணா கோப்பி தயாரிப்புகளை வாங்கி பாவித்து இன்புறுங்கள்
**அண்ணா தொழிலகம் இணுவில்**
தொ.பே.: 0212223560, 0217200800
அண்ணா உற்பத்தி தற்போது விற்பனையில்
திருமுருகண்டி ஏ-9 வீதி, கிளிநொச்சி

**கஜமுகன் ஹாட்வெயார்**
பிரதான வீதி, நெல்லியடி
தொ.பே.: 0213008554, 0773211276
கட்டப் பொருள்கள் எம்மிடம் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச் சத்துக்கள் மற்றும் பாம்மா வகைகள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
**ஆர்.வி.ஜீ. மருந்தகம்**
504,ஆஸ்பத்திரி வீதி, (O.P.D. முன்பாக) யாழ்ப்பாணம், தொ.பே.: 0212222129
**R.V.G.** ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம், தொ.பே.: 021 222 9806

**நாவலர் புத்தகசாலை,**
மந்திகை, புலோலி,
பாடசாலை புத்தகங்கள், பத்திரிகைகள்,
அன்பளிப்பு பொருள்கள்.

**சாரங்கா நகைமாடம்**
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.222 6972, 8917 FAX: 8869
**சிவா நகைமாடம்**
இல.14, கண்டி வீதி, நவீன சந்தை, சாவகச்சேரி,
தொ.பே.0214922398
இணை நிறுவனம்:
**சாரங்கா ஜூவல்லறி**
இல.55, செட்டித்தெரு,கொழும்பு - 11,
TEL: 2434971. FAX: 0112434071

**L கிருபா லேணர்ஸ்**
(சாரதி பயிற்சிப் பாடசாலை)
பஸ் நிலையம் முன்பாக, சாவகச்சேரி தொ.பே.: 021 4923202, 021 3201818
மகாத்மா வீதி, நெல்லியடி, தொ.பே.: 021 3006550,0214923201
விசுவமடு, தொ.பே.: 021 3201515

முற்பதிவு செய்து சிற்றுண்டி வகைகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், பிஸ்கட் வகைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
**லிங்கம் கிறீம் ஹவுஸ்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ சுசிலா ஆபரண மாளிகை**
**Sri Susila Gold House**
239, Main Street, Poin Pedro.
T.P.: 0777210206, 0213207437
239, பிரதான வீதி,
பருத்தித்துறை.

**V.நாகேஸ் கிறீம் கவுஸ்**
குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள்
விசேட வைபவங்களுக்கும் மொத்தமாக பெற்றுக் கொள்ள நாடுங்கள் V.நாகேஸ் கிறீம் கவுஸ்
தொடர்புக்கு: முத்துமாரி அம்மன் கோயிலடி,
அல்வாய் வடக்கு அல்வாய். T.P:0778285574
உரிமையாளர் K.தர்மானந்தம்

**Royal Electronic Electrical**
Dealers in Electronic Pare Parts
No.6, Point Pedro Road,Nelliady. T.P.: 0212264789

தரமான குளிர்பானங்களை சுவையாகப் பெற்றுக்கொள்ள
**மது கிறீம் ஹவுஸ்**
சங்குவேலி வடக்கு, மானிப்பாய்,தொ.பே.: 0774206465

**Raj Net Com**
★ Net Cafe ★ Mobile Accessories & Mobile Sales
★ Computer Sales & Repairs, Services
★ Computer Cours ★ Print, Photocopy Scanning - Lamination
*Mail - Aravinth2287@yahoo.com skype Rajnetcom*
*"750" Road, Imayanan. T.P.: 021226 2820/ 2287*
*Mobile - 0789130446*



# ...ராட்சி
# ...ர்த் திருவிழாச் சிறப்பு மலர் - 10.10.2011

## பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



வடமராட்சிப் பிரதேசத்தில் அமைந்துள்ள வரலாற்றுப் புகழ் பெற்ற அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலின் 2011 ஆம் ஆண்டுக்கான மஹோற்சவம் சிறப்பாக நடைபெற்று தேர்த்திருவிழா இன்று மிகவும் பக்திப் பரவசத்துடன் கொண்டாடப்படுகின்றது. யாழ். மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும், ஏனைய மாவட்டங்களிலிருந்தும் இலட்சக் கணக்கான அடியார்கள் இவ் ஆலயத்தின் தேர், தீர்த்த உற்சவங்களைக் காண்பதற்காக வருகை தருவது குறிப்பிடத்தக்கதாகும். பாற்கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாமன் மக்களுக்கு சகல செல்வங்களையும் வழங்கி நிறைவான வாழ்க்கை வாழ்வதற்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார். தீர்த்த உற்சவத்தின் போது வங்கக்கடலில், நீராடி, வேண்டுதல்களை மேற்கொள்ளும் அடியவர்களின் துயர்துடைப்பதுடன், வாழ்க்கை மேன்மையுறவும், வெற்றியைப் பெற்றுப் பேரின்பப்பெருவாழ்வு வாழவும் மாயவனின் அருட்கடாட்சம் அடியவர்களுக்கு கிடைத்து வருகின்றது.

தன்னை நாடி வருபவர்களுக்கு ஆனந்தத்தை வழங்கி அவர்களின் வேண்டுதல்கள் எல்லாம் நிறைவு செய்யும் கண்ணனின் அருளாசி அனைவருக்கும் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து எம் நாட்டுக்கும் மக்களுக்கும் சுபீட்சமும், கீர்த்தியும் பேரின்ப பெருவாழ்வும் கிடைக்க வேண்டி மாயவனின் பாதக் கமலங்களைப் பணிந்து நிற்கின்றேன்.

சி.சத்தியசீலன், பிரதேச செயலர், கரவெட்டி.

## நல்லை ஆதீன குருமுதல்வரின் அருளாசிச் செய்தி



வரம்பல நல்கிடும் வல்லிபுரத்தாழ்வார் இன்று சித்திரத்தேரிலே சிங்காரப் பவனி வருகின்றார். அழகான தேரிலே அடியார்க்கருளும் பெருமானாக ஸ்ரீ சக்கரப் பெருமானாக ஆரோகணித்துத் திரு வீதிவலம் வருகின்ற அற்புதக் காட்சி ஆனந்தமயமானது.

காத்தற்கடவுளை ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியானவர் இன்று வல்லிபுரத்திலே வணங்கிடும் அடியார்க்கு வரமருள வருகின்றார். இந்தத் தேர்த்திருவிழா நன்னாளில் மாயவன் மது சூதனன் மக்கள் எல்லோருக்குமே மங்களகரமான சுபிட்சமான சுக வாழ்வைத் தரவேண்டுமென்று பரந்தாமனின் பத்மபதம் பணிந்து அருளாசி நல்கி உளமாரப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம். ஸ்ரீ சக்கரப் பெருமான் இன்றைய ரதோற்சவ நன்னாளிலே நாட்டில் வாழும் சகலஇன மக்களும் சந்தோஷம் நிறைந்த சமாதான சக வாழ்வை வாழ்வதற்கு வரம் நல்கியருள் புரிய வேண்டுமென்று அவர் திருவடிகளைப் பணிந்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,இரண்டாவது குருமஹாசந்நிதானம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.

## வணங்கினோர்க்கு வரமருள வருகின்றான் வல்லிபுரத்துறையும் வாசுதேவப்பெருமான்



வல்லிபுரக் கோயில் வருடாந்த உற்சவத்திலே இன்று ரதோற்சவம். வருந்தி அழுது வழிபட்டு வணங்கினோர்க்கு வரமருள்வதற்காக இன்று சித்திரத்தேரேறி வருகின்றான் வல்லிபுரத்துறையும் வாசுதேவப்பெருமான்.

காத்தற்றொழில் புரியும் கடவுளான ஸ்ரீ மகா விஷ்ணு மூர்த்தியானவர் இன்று வல்லிபுரத்திலே வண்ணத் தேரிலே வலம் வருகின்ற அதியற்புதத் திருக்காட்சி பக்தி பூர்வமானது.வழிபடும் அடியார் துயர் போக்கும் வல்லிபுரத்து மாயவன் இன்று அழகேயுரு வெடுத்தாற்போன்று அணிவீதியில் அருட்காட்சி தந்து எல்லோர்க்கும் மகிழ்ச்சி நிறைந்த மங்கள வாழ்வை நல்கவேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து ஆசிகூறி வாழ்த்துகின்றோம். பரந்தாமனின் பக்தர்கள் பார்போற்ற வாழ அவன் திருவடிகளையே அர்ச்சித்து வணங்கி வாழ்த்தி நிற்கின்றோம்!

''வல்லிபுரச் சக்கரத்தான் வளமுடன் வாழ அருளட்டும்!''

சிவநெறிக்கலாநிதி,இராசையாஸ்ரீதரன்.

**வசந்தம்**
ம.ம.வி.வீதி, நெல்லியடி,
021 226 3105

**நெற் சோன்**
உடுப்பிட்டிச் சந்தி,உடுப்பிட்டி.
021 226 3508

நெற் சேவை போட்டோ பிரதிகள், டோனர்(Toner), தொலைபேசி வசதிகள், DHL பொதி அனுப்புதல்.

**செ.இராசரட்ணம்**
நீர் இறைக்கும் இயந்திரங்கள் விற்பனையாளரும் உதிரிப்பாக உற்பத்தியாளரும்.
S.R.Pபம்புகள்
கே.கே.எஸ்.வீதி கோண்டாவில், தவாடி.

**ஸ்ரீ.காளி கிறீம் கவுஸ்**
சிறந்த குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள் விசேட வைபவங்களுக்கு மொத்தமாகவும் பெற்றுக் கொள்ள வேண்டிய இடம்.
கட்டுவன் வீதி,மல்லாகம். T.P:0770870516

**சரவணா ரெக்ஸ்**
Saravana Tex
வாடிக்கையாளர் தொடர்புகளுக்கு 0214650255
கிளை 1 - 526,529, பருத்தித்துறை வீதி,நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே, தொ.நகல்:021 222 1723.
கிளை 11 - 770, 772, கே.கே.எஸ் வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்,
தொ.நகல் 021 222 0421தொ.பே:077 814 6931.
மின்னஞ்சல்:Nallur.saravana@gmail.com.

**ராஜா சுவைச்சோலை**
பிரதான வீதி-பருத்தித்துறை,
காலை,மதிய,இரவு உணவு வகைகள், சிற்றுண்டி வகைகள் என்பன பெற்றுக் கொள்ளலாம்.
உரிமையாளர்:இ.விஜயராஜ்(ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்)

சகல விதமான கட்டடப்பொருள்களையும் நியாய விலைக்கு குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ள
**ரமணன்** கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
525, 528, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம், 021 222 9296.

### வைகுந்தா! சக்கரரூப மாயவா!

தீச்சுடர் அசைந்து வருவதுபோல,
ஆணவமலமழிக்க திருத்தேரேறி,
அவனிகாக்க வந்தருளும் மாயவா!
வடம்பிடித்தே இழுத்து - எம்
பாவம் போக்கி வளங்காண்போம்!
வைகுந்தா! சக்கர ரூப மாயவா!

மாருதி ஆவரங்கால்

பலசரக்கு வியாபாரம்
**மதுஷன் ஸ்ரோர்ஸ்**
பதிவு இல:KVD/0168
V.V.T உடுப்பிட்டி.T.P:0213213080

60 ஆவது பொன் ஆண்டு
**Raju Stores**
67,69,Kasthuriar Road, Jaffna.T.P:2225224

**CHITHAMPARAPPILLAI**
BOOK DEPOT
Nelliady, Karaveddy.Tel.0212263223
*Dealers in Stafionery, School Books, Printing Papar Quality Input Product and Etc.*

**மருதம் பெயின்ற் டீலேர்ஸ்**
(நெல்லியடி பொலிஸ் நிலையம் முன்பாக)
162, பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

**சாருகா செரமிக்**
பிரதான வீதி, நெல்லியடி.

உங்கள் முன்னேற்றத்துக்கானவங்கி
**ஹற்றன்நஷனல்வங்கி** நெல்லியடி
HNB

### துலங்க அருள் நிறைவாகச் சொரிவாய் கண்ணா

நீதியான அருளினையிந் நிலத்தோர் வாழ
நிதம் வாரும் வல்லிபுரத் திறையே தேவா
நீதியான வசந்தமண் டபத்தி ருந்தே
நலிவோட ரதமேறும் நாதா நாளும்
கதிவேறு யிலையென்றுன் கழல்நி னைந்தே
காத்திடையா என்றுனது கவினார் நாமத்
துதிபாடு மடியருறு துயர(ந்) தீர்த்து
துலங்க அருள் நிறைவாகச் சொரிவாய் கண்ணா

''ஹரி ஓம் நமோ நாராயணாய''
நாம ஜெபம் செய்வோம்
நமனை வசம் செய்வோம்

க.கு.க சிவபாலன்
அடியாருக்கு அமுதூட்டும் அண்ணலார்

### கும்பிட்டவர் குறைதீர்க்க தேரேறி வருவாய் வல்லிபுரா!


கும்பிட்டவர் குறை தீர்க்க
வல்லிபுரப் பதியமர்ந்த
கோகுல நாதா!
சித்திரத் தேரேறி வந்திடையா
தேச நலன் காத்திடையா!
அன்று திரௌபதை
மானம் காக்க
திருவுளம் கொண்ட கண்ணா!
இன்று எம் குலப் பெண்கள்
சுதந்திரமற்று சொந்த மண்ணில்
துகிலின்றி நிதம்
துவள்வதைப் பாராய்!
புல்லாங்குழல் இசையாலே
புவியெல்லாம் மயக்கிய
முரளி மனோகரா!
வெண்ணெய் திருமத்தின்ற
வேணு கோபாலா!
உன் பொன்னடிகள்
சரணமடைந்தோம்
புன்மை தீர்த்து ஆட்கொள்வாய்
புவனமேழும் காத்திடுவாய்!

கவியாக்கம்: குறிஞ்சிக்கவி செ.ரவிசாந்
வீரமனை, குப்பிளான்.

### தேரேறி வருவாய் தேவே!

வேள்விகள் ஒருபுறமும் வேதியாக ளியற்றும்
மேன்மைகள் மிகத்தங்கும் மேலாம் தலமமர்ந்த
வல்லிபுர நாயகனே வரதீஸ்வரா வகுக்க வொண்ணா
பல்லூழி காலஞ்செய் பாழ்வினைகள் பாற
அல்லலறுத் தெம்மை ஆண்டருள நாளும்
பல்கிப் பெருகுமுந்தன் பக்தர்களைக் காத்திட
சொல்லினு மடங்கொனாச் சுகக்கடலி வாழ்த்த
எல்லையிலாக் கருணையோ டேறிவருவாய் தேரில்!

கலாபூஷணம் மு.தணிகாசலம்
கற்கோவளம்.



வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி மாணவி சொரூபிகா ஸ்ரீஜீவா இலங்கை சீனசங்கம் நடத்திய ஆங்கில மொழி மூலமான கட்டுரைப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்று கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் அமைச்சர் டி.யூ.குணசேகரவிடம் பரிசில் பெறுகிறார். இவர் வட்டு கண்ணகை அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவியும் ஆவார். (ம)

# சிறார்களின் கல்வி வளர்ச்சி நிலையில் கல்விச் சமூகத்தின் பங்களிப்பும் தேவை

## கற்சிலைமடு அ.த.க. அதிபர் உரை

யாழ்ப்பாணம், ஒக்.10

சிறார்களின் கல்வி வளர்ச்சியில் கல்விச் சமூகத்தின் பங்களிப்பும் பெற்றோர்களின் கண்காணிப்பும் இன்றியமையாததாக உள்ளன.

இதன்மூலம் சிறந்த எதிர்கால சமூகத்தை சிறந்ததாக உருவாக்குவதுடன் சிறார்களின் நலன்களைப் பேண முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் சி.நாகேந்திரராசா.

கற்சிலைமடு பண்டார வன்னியன் முன்பள்ளியின் சிறுவர்தின நிகழ்வு முன்பள்ளியின் நிர்வாகத் தலைவர் ரஞ்சித்குமார் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காகவும் அவர்களின் செயற்பாடுகளை வழிப்படுத்தும் நோக்கிலும் சிறுவர் தின நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையும் பல அமைப்புகள் ஊடாக சிறுவர் மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

முன்பள்ளி மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் அக்கறை கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இதற்கு பெற்றோர்கள் முன்பள்ளி மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் கூடிய கவனம் எடுக்க வேண்டும்.

கல்விச் சமூகத்துடன் ஒத்துழைப்பு வழங்கி அவர்களின் கற்றல் செயற்பாடுகளை மட்டுமல்லாது வினைத்திறன்மிக்க ஆளுமைச் செயற்பாடுகளுக்கும் ஊக்கம் கொடுக்க வேண்டும்.

அத்துடன் கலாசார விழுமியமான பண்புகளையும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

சிறந்த சமூகத்தை மட்டுமல்லாது சிறார்களின் வாழ்வியலை சிறந்ததாக மாற்றுவதற்கும் இத்தகைய செயற்பாடுகள் முன்னுதாரணமாக அமையும்.- என்றார். (ம-313-500)

# இறுவட்டுகளில் பாடசாலையின் வரலாறு வெளியிடுவது முன்னேற்றச் செயற்பாடு

## துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.10

நவீன காலங்களுக்கு ஏற்ப பாடசாலையின் வரலாறுகளை இறுவட்டு வடிவில் வெளியிடுவது பாடசாலையின் வரலாற்றைப் பாதுகாப்பதற்கான முன்னேற்றச் செயற்பாடுகளாகும்.

இது காலகாலமாகப் பாதுகாக்கப்படுவதுடன் எதிர்கால சந்ததியும் பயன்பெறக் கூடியதாகவும் இருக்கும்.

இவ்வாறு தெரிவித்தார் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன்.

முல்லைத்தீவு, மல்லாவி மத்திய கல்லூரியின் பொன் விழா நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ''எம்மினிய கல்லூரி'' எனும் தலைப்பில் இசைத் தட்டு வெளியீடு செய்யப்பட்டது.

இதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

பாடசாலைகள் தமது பாடசாலையின் வரலாறுகளை இசைத்தட்டு வடிவில் வெளியீடு செய்வது கல்லூரியின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது.

இத்தகைய முயற்சிகளைப் பின்தங்கிய பாடசாலைகள் ஒவ்வொன்றும் முன்னெடுக்க வேண்டும்.

இது பாடசாலையின் வரலாறுகள் பதிவுகளாகுவதற்கு ஆதாரங்களாக அமையும்.

அத்துடன் நவீன கால சூழ்நிலைகளில் வாசிப்புத் திறன் அற்றுப் போய்விட்டது. இதனால் இறுவட்டுகள் பயனுள்ளதாக அமையும்.- என்றார். (ம-410- 313)

## பதவி உயர்வும் நியமனமும்

யாழ்ப்பாணம், ஒக்.10

யாழ்ப்பாணம் விவசாய (விரிவாக்கம்) பணிப்பாளராக கடமையாற்றிய எஸ். சிவகுமார் மகாண விவசாயப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார். அவரின் இடத்துக்கு முல்லைத்தீவு விவசாய (விரிவாக்க) பணிப்பாளராக பதவி வகித்த கி.ஸ்ரீபாலசுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார். (ம-7)

## ஓய்வுபெற்றுள்ள பேராசிரியர்கள்

யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர்கள் இருவர் 65 வயதைப் பூர்த்தி செய்த நிலையில் ஓய்வு பெற்றுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நீண்ட காலமாகப் பணி செய்த பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் இருவர் தமது பல்கலைக்கழக வாழ்வில் இருந்து கடந்த 30 ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றுள்ளனர்.

அந்த வகையில் கலைப்பீடத்தைச் சேர்ந்த தமிழ்த் துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா முகாமைத்துவப்பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் மா. நடராஜசுந்தரம் ஆகியோரே இவ்வாறு ஓய்வு பெற்றுள்ளவர்களாவர். (ம-319)

## விபுலானந்தர் தின கட்டுரைப் போட்டி முடிவு

அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்திய முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் நினைவு தின கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்றோர் விவரம்:

மேற்பிரிவு- ஜே.காயத்திரி, அளவெட்டி அருணோதயக் கல்லூரி, எஸ்.சத்தியபாலன்- ஸ்கந்தவரோதயக் கல்லூரி, நா. ஜனுஷாபிரியதர்ஷினி விஜயரத்தினம்- நீர்கொழும்பு இந்து மத்திய கல்லூரி.

மத்திய பிரிவு: கி.சுவஸ்திகா- புலோலி மெ.மி.த.கலவன் பாடசாலை, சி. இரேணு ஹாசனி- நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரி.

கீழ்ப்பிரிவு: கோக்கலே அம்ருதா, மானிப்பாய் சத்தியசாய் பாடசாலை, ச.சிவன்யா, பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, ர.சுஜேன்- புலோலி மெ.மி.த.க.பா, கி.சிந்துஜா விஜயரத்தினம்- நீர் கொழும்பு இந்து மத்திய கல்லூரி, சி.சுபஸ்ரீபன்- புலோலி மெ.மி.த.க. பாடசாலை. (ம)

# வட மாகாண ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

*(நேற்றையத் தொடர்ச்சி)*

தரம் 8- சயந்தி மகாலிங்கம்(யா/கைதடி நாவற்குழி அ.த.க.பா.), உதயமூர்த்தி தர்ஷனா (யா/வட மத்திய பெண்கள் கல்லூரி), பிரியங்கா பரம்சோதி (வவுனியா/இறம்பைக்குளம் அ.ம.வி)

தரம் 9- கணேசமூர்த்தி கீர்த்திகா (கிளி/இந்துக் கல்லூரி), ஜெயசக்தி சிவலிங்கம் (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கிருஷாந்தினி தட்சனா (வவுனியா இறம்பைக்குளம் அ.த.க.பா)

தரம் 10 -அருள்ஷீபா ஸ்ரான்லி டெமில் லம்பேட் (மன்/செள். சேவியர் மகளிர் கல்லூரி), லக்ஷிகா ரமேஸ் குமார் (யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி), சிந்துஜா சிறிபாஸ்கரன் (யா/ யூனியன் கல்லூரி)

தரம் 11- சொரூபிகா பிறைசூடி (வவுனியா/சைவசிவப் பிரகாச மகளிர் கல்லூரி), ஆத்மிகா முருகையா (யா/இந்து மகளிர் கல்லூரி), சிவநாதன் நதூர்ஜா (யா/வட மத்திய கல்லூரி)

தரம் 12- ஐங்கரதாஸ் சந்திரிக்கா (யா/மெதடிஸ்த மகளிர் உயர்தரப் பாடசாலை), சோபனா நேசராஜ்(யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி), எம்.பகீரதி (சி.சி.த.ம.பா).

### உறுப்பெழுத்து

தரம் 3- அபிகைல் ரிகேஷா லினேனின் கிரெகோரி (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஏ.ஆர்.நிஷாரா (யா/உடுவில் மகளிர் கல்லூரி), எஸ்.பிரட்சகா (வவுனியா/ விபுலானந்தாக் கல்லூரி)

தரம் 4- தாரணி ராஜேந்திரன் (யா/சென். ஜோன் பொஸ்கோ வித்தி), ஜெனின்ஸ் ஜெனுஷா (மன்/சென்.சேவியர் மகளிர் பாடசாலை), மதுமிதா ரமணன் (யா/மகாஜனக் கல்லூரி)

தரம் 5- அதர்ஷினி திவாகரன் (யா/உடுவில் மகளிர் கல்லூரி), பவதாரணி சங்கரப் பிள்ளை ( யா/சென். ஜோன். பொஸ்கோ வித்தி), கிருஷியா ராஜமோகன் (மன்/ சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி)

தரம் 6- எஸ்.மதுஷாயினி (யா/உடுவில் மகளிர் கல்லூரி), ஜெகதீஸ்வரன் ஜெயதீபிகா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), பிரதிக்ஷஜினி பிரான்சிஸ் சேவியர் (மன்னார் முறுங்கன் ம.வி.), சிவந்தனா ரவீந்திரன் (மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி)

தரம் 7- பாலசுப்பிரமணியம் கௌசியா (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கரோலின் சினோவா ஜெயராஜா (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), சுந்தரமூர்த்தி நித்தியபூபதி (யா/ வட இந்து மகளிர் கல்லூரி)

தரம் 8- விசாகி சிவகுமார் (வவுனியா/ தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), பாஸ்கரன் சௌமியா (யா/ மெதடிஸ்த மகளிர் உயர்தரப் பாடசாலை), போல் -கெவி ( யா/ சென். பற்றிக்ஸ் கல்லூரி)

தரம் 9- ஜே. சலோமி ஜெபிதா (யா/ உடுவில் மகளிர் கல்லூரி), சரோன் திவ்யா துஷிதரன் (யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பாஸ்கரன் வினோஜன் (யா/ ஹாட்லிக் கல்லூரி)

தரம் 10- யசோதரன் ஹர்ஷிக்கா (கிளி/ மகா வித்தி), சக்தியா புவிராஜசிங்கம் (வவுனியா/ இறம்பைக்குளம் அ.ம.வி), தேனுஜா சாந்தகுமாரன் (யா/ இளவாலை ம.வி)

தரம் 11- பிரியங்கி கேசவ சர்மா (யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம்), ஆஞ்சலின் நீராஜா தேவராஜா (யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம்), காயத்திரி ரவீந்திரன் (யாழ்ப்பாணக் கல்லூரி)

*(வளரும்)*

# உளநலமான வாழ்வுக்கு உதவிடுவோம்

உலக உளநல நாள் ஒக்ரோபர் -10

இன்று உலக உளநல நாள். ஒருவரது ஆரோக்கியத்தில் அவரது உள ஆரோக்கியம் முக்கியமானதாக விளங்குகின்றது. தாயின் கருவறையில் இருக்கும் போதே குழந்தை ஒன்றின் உள்ளம் மலர்கின்றது. அந்தத் தாயின் உளமகிழ்வானது அந்தக் குழந்தையின் உளவளர்ச்சிக்கு வலுவூட்டுவதாய் அமைகின்றது.

அந்தத் தாயின் உள்ளம் பாதிக்கப்படும்போது காலப் போக்கில் பிள்ளையின் உளவளர்ச்சிப் பாதையில் தடைகள் ஏற்படவும் வாய்ப்புள்ளது.


இன்று எமது சமூகத்தில் உளம் சார்ந்த நன்நிலையை வெளிப்படுத்த முடியாத மனிதர்கள் எம்முடன் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் மீது எமது பார்வை எத்தகைய நிலையில் உள்ளது? அவர்களை உளவலுமிக்கவர்களாக மாற்றுவதற்கு நாம் நன்நிலையான மனப்பாங்குடன் செயற்பட முன்வரவேண்டும்.

இன்று எமது மக்களிடையே சமூக கலாச்சார சீரழிவுகள் மெல்லத்தோன்றி வருவதற்கு அடிப்படையாக அமைவதற்கு காரணமாக இருப்பது உளநலம் இல்லாதவர்களுடைய செயற்பாடுகள் தான் போல் உள்ளது. இந்நிலையானது எமது சமூக நன் நிலை வளர்ச்சிக்கு ஆரோக்கியமற்றதாகவே காணப்படும்.

இன்றைய மாணவ சமுதாயம் தொழில்நுட்ப உலகில் மூழ்கி தம்மை வளர்த்துக் கொண்டிருக்கின்ற நிலையில் ஒரு புறம் கணிசமானவர்கள் தொழில்நுட்ப உலகுக்குள் வீழ்ந்து அடிமைகளாகிப் போய் சுயசிந்தனை இழந்து சமூக அமைப்பில் ஆரோக்கியமற்ற நடத்தையை காண்பிக்கின்றார்கள். இந் நிலையைத் தவிர்ப்பதற்கு பெற்றோர்களும் பாடசாலைச் சமூகமும் விழிப்பாகச் செயற்பட வேண்டிய தேவை உள்ளது.

அத்துடன் பிள்ளைகளின் உளநல விருத்திச் செயற்பாடுகளில் முதியோர்களின் அனுபவப் பகிர்வுகளையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

உளநலமான சமுதாயம் மூலமாகவே நாம் இழந்த எமது நல்வாழ்வுக்கான பாதையை சிறப்பாக அமைத்துக் கொள்ளலாம் எனக் கருதி உளநலமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு இந்நாளில் உறுதி கொள்வோம்.



வை.சசிகுமார்
ஆசிரியர்
கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம்.

# சமூக உளநல மேம்பாட்டுக்கு ஏற்ற கட்டமைப்பு அவசியம்

மருத்துவர் யமுனானந்தா

யாழ்ப்பாணம், ஒக்.10

யுத்தத்துக்குப் பின்பான சூழலில் வடமாகாணத்தின் சமூக உளநல மேம்பாட்டுக்குச் சேவையாற்ற பலதுறை சார்ந்த சமூக கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று யாழ். மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி மருத்துவர் எஸ்.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

உளநல நாளை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்த உலக உளநல தினம் 1992 ஆம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்டு ஆண்டுதோறும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

உலகில் ஏழு நோய்கள் சிகிச்சை இன்றியும் விழிப்பு நடவடிக்கையின்றியும் காணப்படுகின்றன.

இதில் உளப்பிளவு நோய், நடத்தைப் பிளவு நோய் என்பனவும் அடங்குகின்றன.

இதனைவிட யுத்தத்துக்குப் பின்பான சூழலில் பெரும் எண்ணிக்கையான மக்கள் உளத்தாக்கங்களாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மனச்சோர்வு, தற்கொலை முயற்சி, போதைப்பொருள் பாவனை போன்ற வற்றால் அதிகமானோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவற்றை ஈடு செய்யவும் மக்களின் வசதிக்காகவும் வடமாகாணத்தில் சமூக உளநல மேம்பாட்டுக்கு பல்துறை சார்ந்த கட்டமைப்பு மிக அவசியம் எனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-26)


## நெஞ்சைவிட்டு நீங்காத நினைவுகளுடன் ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 18.04.1944
மறைவு: 27.10.2004

திதி: சதுர்த்தசி

அமரர் தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம்

ஏழாண்டுகள் ஆனதுவோ
எம்மைவிட்டு நீர் சென்று
ஓராயிரம் ஆண்டுகள் கடந்தாலும்
சீர்போற்ற வாழ்ந்த எம் தந்தையின்
சீர்முகம் எம் சிந்தையைவிட்டு
அகலாது

150, நெடுங்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

## வட இ.ச. சபைப் பரீட்சைகள் - 2011

வட இ.ச. சபையின் 2011 ஆம் ஆண்டு பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் 10.10.2011 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்ப முடிவுத் திகதி 05.12.2011 ஆகும். விண்ணப்பப்படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல் பிரதியுடன் ரூபா [ஐம்பது] 50/= மட்டும்.

விண்ணப்பப் படிவத்தை தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா 65/= பெறுமதியான காசுக்கட்டளையை [மணிஓடர்] உடன் சொந்த முகவரி எழுதப்பட்ட நீள் கடித உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைக் கட்டணத்தை சபையினால் வழங்கப்படும் 3 படிவத்தையும் பூரணப்படுத்தி இலங்கை வங்கியில் பணத்தைச் செலுத்தி அவர்களால் வழங்கப்படும் படிவத்தில் ஒன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவும்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வுநாடிகள்
வட இலங்கைச் சங்கீத சபை,
யாழ். வலயக் கல்வி அலுவலகம்,
செம்மணி வீதி, யாழ்ப்பாணம்
எனும் இடத்தில் பெற்றுக்கொள்ளவும்.

## ENGLISH CLASS

தரம் 01- O/Lவரை
ஆங்கிலத்தில் பின்தங்கியுள்ள மாணவர்களின் இக் கல்வியை முன்னேற்ற சிறந்த முறையில் இலகுவாக கற்பிக்கப்படும்.
தொடர்பு: 0773027375
யமுனா வீதி,
நல்லூர் யாழ்ப்பாணம்.

## வியாபார உதவியாளர்கள் தேவை (இருபாலரும்)

இம்மாதம் 12 ஆம் திகதி
தொடக்கம் 15 ஆம்திகதிவரை
நடைபெறும் நேர்முகப்
பரீட்சைக்கு சமூகமளிக்கவும்.

டயிட்டர்ஸ் ஸ்ரோர்ஸ்
லிபேட்டி பிளேசா,
புறக்கோட்டை. 0112439422

## German Swiss மொழிகள்

நீங்களும் சரளமான முறையில் கற்க வேண்டுமா?
தமிழ் மொழி பெயர்புடன் Audo Book விளக்கத்துடன் A1 வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன. A1 வகுப்பில் சித்தியடைந்தோர்க்கு A2 வகுப்புகளும் ஆரம்பமாகிறது.
No.10, Palaly Road, Jaffna.
0771604823

## USA - Green Card

அமெரிக்க விசா லொத்தர் விண்ணப்ப
விவரங்களுக்கு
Penguin Book Shop
B2 - F23 Bloemendhal Flats
Colombo - 13.
T.P: 0725110911, 0112438367

## வீடு வாடகைக்கு

யாழ் நகருக்குள் அமைந்துள்ள எட்டு அறைகளுடனும் வாகனத் தரிப்பிடம் மற்றும் சகல வசதிகளும்கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. அலுவலகப் பாவனைக்கு அல்லது குடும்பத்தினருக்கு மாத்திரம் தரப்படும்.
தொடர்பு:-சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.
தொடர்பு: 0778192190. (9533)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 34 வயதுடைய அரச உயர் பதவியில் (Staff Post) உள்ள நற்குணமுடைய மணமகனுக்கு பட்டதாரி மணமகள்தேவை (Engineer, Doctor, பட்ட தாரி)
தொடர்பு: 0750404371 (9511)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
கிருஸ்ணர் பரமேஸ்வரி



பிறப்பு: 15.08.1938 இறப்பு: 11.09.2011

திருமதி கிருஸ்ணர் பரமேஸ்வரி கடந்த 11.09.2011 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எமது அன்னையின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் நாளை (11.10.2011) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பிள்ளைகள்: குணரட்னம் (சாய்ராம்) குடும்பம், இராசசேகரம் குடும்பம், ஜெகராஜன் குடும்பம் (பிரான்ஸ்), செல்வராஜா குடும்பம் (டென்மார்க்), கதிர்காமசேகரம் (சேகர்).

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்:
17.07.1951

ஆண்டவன் அடியில்:
21.09.2010

திதி: 10.10.2011

அமரர் நாகமணி
அருளானந்தம்

குடும்பமென்ற விருட்சத்தின் ஆணிவேராய்
கொண்ட மனையாளுக்கு நற்கணவராய்
பெற்றெடுத்த மழலைகளுக்கு பாசமிகு அப்பாவாய்
பண்பும் பாசமும் ஊட்டி எம்மை
வாழ்வில் உயரவைத்த எம் தெய்வமே
உம் பாசம்தனை ஆணிவேராய்க்கொண்டு
உருவெடுத்ததே இந்த குடும்பமெனும் ஆலமரம்
எமைவிட்டு நீர் சென்று ஓராண்டு ஓடிமறைந்தாலும்
மறையாது உம் நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு
உம் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல அழகாபுரி
சோலை வைரவரை பிரார்த்திக்கின்றோம்.

செட்டியார்மடம், அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

## காணி விற்பனைக்கு

கச்சேரி கிழக்கு 2 ஆம் ஒழுங்கையில்(கவர்னர் அலுவலகத்துக்கு அருகில்)1¼பரப்புக் காணி நியாய விலையில் விற்பனைக்குண்டு. T.P:-0752126703

## மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

வலிகாம வலயத்தினுள் நல்லாசானாகத் தகைமை பெற்று
2011.10.06 இல் ஜனாதிபதி விருதினைப் பெற்றுக்கொண்ட
யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய ஆசிரியர்



**செல்வரட்ணம் றொகேஷியன்**

அவர்களை மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

நயப்புடனே சேவையாற்றி
தரணியிலே உயர்ந்து நின்று
நல்லாசான் விருது பெற்று
மக்கள் மனங்களிலே
இமயமாய் உயர்ந்துநிற்கும்
ஆசிரியப் பெருந்தகையே
பல்லாண்டு பணியாற்றி
பலவிருது நீவிர் பெற
உறவுகள் நாம் வாழ்த்துகின்றோம்.

**பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ மட்டுவில் வடக்கு, சந்திர மௌலீச
வித்தியாலய ஆசிரியை திருவாட்டி

**விஜயகுலராணி பரமேஸ்வரன்**

அவர்களுக்குச் சிறந்த ஆசிரியருக்கான "ஆசிரியர் பிரதீபா பிரபா" என்னும் கௌரவ விருது மேதகு ஜனாதிபதியால் 06.10.2011 அன்று வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையையொட்டி எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் அவரை மனதாரப்பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் எமது பாடசாலையின் வளர்ச்சியில் அவரது பணி சிறந்து, வாழ்வு மலர்ந்திட பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் அருளை வேண்டி அவரை வாழ்த்தியமைகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ மட்டுவில் வடக்கு,
சந்திரமௌலீச வித்தியாலயம்.**

## Queen`s English On Every one`s Lips

உயர்தர மாணவர்களுக்கான இலக்கணங்கள்,
உரையாடல்கள், கட்டுரைகள் போன்றன
அடங்கிய நூல் தொகுதியாகும்.
மாணவர்களுக்குப் பயன்தரும் வகையில்
அரிய பொக்கிஷங்களைச் சுமந்து நிற்கும்
இந்நூலைத் தவறவிடாதீர்கள்!
குறைந்த விலையுடன் நிறைந்த பல
பக்கங்களைக் கொண்ட பிரதி ஒன்றின்
விலை ரூபா 250/=

**கிடைக்கும் இடம்
பூபாலசிங்கம் புத்தகசாலை
No.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

நூல் ஆசிரியர்,
க. இராசநாயகம்,
உயர்தர வகுப்பு,
ஆங்கில ஆசிரியர்,
யாழ். இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சமய, சமூகப் பணியில் ஈடுபட்டு அரும்
பணியாற்றிக் கொண்டிருக்கும் செஞ்சொற் செல்வர்

**ஆறு. திருமுருகன்**

அவர்களுக்கு யாழ். பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தமைக்காக நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். அவர் மேற்கொள்ளும் இப்புனித பணி மேலும் உயர்ந்தோங்க வேண்டும் என்றும், இறை அருள் தொடர்ந்தும் அவருக்குக் கிடைக்க வேண்டும் என்றும் வாழ்த்துகின்றோம்.

யா/தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை, பாடசாலைச் சமூகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/சென்.ஜேம்ஸ் மகா
வித்தியாலயத்தில் கல்வி கற்று தரம் 5
புலமைப்பரிசில் பரீட்சையில்
156 புள்ளிகளைப் பெற்று
சித்தி அடைந்த மாணவன்

**லக்ஸ்மன் யோசுவா**

மேன்மேலும் கல்வியில் சிறக்க
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்
யா/சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம், குருநகர்**

## மின்சாதனப் பொருள்கள் இடிமின்னலால் சேதம்

சாவகச்சேரி, ஒக். 10

தென்மராட்சிப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் நீண்ட காலத்துக்குப் பின்னர் இடிமின்னல், பலத்த காற்றுடன் மழைபெய்தது.

இந்த இடி மின்னலின் போது மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையப் பகுதியில் பொ. வேலாயுதம் என்பவரது வீட்டு மின்சார பிரதான ஆழி பொருத்திய இடத்தில் இருந்து வெடித்துச் சிதறியது அவரது வீட்டின் கூரைச் சீற்றும் வெடித்தது. இதன்போது வீட்டு விறாந்தைப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த பொருள் கள் தூக்கி வீசப்பட்டன.

மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் மின் விசிறிகள், மின் உபகரணங்கள் மற்றும் அந்தப்பகுதி வீடுகள் சிலவற்றில் இருந்த மின் உபகரணங்கள் என்பன பாதிக்கப்பட்டுள்ளன.

(ம-131)

## மனித வள அபிவிருத்தி பயிற்றுநர்களுக்கு ஐந்து நாள் பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக். 10

இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையுடன் சுவீடன் கூட்டுறவு நிறுவனம் இணைந்து கூட்டுறவுத்துறைக்கான மனிதவள அபிவிருத்தி பயிற்றுநருக்கான பயிற்சிநெறியை ஆரம்பிக்கவுள்ளன.

மனிதவள அபிவிருத்தி பயிற்சி நெறி இன்று திங்கட்கிழமை இரத்தினபுரியில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறி தொடர்ந்து 5 நாள்களுக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்திலிருந்து 76 பயிற்றுநர்களும் வடமாகாணத்திலிருந்து 25 பயிற்றுநர்களும் இதில் கலந்துகொள்ளவுள்ளனர். தெரிவாகியுள்ள அனைத்து பயிற்றுநர்களையும் தவறாது இரத்தினபுரியில் நடைபெறும் பயிற்சியில் பங்கு கொள்ளுமாறு யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திச்சபை செயலாளர் திருமதி வே. செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

(ம-311)

## கல்விமாணிப்பட்ட நெறியின் ஆரம்பநிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 10

தேசிய கல்வி நிறுவகத்தில் நடத்தப்படும் கல்வி மாணிப்பட்டநெறியின் பிராந்திய நிலையத்தின் ஆரம்ப நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்லூரி அதிபர் எஸ். சேதுராஜா தலைமையில் இடம் பெறவுள்ளது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படும் இந்தப் பட்டநெறிக்குப் புதிதாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பதிவும் அன்றைய தினம் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வராஜா கலந்து கொள்வார். அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் முதலாம், இரண்டாம் வருட மாணவர்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ். ஆர். சத்தியேந்திரம்பிள்ளைகேட்டுள்ளார். (வ-319)

## கடையிற் சுவாமி குருபூசை நிகழ்வு

கடையிற் சுவாமிகளின் 120ஆவது குருபூசை தினம் இன்று திங்கட்கிழமை வண்ணை ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர ஆலயத்தில் இடம்பெறவுள்ளது. விஷேட பூசை வழிபாடுகளுடன் பூசைகள் ஆரம்பமாகி தொடர்ந்து கடையிற்சுவாமிகளின் பிரார்த்தனையும் மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

(ம-313)

* * *

தவத்திரு கடையிற் சுவாமிகளின் 120ஆவது குருபூசை தினம் இன்று திங்கட்கிழமை 5ஆம் வட்டாரம் மண்டைதீவில் புதிதாகக் கட்டப்பட்ட நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது. இதில் நண்பகல் 12 மணிக்கு அபிஷேகம் ஆராதனைகள் இடம்பெறும். (ம-313)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வடமராட்சி கல்வி வலயத்தில்
நல்லாசிரியராகத் தெரிவு செய்யப்பட்டு
அலரிமாளிகையில் 6.10.2011 ஆம் திகதியன்று
அதிமேதகு ஜனாதிபதி தலைமையில்
நடைபெற்ற வைபவத்தில்
**"ஆசிரியர் பிரதீபா பிரபா"**
விருதினைப் பெற்ற எமது வித்தியாலயத்தின்
ஆசிரியை செல்வி ஐயம்பூர்த்தி யசோதாதேவி
அவர்களைப் பாராட்டுவதுடன் அவர் மேலும்
பல விருதுகளைப் பெற்று கல்விப் புலத்துக்கு
அளப்பரிய சேவைகளையாற்ற வேண்டுமென
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்.

## இராசரத்தினம் தொழிற்பயிற்சி மையம், இணுவில்
## இலவச கணினிப் பயிற்சி

- Ms Office
- Web Designing
- English for IT

➢ வறிய பிள்ளைகளுக்கு அரிய வாய்ப்பு!
➢ 6 மாதக் கற்கை (வாரம் 5 நாள்)
➢ சிறுவர் இல்லங்களிலிருந்து வெளியேறியோருக்கு முன்னுரிமை

தகைமை: க.பொ.த. (சா/த) ஆங்கிலத்துடன்
விண்ணப்பங்கள்: 15.10.2011 க்கு முன்

**சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.**

கே.வி.குணசேகரம்
செயலாளர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மு/ வெட்டுவாய்க்கால் அ.த.க. பாடசாலை



அதிபர்

**மாணிக்கம் செல்வராசா** BEd

அவர்கள் ஜனாதிபதியால் அதிபர்கள் சேவையைக் கௌரவித்து வழங்கப்பட்ட "ஆசிரியர் பிரதீபா பிரபா - 2011 விருது பெற்றுக் கொண்டமையை மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
(மு/ வெட்டுவாய்க்கால் அ.த.க. பாடசாலை.**

## Dr.Pimple
TRICHOLOGY CENTRE
Hair and Pimple Clinic



முகப்பருக்களுக்கு
**International Skin Peeling**
சிகிச்சை முறைமூலம்
நிரந்தரத்தீர்வு

எதிர்வரும் 15,16,17 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா-19,20 ஆகிய திகதிகளில்.
முன் பதிவுகளுக்கு-021-2220288.

V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.
Head Office Colombo - 011 4874854

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை சிரேஷ்ட ஆசிரியர்
**செல்வி இ.சுலோசனா**
அலரிமாளிகையில் ஆசிரியர் பிரதீபா பிரபா ஜனாதிபதி விருது 2011 பெற்றுக்கொண்டதையிட்டு யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிச் சமூகம் மனமார வாழ்த்துகின்றது.


யா/பண்டத்தரிப்பு
இந்துக் கல்லூரிச் சமூகம்

# தாதியர் பயிற்சிக்கான கடற்படை, விமானப்படை ஆகியவற்றை உள்வாங்கிய வரலாறு மிக்க யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரி

(சென்றவாரத் தொடர்ச்சி)

தாதியப் பயிற்சி நெறியை தமிழ் மொழி மூலம் பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக தாதியர்களை பயிற்றுவிக்கும் நோக்குடன் அனைத்து தாதியர் கல்லூரியினதும் தாதியக் கல்லூரியாக இந்தக் கல்லூரி விளங்குகின்றது.

1962 ஆம் ஆண்டு தாதியர் பயிற்சிக் கல்லூரியில் தாதியர் பயிற்சிக்காக கடற்படையினரும்,1967 ஆம் ஆண்டு படையினரும் 1968 ஆம் ஆண்டு விமானப் படையினரும் உள்வாங்கப்பட்டிருந்தமை கல்லூரியின் வரலாற்று ஆதாரங்களாகும்.




1966 ஆம் ஆண்டு தாதிய உதவியாளராகக் கடமையாற்றி வந்தவர்களை ஒரு வருட பயிற்சி நெறிக்காக உள்வாங்கி தாதியர்களாகப் பயிற்றுவிக்கும் பயிற்சியும் நடைபெற்றது.

தாதியர் பயிற்சி மாணவர்களின் கற்றலை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் கல்லூரிச் சமூகத்தால் முதன்முதலாக 1967 ஆம் ஆண்டு சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 1968, 1969 ஆம் ஆண்டுகளிலும், 1971 ஆம் ஆண்டிலும் சஞ்சிகைகள் வெளியிடப்பட்டன.

இந்தச் சஞ்சிகையில் மாணவர் களின் தரமான ஆக்கங்கள் உள்வாங்கப்பட்டிருந்தன. இந்த சஞ்சிகைகள் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய பல்வேறு தகவல்களும் உள்ளடக்கி இருந்தன.

1974 ஆம் ஆண்டு தாதியர் பயிற்சிக் கல்லூரியில் குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்கள் பயிற்சி நெறியும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் மூலம் வெளியேற்றப்பட்ட உத்தியோ கத்தர்கள் சமூகத்தின் ஆரம்ப சுகாதாரத்தை மேம்படுத்த பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தினர்.

1983 ஆம் ஆண்டு தாதிய உத்தியோகத்தர்களை மகப்பேற்று மருத்துவத்துக்குப் பயிற்றுவிக்கும் மகப்பேற்று மருத்துவத் தாதியர் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கற்கை நெறி தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது.

தாதியர் பயிற்சிக் கல்லூரியால் வெளியிடப்படும் சஞ்சிகை 1983 ஆம் ஆண்டு ''சுடர் ஒளி'' எனும் பெயருடன் வெளியிடப்பட்டது. தாதியர் பயிற்சிக் கல்லூரியில் 3 வருடகாலமாக மேற்கொள்ளப்படும் கற்கை நெறியில் உளநல மருத்துவக் கற்கை நெறியானது முல்லேரியாவில் நடைபெறுவது முக்கியமான ஒன்றாகும்.

1967 ஆம் ஆண்டு இலங்கை முழுதும் உள்ள தாதிய மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்ட கற்கைநெறியில் யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரி யும் கலந்துகொண்டது.

1987 ஆம் ஆண்டு இந்திய ராணுவத்தின் வருகை யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட போது கல்லூரியின் செயற்பாடுகள் பெரிதும் பாதிப்படைந்ததும் கல்லூரி வரலாற்றில் பதியப்படவேண்டிய சம்பவமாக அமைந்தது. 1987 ஆம் ஆண்டு கல்லூரியின் போதனாசிரியராக 84 ஏ அணியில் கடமை யாற்றிய தி.கதிர்காமதாஸ் உளநல மருத்துவக் கற்கைநெறிக்கு முல்லேரியாவுக்குச் சென்று திரும்பிய போது எறிகணைத் தாக்குதலில் பலியானதும் கல்லூரியின் துன்பகரமான சம்பவங்களில் ஒன்றாக அமைந்தது.

இதே காலப்பகுதியின் கல்லூரியின் பெண்கள் விடுதியில் எறிகணைகள் வீழ்ந்து, சேதமாக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

**சோபனா**

அத்துடன் 1987 ஆம் ஆண்டு ஐப்பசி 21 ஆம் திகதிகயில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்பில் கடமையாற்றி வந்த வைத்திய நிபுணர், வைத்தியர்கள், தாதிய பரிபாலஷிகள், தாதிய உத்தியோகத்தர்கள், ஏனைய ஊழியர்கள் உள்ளடங்கலாக 21 பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டமையும் வரலாற்றுச் சம்பவங்களாகின.

இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியை கால வரையறையின்றி மூடவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டது. இதனால் தாதியர்களுக்கான கற்றல்களும் தடைப்பட்டன.

(தொடரும்)

## நன்றி நவிலல்



அமரர்
**சுந்தரம் விநாயகமூர்த்தி**
(ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

பிறப்பு
10.10.1938

இறப்பு
08.06.2010

காலத்தை வடிவமைக்கும் இயற்கைத் தாயின் புன்னகை நிழல்களான வாழ்க்கைப் பயணத்தின் பொன்னாள்....!

எம் இதய வானில் சதா ஒளிவீசும் எந்தை மலராய் முகிழ்த்த நன்னாள்!! குரு சீட உறவை காவிய வரிகளில் வடித்த சாவகச்சேரி இந்துவின் மைந்தர்களின் அறிவியல் புரட்சி ..... பேரன்பின் திரட்சி.... காலங்கள் இதைப் பார்த்து குதூகலிக்கும். இரு விழியான தமிழ் மொழியும் சைவமும் புகட்டிய ஆசானின் நினைவுகளை காலத்தின் முகத்தில் பொன்வரியாய் பொறிக்க ''புலமைப் பரிசில் நிதியம்'' கால ஓட்டத்தில் காவியமாகி கரைந்த எந்தையின் திருவுருவை கலை அழகு செங்கோல் ஓச்ச ஓவியமாய் உதிர்த்தான் ஒரு மாணவமணி.

இன்னும் அன்னாரின் மாணவ மணிகளில் ஒரு குழாத்தினர் ஆசிரிய வாண்மைக்கு அர்ப்பணமாய் எமது அன்புத் தெய்வத்தின் திருவுருவை அழகு கொலுவிருக்கும் நிழலோவியமாய் படைத்து மணிமாலை சூட்டி அழகு பார்த்த செய்கை! அது ஆழ்ந்த குரு சீட உறவின் பேரன்புப் பொய்கை. தமது பேராசானின் பிரிவுத்துயர் ஆற்றாமல் உள வெதும்பலை, காவியமான ஆசிரிய கனவானின் காலடிக்கு கண்ணீர்ப் பூக்கும் கவிதாஞ்சலியாய் சொரிந்து எமது விளக்கின் ஓராண்டு நினைவு நாளில் கவிதையாய் அர்ச்சித்த அன்புப் பொழிவு எமது நெஞ்சங்களில் என்றும் எதிரொலிக்கும்.

எமது குடும்பத் தலைவரின் நினைவாக யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் 1998 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரத்தில் அவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை வைப்பிலிட்டு சமய பாடத்துக்கான புலமைப்பரிசில் நிதியத்தை ஆரம்பித்ததுடன் இந்த வருடத்தில் இருந்து குறித்த கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பின் போது தெரிவுசெய்யும் மாணவருக்கு புலமைப் பரிசில் நிதியை வழங்க ஏற்பாடு செய்துள்ளனர்.

அன்னாரின் 73ஆவது பிறந்த நாளில் செயற்கரிய செய்கை செய்த அவரின் மாணவர்களுக்கு மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

திருமதி சிவக்கொழுந்து விநாயகமூர்த்தி (மனைவி),
பிள்ளைகள்.

இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே
V Care
DR.HAIR
TRICHOLOGY CENTRE
Hair and Scalp Clinic



தலைமுடி உதிர்தல். ஆண்.பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புழுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் 15.16.17 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது வவுனியா-19.20 ஆகிய திகதிகளில். முன் பதிவுகளுக்கு-021-2220288

தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலையை விட்டுத்தள்ளுங்கள்!

V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.

Head Office Colombo - 011 4874854

நெஞ்சைவிட்டு அகலாத
கண்ணீர் நினைவுடன்

**50 ஆவது பிறந்த நாளும்**
**20 ஆவது ஆண்டு**
**நினைவு நாளும்**



அன்னை மடியில்:
10.10.1961

ஆண்டவன் அடியில்:
10.08.1991

அமரர் எஸ்.செல்வவதனா

நினைவு கூரும் : குடும்பத்தினர்
அல்வாய், பருத்தித்துறை.

# தரங்குறைந்த பெற்றோலால் பாதிக்கப்பட்ட வாகன உரிமையாளர்களுக்கு நட்டஈடு

## 3,500 பேருக்கு வழங்கும் பணி ஆரம்பம்

கொழும்பு,ஒக்.10

தரம் குறைந்த பெற்றோலைப் பாவித்ததலால் தமது வாகனங்கள் பழுதடைந்து போனதாக முறைபாடு செய்துள்ள 3500 பேருக்கு நட்டஈட்டை வழங்கும் பணியை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்தது. நட்டஈட்டுத்தொகை பத்துப் பேருக்கு அன்றையதினம் வழங்கப்பட்டது என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித் துள்ளார்.

இதுதொடர்பில் விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப பாதிக்கப்பட்ட வாகன உரிமையாளர்களுக்கு 20ஆயிரம் முதல் 50ஆயிரம் வரையிலான நட்டஈடு வழங்கப்படும். தற்போதைய நில வரத்தின்படி பாதிக்கப்பட்டவர்களில் 60 வீதமானோர் 40 ஆயிரம் ரூபாவுக்குக் குறைந்த நட்ட ஈட்டைப்பெறத் தகுதி பெற்றுள்ளனர். அனைத்துக் கொடுப்பனவுகளும் டிசெம்பர் மாதத்துக்கு முன்பு வழங்கப்படும். நட்டஈட்டுக்கு உரியவர்களுக்கு விரைவில் எழுத்துமூல அறிவித்தல் கொடுக்கப்படும். கடந்த ஜூன் மாதம் 18ஆம் திகதி முதல் செப்ரெம்பர் ஐந்தாம் திகதி வரை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு எழுத்து மூலமும் தொலைபேசி மூலமும் கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் நட்டஈட்டைப் பெறத் தகுதி பெற்றவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் திருமதி சம்பிகா அமரசேகர, பிரதி நிதி முகாமையாளர் ஆர். எஸ்.சுந்தரலிங்கம், விற்பனை முகாமையாளர் சீ.பீ. சமரக்கோன் ஆகியோர் அடங்கிய குழுவே விசாரணையை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)



காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவு பொலிஸ் நிலையங்களில் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சிறுவர் சித்திரப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு அச்சுவேலி புனித தேரேசாள் ம.வியில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நீல் தளுவத்த உட்பட விருந்தினர்கள் கல்லூரியின் முதன்மை மாணவியால் கைலாகு கொடுத்து வரவேற்கப்படுகின்றனர். (11)

### தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த

# மாற்று ஆற்றல் உடையவர்களுக்கு பணமுடிச்சு வழங்கிக் கௌரவிப்பு

தென்மராட்சி, ஒக்.10

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட முதியோர் மற்றும் மாற்று ஆற்றல் உடையோர் தின விழாவில் கலந்து கொண்ட 60 மாற்று ஆற்றல் உடையவர்களுக்கு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் பணமுடிச்சு வழங்கிக் கௌரவித்தனர். மன்ற நிர்வாகத்தினரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்து மன்ற அங்கத்தவர்கள் அனைவரும் இதற்கான நிதியை தாமாகவே வழங்கியுள்ளனர்.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற முதியோர் மற்றும் மாற்று ஆற்றல் உடையோர் தின விழாவில் பணமுடிச்சு வழங்கப்பட்டதாக மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்துள்ளார். (ச-207)

## வாழ்த்துகின்றோம்



உயர்திரு. ஆறு.திருமுருகன் அவர்கள்
(யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர்)
சமய, சமூகப் பணிபுரிந்தமைக்காக
யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினர்
அவரைக் கௌரவிக்கும் முகமாக கௌரவ
கலாநிதிப் பட்டமளித்து கௌரவித்தமைக்காக
பாராட்டுவதோடு அவர்தம் சேவை மேன்மேலும் சிறக்க
பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

யா/இணுவில் மத்தியகல்லூரி, பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

## வலிகாமம் கல்வி வலயத்துக்கு புதிய அதிகாரிகள் நியமனம்

சுன்னாகம், ஒக்.10

வலிகாமம் கல்வி வலயத்தில் புதிதாக இரு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிகாரியான செல்வி கிறேஸ் தேவதயாளினி தேவராசா மாணவர் அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கணித பாடத்துக்கான உதவிக் கல்விப் பணிப்பாளராக வே.சிவகுமரன் நியமிக்கப்பட்டுள்ளார். (ச-38)

## கற்பித்தல் சாதனைக் கண்காட்சி

தென்மராட்சி, ஒக்.10

சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியர்களின் கற்பித்தல் சாதனைக் கண்காட்சி அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் திருமதி சி.சிவநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கண்காட்சியை தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.இரவிச்சந்திரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்துள்ளார்.

இந்த நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ச-207)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



யா/கோண்டாவில்
இந்து மகாவித்தியாலய அதிபர்
உயர்திரு.
சு.சண்முககுமார்
B.A, Dip.in.Ed, MED, SLPS ~I
அவர்கள் யாழ்.கல்வி வலயத்தில் சிறந்த
அதிபராகத் தெரிவு செய்யப்பட்டு 06.10.2011
அன்று அலரி மாளிகையில் அதிமேதகு
ஜனாதிபதி அவர்களின் தலைமையில்
நடைபெற்ற நிகழ்வில் குரு பிரதீபா பிரபா என்னும்
கௌரவ விருதைப் பெற்றமையினையிட்டுப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
* இவர் 2005 இல் சிறந்த அதிபருக்கான "வித்தியா விஜயஸ்ரீ"
விருதினைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம். ஆசிரியர் நலன்புரி கழகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கல்விச் சேவையால் உயர்ந்து நிற்கும் யா/இணுவில் மத்திய கல்லூரி அதிபர் திரு. அ.சதானந்தன் அவர்கள் வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட 1000 மாணவர்களுக்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் சிறந்த அதிபராக 3 ஆம் இடம் வழங்கியமையையிட்டு வாழ்த்துகின்றோம்.



யா/இணுவில் மத்திய கல்லூரி.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
ஆசிரியர் நலன்புரிக் கழகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2011 ஆம் ஆண்டு தரம் 5
புலமைப்பரிசில் பரீட்சையில் 152
புள்ளிகள் பெற்று சித்தியடைந்த

### பிரபாகரன் மனோஜன்

மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களான

1. சிவகுமார் தர்மிகா
2. கணேசமூர்த்தி மாதுசன்
3. யோசப் ஆனந்தன் தர்சினி
4. சண்முகநாதன் அர்மனா
5. யோகேஸ்வரன் சுகிர்தா
6. சிவகுருநாதன் யசிந்தா
7. செயரூபன் அஜிந்தா
8. பாஸ்கரநாதன் லஜிதன்
9. தனேந்திரன் டிலக்சன்
10. மூர்த்தி கயானி
11. அன்ரன் அமுதினி
12. கதிரமலைநாதன் பிரசன்ஜா
13. மணிவண்ணன் கிருசன்

ஆகிய மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

பாடசாலை சமூகம்
கிளி/பூநகரி ம.வி., பூநகரி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்

தரம் ஐந்து 2011 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிச் சித்தியடைந்த மாணவச் செல்வங்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



ப.விதுர்ஷன் 175 புள்ளிகள்



கு.சிவானுஜன் 159 புள்ளிகள்



சி.சுபாங்கன் 157 புள்ளிகள்



ஜெ.டர்விந் 157 புள்ளிகள்



க.திலக்சன் 151 புள்ளிகள்

### இவர்களுடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

01. பா.லாவணிஷா-143 புள்ளிகள்
02. ம. இளவதனன் - 139 புள்ளிகள்
03. த. தவவாசன் - 138 புள்ளிகள்
04. ம. எழிற்செல்வன் - 135 புள்ளிகள்
05. சி. திலக்ஷனா - 135 புள்ளிகள்
06. கு. கஜோதினி - 132 புள்ளிகள்
07. அ. இசாளினி - 131 புள்ளிகள்
08. அ. சௌமிகன் - 129 புள்ளிகள்
09. ஜெ. விதுசன் - 127 புள்ளிகள்
10. கு. அபிநயா - 126 புள்ளிகள்
11. தி. கோணேஸ்வரன் - 125 புள்ளிகள்
12. த. பிரவீணா - 124 புள்ளிகள்
13. ற. அனோஜன் - 120 புள்ளிகள்
14. கி. பவப்பிரியங்கா - 116 புள்ளிகள்
15. பா. ஸ்நேகா - 116 புள்ளிகள்
16. சி. யதுர்சன் - 105 புள்ளிகள்
17. ம. யதூசிகன் - 101 புள்ளிகள்

இவர்களுக்கு உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். இந்த மாணவர்கள் மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.

# இலங்கைக் கடற்படையின் தாக்குதல்கள் இந்தியாவுக்கு எதிரான ஆக்கிரமிப்பே!

## ஜெயலலிதா கண்டனம் தெரிவிப்பு



சென்னை, ஒக்.10

''தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் மேற்கொள்ளும் தாக்கு தல்கள் சீற்றங்கொள்ள வைக்கின்ற செயலாக உள்ளதுடன், இந்தியாவிற்கு எதிரான ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகும்'' என்று தமிழ்நாட்டு முதல்வர் ஜெயலலிதா தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

தனது மூன்று நாள் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு கொழும்புக்குச் செல்வதற்கு முன்னர் இந்திய வெளியுறவுச் செயலர் ரஞ்சன் மத்தாய், நேற்றுமுன்தினம் தமிழ் நாட்டு முதல்வரைச் சந்தித்துக் கொண்ட போதே அவர் இவ்வாறு தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்களானது தமிழ் நாட்டு மீனவர்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதலாக மட்டும் கருதப்படக் கூடாதென்றும், இது ஒட்டுமொத்தமாக இந்தியக் குடிமக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்களாகவும், இந்தியா என்ற நாட்டுக்கு எதிராக இலங்கையால் மேற்கொள்ளப்படுகின்ற கோபமூட்டக் கூடிய செயலாகவும், ஆக்கிரமிப்பு நடவடிக் கையாகவும் கருதப்பட வேண்டும் என்றும் முதல்வர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் இலங்கைக் கடற்படையால் மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்களானது அயல்நாடுகளான பாகிஸ்தான் மற்றும் சீனா போன்ற நாடுகளால் இந்திய எல்லைப் புறங்களில் மேற்கொள்ளப்படுகின்ற தாக்கு தல்களுக்கு ஒப்பானது எனவும் தமிழ் நாட்டு முதல்வர், இந்திய வெளியுறவுச் செயலர் ரஞ்சன் மாத்தையாவிடம் எடுத்துக் கூறி யுள்ளார்.

கடந்த மே மாதத்திலிருந்து தமிழ்நாட்டு மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் 16 இற்கும் மேற்பட்ட தாக்குதல்களை மேற்கொண்டதாகவும், இத்தகைய தாக்குதல்களை தேசிய பிரச்சினையாகவே நோக்க வேண்டும் என்றும், மாறாக தமிழ்நாட்டிற்கு மட்டும் ஏற்பட்டுள்ள பிரச்சினையாகக் கருதக் கூடாதென்றும், முதல்வர் ஜெயலலிதா கேட்டுக்கொண்டதாக இந்திய அரசால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுத்து வைத்தல் மற்றும் துன்புறுத்தல்களை விளைவித்தல் போன்றன இந்தியாவின். இராமநாதபுரம் மற்றும் நாகபட்டினம் போன்ற மாவட்டங்களுக்குச் சொந்தமான கடலிலேயே அதிகமாக நடைபெறுவதாகவும், கடந்த ஒரு மாதமாக தமிழ்நாட்டு மீனவர்களுக்குச் சொந் தமான கடல் எல்லையில் குறிப்பாக நாகபட்டின மாவட்டத்தின் கடல் பிரதேசத்தில் இலங்கை மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் கடல் எல்லைக்கு வெளியே தொழிலில் ஈடுபடுத்தப்படும் படகுகள் இலங்கைக் கடற்படையால் கண்காணிக்கப்படுவதாகவும், இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல்கள் இலங்கைக் கடற்படையின் துணையுடனேயே மேற்கொள்ளப்படுவதாகவும் முதல்வர் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான தனது மூன்று நாள் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளும் இந்தியாவின் வெளியுறவுச் செயலர் ரஞ்சன் மத்தாய் அங்கு இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுக்களில் ஈடுபடும்போது இவ்வாறான விடயங்கள் தொடர்பாக கவனத்தில் எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இலங்கை மீனவர்கள் என்ற போர்வையில் தமிழ்நாட்டு மீனவர்களை அச்சுறுத்தியவர்கள் உண்மையில் இலங்கையின் கடற்படை வீரர்களாக இருக்கலாம் எனவும் முதல்வர் ஜெயலலிதா கருத்துத் தெரிவித் துள்ளார். (வ)



மத்திய வெளியுறவுத்துறை செயலர் ரஞ்ஜன் மத்தாய் மூன்று நாள் பயணமாக இலங்கை வரமுன்னர் சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதாவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

## இந்தியக் கடலில் சுனாமி எச்சரிக்கை சோதனை

இந்திய பெருங்கடலில் சுனாமி எச்சரிக்கை சோதனை நடத்த யுனெஸ்கோ நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

உலகை உலுக்கிய சுனாமி இந்தியப் பெருங்கடலில் கடந்த 2004 ஆம் ஆண்டு ஏற்பட்டது. அதனால் ஏற்பட்ட ஆழிப் பேரலை இந்தியா, இலங்கை, இந்தோ னேஷியா உள்ளிட்ட நாடுகளை கபளீகரம் செய்தது. அதில் லட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர்.

தற்பொழுது இந்திய பெருங் கடலில் சுனாமி எச்சரிக்கை சோதனை நடத்த யுனெஸ்கோ நிறுவனம் ஏற்பாடு செய் துள்ளது. இந்த சோதனை இந்திய பெருங் கடல் பகுதியில் உள்ள 25 நாடுகளில் நடைபெறுகின்றது. இந்தச்சோதனை எதிர் வரும் 12 ஆம் திகதி நடைபெற வுள்ளது. அந்த நேரம் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டு மக்களுக்கு பாதுகாப்பு குறித்து விளக்கப்படும். (வ)

## ஆந்திராவில் விரைவில் ஜனாதிபதி ஆட்சி

ஆந்திரா, ஒக்.10

ஆந்திரா மாநிலத்தில் நீடித்துவரும் தெலுங்கானா போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர அங்கு ஜனாதிபதி ஆட்சி அமுல்படுத்தப்படவுள்ளதாக டில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன.

தெலுங்கானா போராட்டத்தால் எழுந்த நெருக் கடியைத் தீர்க்க ஆந்திர மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வருவது குறித்து மத்திய அரசு ஆய்வுசெய்து வருவதாக அந்த தகவல்கள் தெரிவித்தன.

இதுதொடர்பான இறுதி முடிவு சோனியா காந்தி தலைமையில் நடைபெறும் காங்கிரஸ் உயர்மட்டக் கூட்டத்தில் எடுக்கப்படும் என்று தெரிகிறது. தெலுங்கானா விவகாரம் குறித்து விவாதிக்க ஆந்திர மாநில ஆளுநரும், முதல்வரும் தற்போது டெல்லியில் உள்ளது குறிப்பிடத்தக்கது. (வ)

## ஜனாதிபதி ஆட்சி தேவையில்லை

### குலாம் நபி மறுப்பு

டில்லி, ஒக்.10

''ஆந்திராவில் ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட வில்லை'' என்று மத்திய அமைச்சர் குலாம் நபி ஆசாத் தெரிவித்தார்.

தெலுங்கானா விவகாரத்தால், ஆந்திராவில் இக்கட்டான அரசியல் சூழல் ஏற்பட்டுள்ளதை அடுத்து, அங்கு ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்த, மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியானது. ஆனால், மத்திய சுகாதார அமைச் சரும், ஆந்திர மாநிலத்துக்கான காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளருமான குலாம்நபி ஆசாத், இந்தத் தகவலைத் திட்டவட்டமாக மறுத்தார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்:

ஆந்திராவில் ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்த வேண்டிய அவசியம் எதுவும் ஏற்பட வில்லை. அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பேச்சு மூலம் சுமுகமான தீர்வு காணப்படும் - என்றார். (வ)

## டில்லி வெடிப்பு: சதிகாரர் கைது

டில்லி உயர்நீதிமன்றத்தில் கடந்த மாதம் நிகழ்ந்த குண்டு வெடிப்புக்குக் காரணமான முக்கிய சதிகாரரைக் கைது செய்துள்ளதாக தேசிய புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தியாவைச் சேர்ந்த வாஸிம் என்ற அந்த நபர் வங்கதேசத்தில் மருத்துவத் துறையைப் படித்து வந்துள்ளார். அவரும், அவருடன் நான்குபேரும் இணைந்து வங்க தேசத்தில் சதித்திட்டம் தீட்டியுள்ளனர் என்று தேசிய புலனாய்வு அமைப்பின் தகவல்கள் தெரிவிக்கின்றன.(வ)

## கூடங்குளம் விவகாரம் மக்கள் மீண்டும் உண்ணாவிரதம்

கூடங்குளம் விவகாரம் குறித்த மத்திய அரசிட மிருந்து உறுதியான தகவல்கள் கிடைக்காததால் மீண்டும் காலவரையற்ற உண்ணாவிரதத்தை இடிந்தகரை மக்கள் நேற்று ஆரம்பித்துள்ளனர்.

கூடங்குளம் அணுமின் நிலையத் திட்டத்தை உடனடியாகக் கைவிட வலியுறுத்தி கூடங்குளம் அருகே இடிந்தகரை மக்கள் மீண்டும் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்.

மத்திய, மாநில அரசுகளைச் சந்தித்து தங்கள் நிலையை வலியுறுத்திய பின்னர், தகுந்த நடவடிக்கை எதிர்பார்த்தும் தக்க உறுதிமொழி எதுவும் கிடைக்காததால் மீண்டும் காலவரையறை அற்ற உண்ணாவிரதத்தை ஆரம்பிப்பதாக இடிந்தகரை மக்கள் அறிவித் தனர். அதன்படி, நேற்றுக் காலை முதல் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். (வ)

## குளிர்காலக் கூட்டத் தொடரில் லோக்பால் பிரேரணை நிறைவேறும்

டில்லி, ஒக்.10

நாடாளுமன்றத்தில் குளிர்காலக் கூட்டத் தொடரில் லோக்பால் பிரேரணையை நிறைவேற்றுவதில் மத்திய அரசு உறுதியாக உள்ளது.

அதேநேரத்தில் ஹசாரேயின் ஊழல் எதிர்ப்புப் போராட்டத்தில் ஆர்.எஸ். எஸ் அமைப்பினர் பங்கேற்றது தொடர்பாக அவர் விளக்கம் அளிக்க வேண்டும் என்று மத்திய சட்ட அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

நாக்பூரில் செய்தியாளர் சந்திப்பின்போது அவர் கூறிய தாவது:

ஜன் லோக்பால் பிரேரணை தொடர்பாக அன்னா ஹசாரேயுடன் ஏற்பட்ட ஒப்பந்தப்படி நாடாளுமன்றத்தில் குளிர்காலக் கூட்டத் தொட ரில் லோக்பால் பிரேரணையை அறிமுகப்படுத்துவது என்பதில் மத்திய அரசு உறுதியாக உள்ளது.

அதேநேரத்தில் ஹசாரேயின் ஊழல் எதிர்ப்புப் போராட்டத்தில் ஆர்.எஸ்.எஸ் அமைப்பினர் பங்கேற்றதாக அந்த அமைப்பின் தலைவர் மோகன் பாகவத் கூறியுள்ளதால் அது பற்றி ஹசாரே விளக்கம் அளிக்க வேண்டும்.தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைத் திரும்ப அழைக்கும் உரிமையை மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற ஹசாரேயின் கோரிக்கை நடைமுறைக்கு ஒவ்வாதது.

பொதுமக்களுக்கு உரிமை அளிப்பதற்காகவே தகவல் பெறும் உரிமைச் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தது. ஆனாலும் இந்தச் சட்டத்தின் சில அம்சங்கள் தொடர்பாக நீதிமன்றங்கள் ஆள்சேபனை எழுப்பியுள்ளன.

தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் உள்ள குறைபாடுகள் குறித்து பல நீதிபதிகள் என்னிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். நாம் கொண்டு வந்த சட்டம் எங்களையே தாக்கும் என்பது அப்போது எங்களுக்குத் தெரியாது.

சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினத்தன்று கூட, ஆர்.எஸ்.எஸ்., அமைப்பினர், தங்களின் தலைமையகத்தில் தேசியக் கொடியை ஏற்றுவதில்லை. அவர்களுக்கு, சோனியா தலைமையிலான தேசிய ஆலோசனை சபை குறித்துப் பேச என்ன தார்மீக உரிமை இருக்கிறது - என்றார்.(வ)

## தேவை

கிளிநொச்சியில் இயங்கும் கட்டட ஒப்பந்த நிறுவனத்துக்கு கிளிநொச்சி பிரதேசத்தில் வேலை செய்யக்கூடிய

1)Civil Engineer (சிவில் எஞ்ஜினியர்)
2)Technical Officer(தொழில்நுட்ப உத்தியோகத்தர்)
3)Mason(மேசன்)
4)Labour(கூலியாள்கள்)

ஆகியவற்றுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப் படுகின்றது. விண்ணப்பதாரர் தொடர்புகொள்ள வேண்டிய தொ/எண் 0213734652

## உளமார வாழ்த்துகின்றோம்



தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானத்தின் தலைவரும் சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபரும் சிறந்த பேச்சாளரும் ஆன்மிக வழியில் எம்மை வழிநடத்திச் செல்பவருமான பெருமைக்குரிய செஞ்சொற் செல்வர்

**ஆறு.திருமுருகன்**

அவர்கள் கௌரவ கலாநிதிப்பட்டம் பெற்றதையிட்டு மிக்க மகிழ்வுடன் நாமும் வாழ்த்துகிறோம்

உரிமையாளர்
லேடீஸ் கோணர் புடைவையகம்
கே.கே.எஸ்.றோட் மருதனார் மடம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி கலைவாணி புஸ்பராஜன்
"ஆசிரியர் பிரதீபா பிரபா"

யா/தேவரையாளி இந்துக் கல்லூரி ஆசிரியை திருமதி கலைவாணி புஸ்பராஜன் கடந்த (06.10.2011) வியாழக்கிழமை ஜனாதிபதி மாளிகையில் சிறந்த ஆசிரியருக்கான விருதினைப் பெற்றமையையிட்டு பெரு மகிழ்வடைவதுடன் அவர் மேன்மேலும் பல சிறப்புகளைப் பெற்று மகிழ்வாக வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

ரதிமகால்,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

வாழ்த்துவோர்:
வேதாரணியம் குடும்பம்,
தி.நர்மதன் (மருமகன்).

## தவறிவிட்டது

2.10.2011 அன்று யாழ்ப்பாணத்தில் இருந்து பருத் தித்துறை தனியார் சிற்றூர்தி பஸ்ஸில் நடராஜா அன் னலட்சுமி என்பவரது உடுபுடைவைகள் அடங்கலான பெறுமதியான பாக் ஒன்று தவறிவிட்டது. அதனை கண்டுஎடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொலைபேசிஊடாக தொடர்பு கொண்டு பெற்றுத் தருமாறு உயர்ந்த உள்ளம் படைத்த உங்களிடம் தாழ்மையுடன் கேட்டு கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

நடராஜா அன்னலட்சுமி,கோப்பாய் பிரதேச செயலகம்முன்ஒழுங்கை
கோப்பாய் வடக்கு, கோப்பாய்
T.P 0212230103 0773586590

## 2013 அமெரிக்கா லொத்தர் வீசா

கடந்த 12 வருடங்களாக அமெரிக்கா லொத்தர் வீசா சேவையை வழங்கி வரும் எம் ஊடாக 04.10.2011 – 05.11.2011 வரை லொத்தர் வீசாவை அனுப்பிக்கொள்ளலாம்

குறிப்பு :- புகைப்படம் எம்மால் இலவசமாக எடுக்கப்படும்.

Arrul Global Express
International Courier & Cargo Service
T.P : 021 222 6113
இல. 01 பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை

கௌரவ குடும்பம் கத்தோலிக்க 1976 இல் பிறந்த அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.

(9566) தொடர்பு: 0212223289

## வீடு,கடை வாடகைக்கு

பிறவுண்றோட், நீராவியடியில் அமைந்துள்ள வீடும், ஸ்ரான்லி றோட்டில், இருப்பு வியாபாரம் நடந்து கொண்டிருக்கும் 150 அடிநீளம் 15 அடி அகலம் கொண்ட கடையும் வாடகைக்கு உண்டு

தொடர்பு: 0779777361

## மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் கற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா விரைவில் நடத்தப்படவுள்ளது. தொழில்நுட்ப அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கல்விச் சுற்றுலாவில் வலயத்தைச் சேர்ந்த 500 மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு கொழும்பில் உள்ள தொழில் நுட்பம் தொடர்புடைய நிலையங்கள் காண்பிக்கப்படவுள்ளன. (ச-207)

## ஆறாம் ஆண்டு நினைவு

பாலசிங்கம்
நடனகுமார்(சிவா)

அன்னைமடியில்
12 ★02 ★ 1962
ஈழத்து தில்லைநாயகி சமேத
தில்லை நடராஜரின் திருப்பாத
கமலங்களில் சரண்.
10★10★2005




திதி: புரட்டாதி
பூர்வபட்ஷ அட்டமி
04.10.2011

அன்புச் சிவா!
உன் அழகுமுகம் காணாமல்
ஆறாண்டு ஆச்சுதெடா,
எம் வீட்டின் ஒளிவிளக்கே!
உன் புன்னகையில் நாங்கள்
புளகாங்கிதம் அடைந்தோம்
என்ன விதம் ஐயா!
உன்னை மறப்பது நாம்,
உந்தன் நினைவெல்லாம் இப்போ,
நெருப்பாய்ச் சுடுகிறது.
ரி.வி.க்கு முன்னால்
நீ இருப்பதுபோல்
ஒரு,நினைவு நிழலாடுதெடா,
எம் நெஞ்சிருக்கும் வரை
உன் நினைவுகளும் இருக்குமடா.

குடும்பத்தினர்.
"துவாரகா"
கதிர்காமசுவாமி
கோவிலடி,
காரைநகர்.

## ஆசிரியர் தின விழா



வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட சிறந்த அதிபருக்கான விருது வழங்கும் நிகழ்வில் 2ஆம் இடம் பெற்றுக்கொண்டவரும், கல்வித்துறையில் பல்லாண்டு பணியாற்றி பட்டறிவு மிகுந்து விளங்குபவருமான எமது அதிபர்

**முத்துத்தம்பி
செல்வஸ்தான்**
(SLPS.2- II)

அவர்களை
மகிழ்வுடன் பாராட்டி
அவர்தம் பணிதொடர
வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்,
யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம், ஏழாலை.

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மேதகு கந்தையா
குலசேகரம்பிள்ளை (J.P.)

திதி: சதுர்த்தசி

புகழாய்
30.10.1926

புனிதமாய்
14.10.1997

*ஆண்டு பல கடந்து மீண்டதே நீர் ஆண்ட ஊர்*
*மீண்டும் புகழ்பாடி பரவசமாய் ஒலிக்குதே உமக்கு இட்ட பேர்*
*நீண்டு கலகலக்கும் சிரிப்பு நினைவிலே வந்து நெருடுதே உள்ளமதைப் பார்*
*ஆண்டீர் மீண்டும் எமை ஆளவந்தால் அடையுமே எம் குடும்பம் முன் இருந்த சீர்*
*ஆண்டவன் அடி சேர விழைபவளாய் அருள்கூர வந்ததே வல்லிபுரத்தான் தேர்*

நி.மு: எழுதுமட்டுவாழ்
த.மு: மானிப்பாய் வீதி, உரும்பிராய்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரர், பூட்டர்.


## வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை



தீபாவளியை முன்னிட்டு

01.10.2011 – 31.10.2011 வரை சிறப்பு சலுகை கட்டணம்.

- கடலுணவுப் பொருட்கள், எண்ணை வகைகள், மருந்துப் பொருட்கள் என்பனவும் அனுப்பி வைக்கப்படும்.
- எம் ஊடாக அனுப்பப்படும் சகல பொதிகளுக்கும் 100% சுங்கதீர்வை (Customs Duty) விலக்கு உண்டு.

- பொதிகள் அனுப்பும் வாடிக்கையாளர்களுக்கு அன்பளிப்பு வழங்கப்படும்
- ஏற்கனவே பொதிகளை அனுப்பிய பற்று சீட்டை கொண்டு வரும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கு சிறப்பு சலுகை

உலகின் முன்னணி கூரியர் சேவை நிறுவனத்தின் முகவர்

**Arrul Global Express**
International Courier & Cargo Service
T.P : 021 222 6113
இல. 01 பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

திருமதி செபஸ்தியான் (திரவியம்) மேரிப்பிள்ளை



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செபஸ்தியான் (திரவியம்) மேரிப்பிள்ளை 06.10.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்ரியானின் அன்பு மனை வியும், நிர்மலா, சாந்தா ஆகியோரின் அன்புத் தாயும், செல்வம், தேவன் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென் றவர்க ளான ஞானப்பிரகாசம், தம்பு, சின்னையா, ஐயாத்துரை, தங்கப்பொன், ரோசி, மார்கிறேட் ஆகியோரின் சகோதரியும், ரமேஸ், ரகு, ரஜினி, வதனி, ராகுலன், சுகிர்தா, யோனத் தான், சந்தோஷி ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 211, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (10.10.2011) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அடைக்கலநாயகி தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் யாழ். கொஞ்சேஞ்சி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல.211, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
மகள்.

# உடனடியாகப் பதவி விலகுமாறு சிரிய ஜனாதிபதிக்கு எச்சரிக்கை

வாஷிங்டன், ஒக்.10

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல்-அசாத்துக்கெதிராக பொது மக்கள் போராடி வருகின்றனர். அவர்களின் போராட்டத்தை இராணுவம் மூலம் ஒடுக்க ஜனாதிபதி ஆசாத் முயற்சி மேற்கொண்டு வருகிறார்.

எனவே, இதுவரை மூவாயிரம் பேர் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். இதற்கு அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளும், ஐ.நா. சபையும் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

மக்கள் போராட்டக் குழுவின் சிரியா தேசிய சபையில் தலைவராகவிருந்த தமோ (வயது-53) என்பவர் முகமூடி அணிந்த நான்கு துப்பாக்கி மனிதர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். இதில் அவரது புதல்வரும், ஆதரவாளர்களும் காயமடைந்தனர். இதற்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து, வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜாய்கன்னே வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு:-

தற்போது, சிரியா மிக ஆபத்தான பாதையில் சென்று கொண்டிருக்கிறது. எனவே, மக்கள் போராட்டத்துக்கு முற்றுப் புள்ளி வைக்க ஜனாதிபதி பஷார் அல்-ஆசாத் உடனடியாக பதவி விலகவேண்டும். இல்லாவிட்டால், கடும் விளைவுகளை சந்திக்க நேரிடுமெனத் தெரிவித்துள்ளார்.

## ஒசாமா பின்லேடனின் 3 மனைவிமாரையும் தாய்நாடுகளுக்கு அனுப்ப பாக். தீர்மானம்

இஸ்லாமாபாத், ஒக். 10

பாகிஸ்தான், தனது பாதுகாப் பில் உள்ள ஒசாமா பின்லேடனின் 3 மனைவிமாரையும், குழந்தைகளையும் அவர்களுடைய தாய்நாடுகளுக்கு அனுப்பிவைக்க தீர்மானித்துள்ளது.

சர்வதேச தீவிரவாதி பின்லேடன் பாகிஸ்தானில் பதுங்கி இருந்தபோது அமெரிக்க இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது 3 மனைவிகளும், குழந்தைகளும் அவருடன் பாகிஸ்தானில் தங்கியிருந்தனர்.

அவர் கொல்லப்பட்ட பின்னர் அவர்களை பாகிஸ்தான் அரசு தன் பாதுகாப்பில் வைத்திருந்தது. அவர்கள் அந்த நாட்டிலிருந்து வெளியேற தடை விதிக்கப்பட்டிருந்தது.

பின்லேடனின் கொலை பற்றிய நீதி விசாரணை ஆணைக் குழு அமைக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு 3 மனைவி களிடமும் விசாரணை நடத்தியது. அமெரிக்க அதிகாரிகளும் விசாரணை நடத்த அனுமதிக்கப்பட்டனர். அவர்களது விசாரணையும் முடிந்துவிட்டது.

இனிமேல் விசாரணைக்கு அவர்கள் தேவையில்லை என்ற நிலை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து பின்லேடனின் விதவை மனைவிகளை அவர்களுடைய தாய்நாடுகளுக்குத் திருப்பி அனுப்ப பாகிஸ்தான் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் அதிகாரிகள் சவூதி அரேபியா, ஏமன் ஆகிய நாடுகளின் அதிகாரிகளுடன் பேச்சுகள் நடத்தினார்கள். 3 மனைவிகளில் 2 பேர் சவூதி அரேபியாவையும், ஒருவர் ஏமனையும் சேர்ந்தவர்களாவார்கள். அதனால் அந்த 2 நாடுகளிடமும் பேச்சுகள் நடத்தப்பட்டது.

அந்த நாடுகளும் அவர்களை ஏற்றுக்கொள்ள சம்மதம் தெரிவித்துவிட்டன. நடந்த சம்பவம் குறித்து விதவை மனைவிகள் ஊடகங்களிடம் பேசக்கூடாது என்ற நிபந்தனையின்பேரில்தான் அவர்கள் தாய்நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்படுகிறார்கள்.

## சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து இரு பிக்குகள் தீக்குளிப்பு

பீஜிங், ஒக். 10

சீனாவின் தென்பகுதி மாகாணமொன்றில், திபெத் மீதான சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து, புத்த மதத் துறவிகள் இருவர் சனிக் கிழமை தீக்குளித்தனர்.

திபெத் பகுதியைச் சேர்ந்ததும், தற்போதைய சீனாவின் சிச்சுவான் மாகாணத்திலுள்ளதுமான அபா பகுதியில், கீர்த்தி மடாலயத்தின் புத்தமதத் துறவிகள் இருவர் சனிக்கிழமை தீக்குளித்தனர்.

கடந்த இரு வாரங்களில் அப்பகுதிகளில் நிகழ்ந்த நான்காவது, ஐந்தாவது தீக்குளிப்புச் சம்பவங்கள் இவை. அப்பகுதி அதிகாரிகள், உடனடியாக அவர்களை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்த்தனர்.

இவர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார் என அமெரிக்காவில் இயங்கி வரும் 'திபெத்திற்கான சர்வதேச பிரசாரம்' இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிச்சுவான் மாகாணத்தில், சீன அரசுக்கு எதிராக, புத்தமதத் துறவிகள், துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வருகின்றனர்.

அவற்றில், திபெத் விடுதலைக்காக தங்கள் உயிரைக் கொடுக்க, திபெத்தியர்கள் தயாராகிவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் முதல், சிச்சுவான் மாகாணத்திலுள்ள கீர்த்தி மடாலயத் துறவிகள், சீன அரசுக்கு எதிராகத் தொடர்ந்து தீக்குளிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இம்மடத்தை கடந்த ஏப்ரல் மாதம், சீன அதிகாரிகள் சோதனை என்ற பெயரில் மூடிவிட்டனர்.

மடத்தின், 300 துறவிகள் எங்கிருக்கின்றனர் என்பது தெரியவில்லை.

அவர்களைக் காணாமல் போக்கடித்ததாக, ஐ.நா. சாட்டிய குற்றச்சாட்டை சீன அரசு மறுத்தது. தற்போது கடந்த இரு வாரங்களாக அடுத்தடுத்து கீர்த்தி மடத்துத் துறவிகள், சீன அரசுக்கு எதிராகத் தீக்குளித்து வருகின்றனர்.

## சீனாவில் வாகன விபத்து: 35 பேர் பலி; 19 பேர் காயம்!

பீஜிங், ஒக். 10

சீனாவில் பீஜிங் அருகிலுள்ள டியான்ஜின் நகரில் நடந்த சாலை விபத்தில் 35 பேர் பலியாயினர். 19 பேர் காயமடைந்தனர். ஷாங்டோங் மாநிலத்திலிருந்து வந்த ஒரு கார் பஸ் மீது மோதியது. இதில் பஸ் தலைகுப்புறக் கவிழ்ந்தது.

பஸ்ஸில் பயணம் செய்த 55 பேரில் பெரும்பாலானவர்கள் மாணவர்களாவர். அவர்கள் 7 நாள்கள் தேசிய விடுமுறைக்குப் பின்னர் சனிக்கிழமை தான் கல்வி நிலையத்துக்குச் செல்வதற்காக பஸ்ஸில் பயணம் செய்தனர்.

பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் பஸ்ஸிலிருந்த மாணவர்களாவர்.

சீனாவில் கடந்த ஆண்டு நடந்த சாலை விபத்துகளில் 65 ஆயிரம் பேர் பலியானார்கள். 2 இலட்சத்து 54 ஆயிரம் பேர் காயமடைந்தனர்.

## 25 நாடுகளில் ஆழிப்பேரலை எச்சரிக்கை சோதனை

பாரிஸ், ஒக். 10

ஆழிப்பேரலை எச்சரிக்கை சோதனை 25 நாடுகளில் எதிர்வரும் 12ஆம் திகதி நடக்கிறது. கடந்த 2004ஆம் ஆண்டு இந்தோனேசியாவில் சுமத்ரா தீவில் கடும் பூகம்பம் ஏற்பட்டது.

அதைத்தொடர்ந்து இந்திய பெருங்கடலில் ஆழிப்பேரலை ஏற்பட்டது. அதனாலேற்பட்ட ஆழிப்பேரலை இந்தியா, இலங்கை, இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளை கபளீகரம் செய்தது. அதில் லட்சக் கணக்கான மக்கள் உயிரிழந்தனர். இச்சம்பவம் நடந்த ஏழு ஆண்டுகள் கழித்து, இந்திய பெருங்கடலில் ஆழிப்பேரலை எச்சரிக்கை சோதனை நடத்த யுனெஸ்கோ நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது. இது எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தச் சோதனை இந்திய பெருங்கடல் பகுதியுள்ள 25 நாடுகளில் நடக்கிறது. அப்போது ஆழிப்பேரலை எச்சரிக்கை விடப்படுகிறது. அந்த நேரம் முன்னெச்சரிக்கை பாதுகாப்பு குறித்து மக்களுக்கு விளக்கப்படுகிறது.

## 26 ஆண்டுகளுக்குப் பின் பெண் கைதி விடுதலை

தாஷ்வில்லே, ஒக். 10

அமெரிக்காவிலுள்ள டென்னீஸ் மாகாணத்தைச் சேர்ந்தவர் கெய்ஸ் ஒன்ஸ் (வயது - 58), இவர் 26 ஆண்டுகளுக்கு முன்னர் தனது கணவரை கூலிப் படை மூலம் கொலை செய்தார். இதற்காக கைதுசெய்யப்பட்ட அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அவர் டென்னீஸ் நகரிலுள்ள சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். தற்போது அவர் விடுதலை செய்யப் பட்டுள்ளார்.

பாலியல் தொந்தரவு கொடுத்து, அடித்து உதைத்ததால்தான் கெய்ல் ஒன்ஸ் தனது கணவரைக் கொலை செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனவே, அவரை மரணதண்டனையிலிருந்து விடுவிக்கவேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டது.

அதை பரிசீலித்த டென்னீஸ் மாகாண முன்னாள் ஆளுநர் பில் பிரீடெசன் கடந்த ஆண்டு அவரது மரணதண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தார். அமெரிக்காவில் ஆயுள் தண்டனை கைதிகள் 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும். ஆனால், நன்னடத்தை காரணமாக 26 ஆண்டுகள் சிறை வாசத்திலேயே கெய்ல் ஒன்ஸ் விடுதலை செய்யப்பட்டார். சிறையிலிருந்து வெளிவந்த அவரை புதல்வர்களும், நண்பர்களும், உறவினர்களும் கட்டித் தழுவி வரவேற்றனர்.

# சந்திரனில் கொட்டிக்கிடக்கும் டைட்டேனியம் உலோகம்: பூமியை விட 10 மடங்கு அதிகமாகவே உள்ளதாம்

பரிஸ், ஒக். 10

சந்திரனில் ஆய்வு மேற்கொள்ள அமெரிக்கா ஒரு விண்கலம் அனுப்பியுள்ளது. அதில் பொருத்தப்பட்டுள்ள சக்தி வாய்ந்த புகைப்படக்கருவிகள் சந்திரனின் மேற்பரப்பை புகைப் படம் எடுத்து பூமிக்கு அனுப்பியுள்ளது.

7 விதமாக எடுத்து அனுப்பப்பட்ட அவற்றை அமெரிக்க விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர். அதன் மூலம் ஏற்கனவே கடந்த 1972ஆம் ஆண்டு அப்பலோ-17 விண்கலம் மூலம் சந்திரனுக்குச் சென்ற விண்வெளி வீரர்கள் அங்கு வெட்டி எடுத்துவந்த பாறைகளில் பரிசோதனை மேற்கொண்டனர்.

அதில் டைட்டேனியம் டி என்ற உலோகத் தாதுக்கள் இருப்பது தெரியவந்தது.

டைட்டேனியம் என்பது உருக்கு உலோகத்தைவிட மிகவும் உறுதியானது. இந்த உலோகம் பூமியில் ஒரு சதவீதம்தான். அதாவது மிகக் குறைவாக வுள்ளது.

ஆனால், சந்திரனில் அவை கொட்டிக் கிடக்கின்றன. அதாவது 10 மடங்கு அதிகமிருக்கிறது.

இவை பாறைகளில் மறைந்து கிடக்கின்றன. டைட்டேனியம் தவிர இரும்புத்தாதுக்களும் மறைந்துள்ளன.

இந்தத் தகவலை அமெரிக்காவின் அரிசோனா பல்கலைக்கழக விஞ்ஞானி மார்க் ரொபின்சன் தெரிவித்தார்.

பிரான்ஸிலுள்ள நான்டெஸ் என்ற நகரில் நடந்த மாநாட்டில் தனது ஆய்வறிக்கையை தாக்கல் செய்து இந்தத் தகவலை வெளியிட்டார்.

# பொதுமக்கள் போராட்டத்துக்கு ஏமன் ஜனாதிபதி பணிந்தார்

## பதவியைத் துறக்கவும் முடிவு

கனா, ஒக். 10

பொதுமக்கள் போராட்டத்துக்கு ஏமன் ஜனாதிபதி பணிந்தார். தனது பதவியைத் துறக்க முடிவு செய்துள்ளார்.

ஏமனில் ஜனாதிபதி அலி அப்துல்லா சலேவுக்கு எதிராகக் கடந்த 6 மாதமாக பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். போராட்டக்காரர்கள் இராணுவம் மூலம் ஒடுக்கப்பட்டு வருகின்றனர். இதில் ஏராளமானவர்கள் பலியாகியுள்ளனர்.

எனவே, ஜனாதிபதி சலே பதவி விலகவேண்டும் என ஐ.நா. சபையும், உலக நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன. ஆனால், அதை அவர் கண்டு கொள்ளவில்லை. வெள்ளிக்கிழமை உலக அமைதிக்கான நோபல் பரிசு ஏமனைச் சேர்ந்த தவாக்குல் கர்மான் என்ற பெண்ணுக்கு அறிவிக்கப்பட்டது. இவர் ஏமனில் நடைபெறும் மக்கள் போராட்டத்தை நடத்தி வருகிறார்.

கர்மானுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி சலே பொதுமக்கள் போராட்டத்துக்குப் பணிந்தார்.

சனிக்கிழமை அரசு தொலைக்காட்சியில் திடீரென தோன்றி பேசினார். அப்போது, தான் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகப் போகிறார் என அறிவித்தார்.

அவர் பேசும்போது, ஜனாதிபதி பதவியில் தொடர்ந்து நீடிக்க நான் விரும்பவில்லை. எனவே, இன்னும் சிறிது நாளில் பதவி விலகுவேன் என்றார். ஆனால், அவரது பேச்சை நோபல் பரிசு பெற்ற கர்மான் நம்பவில்லை.

அதுபற்றி அவர் கூறும் போது, அவரது பேச்சில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. இதுபோன்று பலமுறை கூறியுள்ளார். ஆனால், அவர் பதவி விலகவில்லை. தற்போது மக்கள் போராட்டத்தை திசை திருப்பவும், உலக நாடுகளின் கவனத்தை மாற்றவும் இந்தப் போலியான அறிவிப்பை வெளியிட்டுள்ளார். மேலும் அவர் பதவி விலகும் திகதியை அறிவிக்கவில்லை. இவரது இந்த அறிவிப்பு முதல் முறையல்ல. வழக்கமான ஒன்றுதான். எனவே, எங்களின் போராட்டம் அமைதியான முறையில் தொடரும்'' என்றார். கடந்த ஜூன் மாதம் ஜனாதிபதி சலேவின் பங்களா மீது போராட்டக்காரர்கள் ரொக்கெட் குண்டு வீசினார்கள். அதில் சலே உடல் கருகி படுகாயமடைந்தார். அதற்கான சிகிச்சை பெற சவூதி அரேபியா சென்ற அவர் கடந்த மாதம் தான் ஏமன் திரும்பினார்.

உதயன்
10 ஒக்ரோபர் 2011 திங்கட்கிழமை

# இலங்கை வங்கியின் விளையாட்டு விழா நேற்று கோலாகலமாக ஆரம்பமாகியது



இலங்கை வங்கி விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழா நேற்றுக் காலை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் மிக சிறப்பாக ஆரம்பமானது.

இந்த விளையாட்டு விழாவில் பிரதமவிருந்தினராக இலங்கை வங்கியின் தலைவர் டாக்டர் காமினி விக்கிரமசிங்க, கௌரவ விருந்தினர் இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் டபிள்யூ ஏ.நளினி, யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க ஆகியோர் நாதஸ்வர இசையுடனும் தமிழர் பாரம்பரிய நிகழ் வான சிலம்பாட்டத்துடன் விளையாட்டு மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டனர். இந்த ஆரம்ப நிகழ்வில் தேசிய கொடியை யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க ஏற்றி வைத்தார். சிறப்பு நிகழ்வாக மாணவிகளின் நாட்டிய நிகழ்வும் இடம் பெற்றது. இதனைத் தொடர்ந்து விளையாட்டுப் போட்டிகள் இடம் பெற்றன. (எ-23)

## வீர, வீராங்கனைகள் நேற்று கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.10

இலங்கை வங்கி விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வில் வீர, வீராங்கனைகள் கௌரவிக்கப்பட்டு நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

எஸ்.மயூரன் (உதைபந்தாட்டம்), ஆர்.எட்வேட் எடின் (கிரிக்கெட்), பி.புகழரசி (கரப்பந்தாட்டம்), எ.அமிர்தராஜா (மல்யுத்தம்), எஸ்.தனுஷா, வி.கரிகரன் (மெய்வன்மை), எஸ்.தர்சினி (வலைப்பந்தாட்டம்), எஸ்.வாகீசன் (கூடைப்பந்தாட்டம்) ஆகிய எட்டு இளம் வீர, வீராங்கனைகளும் --.

எஸ்.மரியதாஸ் (உதைபந்தாட்டம்), எம்.பிரதீப்குமார் (மெய்வன்மை), எஸ்.சாந்திகரன் (கூடைப்பந்தாட்டம்), வி.கே.சண்முகலிங்கம் (கிரிக்கெட்), திருமதி எஸ்.ஜே.றூபசிங்கம் (வலைப்பந்தாட்டம்), ஈ.ஏகாம்பரம் (கரப்பந்தாட்டம்) வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை, கே.யதுகுலசிங் ஆகிய 8 சிரேஷ்ட முன்னாள் வீரர்களும் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் வடமாகாணப் பாடசாலைகளில் இலங்கை வங்கி சிறுவர் சேமிப்பு அலகில் அதிக தொகையை பேணும் வவுனியா இறம்பைக்குளம் ம.வி, வவுனியா விபுலானந்த ம.வி., பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி சவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, உடுவில் மத்திய கல்லூரி ஆகிய 10 பாடசாலைகளுக்கும் காசோலைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்களும், சைக்கிள் ஓட்டப்போட்டியில் வென்றவர்களுக்கு வெகுமதிகளும் வழங்கப்பட்டன. (ஒ-23)

## பிறிமியர் உதைபந்தாட்டத்தில் சென்.அன்ரனிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.10

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் பிறிமியர் லீக் பிரிவு111 க்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் திருகோணமலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது கடந்த சனிக்கிழமை வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருகோணமலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் திருகோணமலை சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் அணி 1:0 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணம் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை வெற்றி கொண்டது.

(எ-23)

## சென்.ஜோன்ஸ்- மகாஜன மாணவர்கள் பங்குபற்றிய உதைபந்தாட்டப் போட்டி

சென்.ஜோன்ஸ் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 14,16,18,20 வயது பிரிவு அணிகளுக்கு இடையே கடந்த வெள்ளிக்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற நட்புரீதியான உதைபந் தாட்ட ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:

**14 வயதுப் பிரிவு**

மகாஜனக் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கிலும்

**16 வயதுப் பிரிவு**

சென்.ஜோன்ஸ் கல்லூரி 5:4 என்ற கோல் கணக்கிலும்

**18 வயதுப் பிரிவு**

இரண்டு அணிகளும் தலா ஒரு கோல் களைப் பெற்றதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

**20 வயதுப் பிரிவு**

சென். ஜோன்ஸ் கல்லூரி 1:0 என்ற கோல்களைப் பெற்று வெற்றி பெற்றது. (எ-23)



வல்வெட்டித்துறை நெற் கொழு பொது விளையாட்டு மைதானத்தில் வைரவிழாவை முன்னிட்டு, நெற்கொழு, கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமராட்சிப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்திய 20-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் இரண்டாமிடத்தை கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி பெற்றது. கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி அணித் தலைவரிடம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மாவட்ட வைத்திய அதிகாரி மயிவேலும் பெருமாள் வெற்றிக்கிண்ணத்தை வழங்குகின்றார்.

(எ-23)

**கழுகுகள் வி.க. வைரவிழாவை முன்னிட்டு**

## 20-20 கிரிக்கெட் போட்டியில் சிறிமுருகன் வி.க. வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.10

வல்வெட்டித்துறை கழுகுகள் விளையாட்டுக் கழகத்தின் வைர விழாவை முன்னிட்டு நடைபெறும் 20- 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் சிறிமுருகன் விளையாட்டுக்கழ்கம் வெற்றிபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வதிரி சிறிமுருகன் விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பிரதீபன் 31 ஓட்டங்களையும் பிறேம் 35 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சிறிமுருகன் விளையாட்டுக்கழக அணி சார்பாக சஜீபன், உமாசுதன் பிரவின் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் நிதர்சன் 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

134 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிறி முருகன் விளையாட்டுக்கழக அணியினர் 14.2 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இதில் உமாசுதன் 54 ஓட்டங்களையும் சஜீவன் 17 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழக அணி சார்பாக மணிபாலன், பிறேம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (எ-23)

## ஹென்றிஸ், யூனியன் வி.க உதைபந்தாட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.10

யாழ்.உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் நேற்று முன்தினம் சனிக்கிழமை குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றது. இந்த ஆட்டங்களில் ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம், ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் B பிரிவு விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி 8:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் தலா 2 கோல்களைப் பெற்றதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி 4:1 என்ற கோல்களினால் வெற்றி பெற்றது. (எ-23)

# மும்பை இந்தியன்ஸ் பதித்தது முதல் வெற்றி



## ஹர்பஜனின் சுழலுக்குள் சிக்கி சிதறியது பெங்களூர்

நான்காவது சம்பியன் லீக் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை ஹர்பஜன் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி கைப்பற்றியது. சச்சின் உட்பட முக்கிய வீரர்கள் இல்லாது ஹர்பஜன் தலைமையில் களமிறங்கிய மும்பை அணி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தனர்.

பெங்களூர் அணியை எதிர்த்து விளையாடிய மும்பை பிராங்லிங்கின் துடுப்பாட்டமும், ஹர்பஜனின் பந்து வீச்சும் கைகொடுக்க 31 ஓட்டங்களால் வெற்றியை பெற்றது.

சம்பியன் லீக் ரி-20 ஆட்டத்தின் இறுதி ஆட்டம் நேற்று இரவு 8 மணிக்கு சென்னையில் நடைபெற்றது. இதில் இந்தியாவின் ஐ.பி.எல் அணிகளான மும்பை இந்தியன்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் ஆகிய அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடி மும்பை இந்தியன்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 139 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பிராங்லின் 29 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள் , 2 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 41 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். யாதவ் 17 பந்து வீச்சுக்களில் ஒரு ஆறு ஓட்டம், 2 நான்கு ஓட்டங்கள் அடங்கலாய் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய பிளிசாட், கன்வார் ஜோடி சிறப்பான அடித்தளத்தை அமைக்கத் தவறியது. முதலாவது பந்து பரிமாற்றத்தை டில்ஷான் வீசினார்.

இறுதிப் பந்தில் ஆறு ஓட்டத்தை கன்வார் விளாசி ஆரம்பித்த போதும் இவர்களது அவசரத்தினால் தொடர்ச்சியாக இலக்குகள் சரியத் தொடங்கியது. தேவையற்ற விதத்தில் மும்பையின் மூன்று வீரர்கள் ரன் அவுட்டாகினர். இதனால் சீரான இடைவெளியில் மும்பையின் இலக்குகள் வீழ்த்தப்பட்டது. வழமையாக பந்து வீச்சில் சொதப்பும் பெங்களூர் வேகப் பந்து வீச்சாளர்கள் சிறப்பாக பந்து வீசி மும்பையின் ஆட்டத்தை அடக்கினர்.

பந்து வீச்சில் பஹாட்கல் 21 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளை கைப்பற்றினார். அணித்தலைவர் வெற்றோரி 2 இலக்குகளையும் சரித்தார். நடந்த அரையிறுதி ஆட்டத்தில் அசத்திய டில்ஷான் நேற்றைய ஆட்டத்தில் பந்து வீச்சில் சொதப்பினார்.

பதிலுக்கு மிக இலகுவான இலக்கை பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணி விரட்டத் தொடங்கியது. கடைசி இரண்டு ஆட்டங்களில் 200 ஓட்டங்களை விரட்டிய பெங்களூருக்கு இதுவொன்றும் கடினமான இலக்கு இல்லை. இருப்பினும் மலிங்கவின் பந்து வீச்சையும் சமாளித்து ஆட கெயில், டில்ஷான் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர்.

இருவரும் அதிரடியாகவே ஆட்டத்தை ஆரம்பித்தனர். கெயில் அளவுடன் ஆட, அதிரடியாக டில்ஷான் போட்டுத் தாக்கினார். 4.1 பந்து பரிமாற்றங்களில் டில்ஷான் 20 பந்துகளில் 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாய் 27 ஓட்டங்களுடன் மலிங்கவின் வேகத்தில் வீழ்ந்தார். தொடர்ந்து கெயில் 5 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார். 42 ஓட்டங்களுக்கு அணி 2 இலக்குகளை இழந்திருந்தது. தொடர்ந்து ஹோக்லி, அகர்வால் ஆட்டத்தை தொடர்ந்தனர். இருப்பினும் இவர்களது இணைப்பாட்டமும் நீண்ட நேரம் நீடிக்கவில்லை. 67 ஓட்டங்களுக்கு மூன்றாவது இலக்கு சரிந்தது. அகர்வால் 14, ஹோக்லி 11, திவாரி 17 ஓட்டங்கள் அதிகப்படியாக இரட்டை இலக்க ஓட்ட எண்ணிக்கையில் பெற்றனர். பின்வரிசை வீரர்கள் ஒற்றை ஓட்டங்களுடன் மும்பையின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் திணறினர். இறுதியில் 19.2 பந்து பரிமாற்றங்களில் 108 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து சரணடைந்தனர். இதன் மூலம் மும்பை இந்தியன்ஸ் அணி 31 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

பந்து வீச்சில் ஹர்பஜன் 20 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், மலிங்க, நெச்சிம், சஹாலா தலா 2 இலக்குகளை சரித்தனர். ஆட்ட நாயகனாக மும்பையின் ஹர்பஜன் தெரிவானார். தொடர் நாயகனாக மும்பையின் மலிங்க தெரிவானார். (15)



# டோனிக்கு தேவை ஓய்வு

## ஆலோசனை கூறுகிறார் கங்குலி



*இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாட இருக்கின்றது.*

*இந்தியாவுக்கு வெளியே டெஸ்டில் விளையாடுவது அணித்தலைவர்களுக்கு மிகவும் சவாலானது. இது தான் உண்மையான பரிசோதனையாக இருக்கும். இதனால் ஆஸ்திரேலிய தொடருக்கு முன்பு டோனிக்கு ஓய்வு கொடுக்க வேண்டும் என்று முன்னாள் அணித் தலைவர் கங்குலி கூறியுள்ளார்.*

*இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:*

*ஆஸ்திரேலியா செல்லும்போது அவர் புத்துணர்வுடன் செல்ல வேண்டும். இங்கிலாந்து தொடரில் ஏற்பட்ட தோல்விக்கு ஆஸ்திரேலிய பயணத்தில் சிறப்பாக ஆட வேண்டும். இதனால் டோனிக்கு ஓய்வு மிகவும் அவசியமானது.*

*இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவுடன் 4 டெஸ்ட், 20 ஓவர் ஆட்டம் மற்றும் 3 நாடுகள் ஆட்டத்தில் விளையாடுகிறது.*

*முதல் டெஸ்ட் மெல்பேர்னில் டிசெம்பர் 26 ஆம் திகதி தொடங்குகிறது. இந்த தொடருக்கு முன்பு இந்திய அணி இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடுகிறது.*

*இந்திய அணி சமீபத்தில் இங்கிலாந்து மண்ணில் டெஸ்ட் தொடரை 0-4 என்ற கணக்கிலும், ஒருநாள் தொடரை 0-3 என்ற கணக்கிலும் இழந்தது. (15)*



# 2015 இல் கிண்ணம் வெல்ல வேண்டும்

## பீற்றர்சனின் கனவு இது

**இங்கிலாந்து அணிக்காக 2015 இல் நடைபெற உள்ள உலகக் கிண்ண ஒருநாள் போட்டித் தொடரில் விளையாட வேண்டும் என்று விரும்புவதாக நட்சத்திர வீரர் கெவின் பீற்றர்சன் கூறியுள்ளார்.**

**இந்தியாவுடன் சமீபத்தில் நடந்த ஒருநாள் தொடரில் பீற்றர்சனுக்கு ஓய்வளிக்கப்பட்டது.**

**எனினும் தற்போது இந்தியா வந்துள்ள இங்கிலாந்து அணியில் அவர் இடம் பெற்றுள்ளார்.**

**ஒரு நாள் ஆட்டங்கள் (5) மற்றும் ஒரு ரி - 20 ஆட்டத்திலும் அவர் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. டெஸ்ட் ஆட்டங்களில் சிறப்பாக விளையாடி வரும் பீற்றர்சன் ஒரு நாள் போட்டியில் கணிசமாக ஓட்டங்கள் குவிக்க முடியாமல் திணறி வருகிறார். கடந்த 30 இன்னிங்சில் அவர் சராசரியாக 23 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளார்.**

**இது குறித்து பீற்றர்சன் கூறியதாவது:**

**டெஸ்ட் போட்டியில் அதிக கவனம் செலுத்தி வந்தாலும் மூன்று வகை போட்டியிலுமே தொடர்ந்து விளையாட விரும்புகிறேன். ஓய்வு பெறுவது பற்றி இப்போது சிந்திக்கவில்லை.**

**மூத்த வீரர்களுக்கு சில போட்டியில் ஓய்வளிப்பது மிகவும் சரியான முடிவு. இதனால் நல்ல ஓய்வு கிடைக்கிறது. மீண்டும் போட்டியில் உற்சாகமாக விளையாட உதவுகிறது.**

**இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் இந்த திட்டத்தை வரவேற்கிறேன். 2015 இல் நடக்க உள்ள உலகக் கிண்ண ஒருநாள் தொடரில் இங்கிலாந்து அணிக்காக விளையாட விரும்புகிறேன்.**

**அதற்கேற்ப எனது உடல் தகுதியை பராமரிப்பதுடன், சிறப்பாக விளையாடி அணியில் இடம்பெற முயற்சிப்பேன் என்றார்.**

**(15)**


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கௌரவ கலாநிதிப் பட்டம் பெற்ற
செஞ்சொற் செல்வர்
**ஆறு. திருமுருகன்**
அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து அவரது கல்விச் சேவையும் ஆன்மிகச் சேவையும் சமூகப் பணியும் எழுச்சி பெற இணுவில் கந்தப் பெருமானையும், சாந்தியடி வைரவப் பெருமானையும் ஆசி வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துபவர்கள்-**
செ.சோதிப்பெருமாள் J.P (இளைப்பாறிய அதிபர்)
சோ.ஸ்ரீஸ்கந்தராசா குடும்பம்(லண்டன்)
க.சதானந்தன் குடும்பம், இ.தபானந்தன் குடும்பம்.
**"சரஸ்வதி மகால்" இணுவில்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



**அமரர் சிவரெத்தினம் விஷ்ணுமூர்த்தி**
(மண்கும்பான்)

கடந்த [10.09.2011] அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தந்தையின் பிரிவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து ஆறுதல் கூறி தோளோடு தோள் நின்று உதவியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு மலர்வளையம் வைத்தும், கண்ணீர் அஞ்சலிகள் பதாகைகள் வெளியிட்டும் வணக்கம் செய்தவர்களுக்கும் தொலைபேசி, தந்திகள் மூலமாக எம்மோடு துன்பத்தைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் எமக்கு உதவிக் கரம் நீட்டிய அன்பு உறவுகளுக்கும் எம் இதய நன்றிகள்.

அத்துடன் இன்று [10.10.2011] திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

4ஆம் வட்டாரம்,
சிவகாமி அம்மன் கோயிலடி,
மண்கும்பான் கிழக்கு, மண்கும்பான்.
குடும்பத்தினர்.

## கலாசார நிகழ்வு பிற்போடல்

யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் நாளை (11.10.2011) செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த
**ராக தாள சங்கமம்**
தவிர்க்கமுடியாத காரணத்தால் 22.10.2011 மாலை 5 மணிக்கு நடைபெறும் என அறியத்தருகின்றோம்.
செயலாளர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் கோபாலசிங்கம்



கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் கோபாலசிங்கம் நேற்று (09.10.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னார் கந்தையா கோபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து- ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான கந்தையா- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சிவசாந்தினி,ஜெயலக்சுமி(கனடா), ஜெயகுமாரி (கனடா), சறோஜினி(கோண்டாவில்), வனஜா(கனடா), பவகோபிதன்(கனடா), டக்சிகா(கனடா), ஆகியோரின் பாசமிகு தாயாரும் கேதீஸ்வரன்(கனடா) பாலமோகன்(கனடா), நிமல்ராஜ் (கனடா), குலேந்திரராஜா(யாழ்.வைத்திய சாலை -திருநெல்வேலி) விபுலன்(கனடா), கவிதா(கனடா) துஸ்யந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் விநாயகமூர்த்தி (நவக்கிரி- கனடா), கமலாதேவி(கோண்டாவில்), துரைராஜா (உரும்பிராய்) ஆகியோரின் சகோதரியும்,தாரணி, அனுராகவன், அபிராமி, கிசாந், சஞ்சீவன், அபினா, பிரவீனா, கோபிசாந், திசோபிகா, நிலுசன், பானுசன், யனுசன்,ஆய்சியா, கௌதமி, கரிசன், சங்கவி, லக்சன், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2011) திங்கட்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு.திருமதி சி.குலேந்திரராஜா (குயிலன்)
(யாழ். வைத்தியசாலை, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.

செல்வநாயகம் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

## காணி விற்பனை

Dash Road, Supulakaladdi(சுப்புலா கலட்டி) கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்னும் முகவரியில் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0777148143, 0779947495

## காணி விற்பனைக்கு

யாழ். முத்திரைச் சந்திக்கு அருகில் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு-0772395774

## தவறிவிட்டது

கொக்குவில் கிழக்கு, கொக்குவில் எனும் முகவரியை உடைய நடராஜா துரைசிங்கம் என்பவருடைய 540653852V எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம் என்பன திருநெல்வேலிக்கும் உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
சிறுவர் பாதுகாப்பு நிலையம்,
167, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே- 0773415663, 0772718981

## அறைகள் வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கையில் ஆண் மாணவர்கள், அலுவலர்களுக்கான சகல வசதிகளுடன் கூடிய அறைகள் வாடகைக்குண்டு.
தொடர்பு-0779578244

## திசைகாட்டி
முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்

தரம் 5 மாணவர்களுக்கான விசேட ஆங்கில பயிற்சிநெறி (3 மாதம்)
2012 ஆம் ஆண்டு(English Medium) ஆங்கில மொழி மூலம் 6ஆம் தரத்தில் கல்வியைத் தொடரவுள்ள மாணவர்களுக்கான விசேட ஆங்கிலப் பயிற்சி நெறி.
கட்டணம் ரூபா 2500/- மட்டும்.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
இல.37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(Expo முன்பாக)
T.P-0214914527

## தேவை

அலுவலகத்தில் பணி புரிய கணினியில் (Computer) தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்யக்கூடிய பெண்கள் தேவை.
தொடர்பு- 0770489398


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இணுவை மண் பெற்றெடுத்த முத்தான முத்துகளான
பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராக பதவி உயர்வு பெற்ற
**கலாநிதி வல்லிபுரம் மகேஸ்வரன்**
அவர்களையும்
அலரிமாளிகையில் "பிரதீபா பிரபா" விருது பெற்ற
சின்னத்துரை சோதிலிங்கம் (பிரதி அதிபர்)
சுப்பையா சண்முககுலகுமாரன் (அதிபர்)
அவர்களையும் மேலும் பல விருதுகைள்பெற்று உச்ச சாதனைகளை நிலைநாட்ட எல்லாம் வல்ல இணுவைக் கந்தப்பெருமானையும் சாந்தியடி வைரவப் பெருமானையும் பிரார்த்திக்கின்றோம்.

**மனதார வாழ்த்தும்-**
செ.சோதிப்பெருமாள் J.P (இளைப்பாறிய அதிபர்)
சோ.ஸ்ரீஸ்கந்தராசா குடும்பம்(லண்டன்)
க.சதானந்தன் குடும்பம், இ.தபானந்தன் குடும்பம்.
**"சரஸ்வதி மகால்" இணுவில்.**

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
23
*
12
*
1933



உதிர்வு
25
*
09
*
2007


**அமரர் கனகசிங்கம் சதானந்தம்** (ஆனந்தம்)
(ஓய்வுபெற்ற நீதிமன்ற வெலியாத்து உத்தியோகத்தரும் அகில இலங்கை சமாதான நீதிவானும் ஸ்ரீ பூதேஸ்வரர் (சிவன்) தேவஸ்தான ஆதீன தர்மகத்தாவும்)
திதி: வளர்பிறை சதுர்த்தசி

அன்புக்கும் பண்புக்கும் பாசத்துக்கும் உறைவிடமாய் இமைப் பொழுதில் மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே நீங்கள் இன்றெம்மைப் பிரிந்து நான்காண்டுகள் கடந்தாலும் உங்கள் அழியாத நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சங்களில் அணையாத தீபமாய் ஒளிர்ந்துகொண்டிருக்கும். என்றென்றும் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

சிவன் கோயிலடி,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

நீங்காத நினைவுடன்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.



மேலதிக விபரங்களுக்கு
021 4900 900

உச்ச மதிப்பும் தொழில் வாய்ப்பும் மிக்க குடிசார் பொறியியல் துறையில் உங்களையும் இணைத்துக் கொள்ளுங்கள்

கட்டிட நிர்மாணத் துறையிலே ஓர் சிறந்த பொறியியல் வல்லுனராக வருவதற்குரிய அடித்தளத்தினை Edexcel இன் HND Civil Engineering கற்கை நெறி ஏற்படுத்தி தருகின்றது. பிரித்தானிய தகைமைக்கான இக்கற்கை நெறியினை வட இலங்கையிலே எமது IIS CITY CAMPUS இல் மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும். இக் கற்கை நெறியை முடித்துக் கொள்ளும் மாணவர்களுக்கு கட்டிட நிர்மாணத் துறையிலே உள் நாட்டில் அல்லது வெளிநாட்டில் சிறந்த வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளக் கூடிய அற்புதமான வாய்ப்புக்கள் உள்ளன. நீங்களும் ஓர் பொறியியலாளர் ஆகும் சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள் .

**Duration**
2 years

**Entry Requirment**
Minmum 2 Passes in A/L Maths

கல்விப் பாரம்பரிய மிக்க யாழ்ப்பாணத்தில் ஓர் கல்விச் சாம்ராஜ்யம்

**IIS CITY CAMPUS**
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 021 222 8060 Fax: 021 222 6933
Web: www.iis.edu.lk Email: info@iis.edu.lk

## தமிழர்களின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களை அகற்றும் பணியை சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றின் மூலம் இந்தியா மேற்கொண்டு வருகிறது. இந்தப் பணிகளையும் மாத்தாய் மேற்பார்வையிட்டார்.

அங்கிருந்து பளைக்குச் சென்ற மத்தாய் குழுவினர், அங்கு இந்திய நிதி உதவியில் கட்டப்பட்டுவரும் வீட்டுத் திட்டப் பணிகளை ஆய்வு செய்தனர். இந்தியாவால் அமைத்துத் தரப்படும் என்று அறிவிக்கப்பட்ட 50,000 வீடுகளின் முதல் தொகுதியான 1,000 வீடுகளை அமைக்கும் பணியின் ஒரு பகுதியாக பளையில் 50 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட முடிவுக்கு வந்துள்ள அந்த வீடுகளைப் பார்வையிட்ட மத்தாய், இந்தத் திட்டத்தில் காணப்படும் தாமதங்களுக்கான காரணங்களையும் ஆராய்ந்தார்.

பிற்பகல் 1.30 மணிக்கு மாத்தாய் குழுவினர் ஆளுநர் தலைமையிலான அரச அதிகாரிகள் குழுவைச் சந்தித்துக் கலந்துரையாடினர். அப்போது கண்ணிவெடிகளை அகற்றுவதில் காணப்படும் தாமதங்களாலேயே மீள்குடியமர்வில் தாமதங்கள் ஏற்படுவதாக அரச தரப்பால் சுட்டிக்காட்டப்பட்டது என்று அரச மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பால் தமிழ் மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக் குறித்து யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் இந்தியக் குழுவினருக்கு விளக்கினார். இது தொடர்பான புள்ளிவிவரங்கள் அடங்கிய ஆவணம் ஒன்றையும் அவர் கையளித்தார். (உ-14)

## வட்டக்கச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த குமார்ராஜா கொலன் மேரி திரேசா (வயது-63) என்ற வயோதிபப் பெண்மணியே கொலையுண்டவர் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது-

பிரஸ்தாப பெண் கிளிநொச்சி கட்சன் வீதியிலுள்ள வீடு ஒன்றில் உடல் நோய்வாய்ப்பட்ட அவரது கணவருடன் வாழ்ந்து வந்துள்ளார். நேற்று முன்தினம் எதிர் வீட்டில் வவுனியாவிலிருந்து ஹைஏஸ் வாகனத்தில் வந்த மூவர் தாங்கியுள்ளனர். மூவரில் ஒருவர் குறித்த பெண்ணின் வீட்டுக்கு இரவு சென்று அவர்களுடன் உரையாடிவிட்டு அங்கேயே தங்கியுள்ளார். நேற்று அதிகாலை அயலில் உள்ளவர்கள் குறித்த பெண்வீட்டுக்கு வழமை போல் உதவிக்காக சென்ற வேளையில் அவர் கழுத்தில் வெட்டப்பட்ட நிலையில் இரத்த வெள்ளத்தில் சடலமாகக் கிடப்பதைக் கண்டுள்ளனர்.

உடனடியாக கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டார். நீதிவானின் உத்தரவுப்படி சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஹைஏஸ் வாகனத்தில் வந்த மூவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர். வாகனமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

பொலிசார் மேற்கொண்ட தீவிர விசாரணைகளை அடுத்து சந்தேகநபர் ஒருவரிடம் இருந்து கொலையுண்ட பெண்ணின் கவரிங் சங்கிலி மற்றும் பவுண்காப்பு, தோடு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை இரவும் வட்டக்கச்சி மாயவனூர் சிவன் கோயிலடிப் பகுதியில் வீட்டில் படுத்திருந்த குடும்பஸ்தர் ஒருவர் ஆயுததாரிகளால் வெட்டிக்கொலை செய்யப்பட்டார். வீட்டு உரிமையாளரான பெண் கத்திக் குத்துக்கு இலக்காகி யாழ். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருமலையைச் சேர்ந்த தம்பிராஜா சௌந்தர் ராஜன் என்பவரே கொலையுண்டவர் ஆவார்

(ஒ-323-4-60)


## ஓராண்டு நினைவலைகள்

மலர்வு 02 * 12 * 1942

உதிர்வு 21 * 09 * 2010



**அமரர் தங்கராசா மகேஸ்வரி**

*ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்*
*ஆறாது அம்மா; நம் துயரம்*
*உங்கள் நினைவு எம்மை விட்டகலாது*
*என்றும் உங்கள் நிழலிலே வாழ்வோம் அம்மா*

இன்று (10.10.2011) திங்கட்கிழமை நடைபெறும் அன்னாரின் ஓராண்டுத் திதி நிகழ்விலும் பங்கு பற்றி மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'அன்னபதி வாசா'
சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

ச.தங்கராசா
குடும்பத்தினர்.


## பாதாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரனின் ஆதரவாளர்களுக்கும், துமிந்த சில்வாவின் ஆதரவாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலினாலேயே இந்தக் கொடூரச் சம்பவம் அரங்கேறியது.

இந்தச் சம்பவம் தொடர்பாக அமைச்சர் டியூ. குணசேகரவிடம் கேட்டபோது, ''பாதாளக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள் அரசியலுக்கு வந்தால் நாட்டில் இவ்வாறான சம்பவங்கள்தான் நடைபெறும்'' எனக் கூறினார். (சி)

## 21 சபைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்று முடிந்த தேர்தலில் எல்லாம் பெரும் வெற்றிபெற்று அரச தரப்புக்கு கொழும்பு மாநகரசபையைக் கைப்பற்ற முடியாமல் போனது சற்று ஏமாற்றத்தை அளித்துள்ளது.

கிழக்கில் முக்கிய போட்டிக் களமாக இருந்த கல்முனை மாநகரசபைத் தேர்தலில் அரசின் பங்காளிக் கட்சி யாக இருந்தாலும் முஸ்லிம் காங்கிரஸ் வெற்றி பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நான்கு ஆசனங்களைக் கைப்பற்றி கல்முனை மாநகரசபையில் எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்றுள்ளது. முஸ்லிம் காங்கிரஸ் தனது கோட்டையை தக்கவைத்துக்கொண்டது.

இரத்தினபுரி மாநகரசபைக்குத் தனித்துப் போட்டியிட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், அதேபோன்று பதுளை மாநகரசபைக்குத் தனித்துப் போட்டியிட்ட மலையக மக்கள் முன்னணியும் தோல்வியைத் தழுவியுள்ளன.

பெரும் பரபரப்பையும், எதிர்பார்ப்பையும் ஏற்படுத்திய கொழும்பு மாநகர சபைக்கான தேர்தலில் ஐ.தே.க. ஒரு இலட்சத்து ஆயிரத்து 920 வாக்குகளைப் பெற்று 24 ஆசனங்களைத் தனதாக்கி வெற்றியீட்டியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 77 ஆயிரத்து 89 வாக்குகளைப் பெற்று 16 ஆசனங்களையும், ஜனநாயக மக்கள் முன்னணி 6 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 2 ஆசனங்களையும், ஐக்கிய ஜனநாயக முன்னணி 2 ஆசனங்களையும், இரண்டாம் இலக்க சுயேச்சைக் குழு ஒரு ஆசனத்தையும், மக்கள் விடுதலை முன்னணி ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

53 ஆசனங்களைக் கொண்ட கொழும்பு மாநகரசபையில் ஐ.தே.க. அறுதிப் பெரும்பான்மைப் பெறவேண்டுமாயின், 27 ஆசனங்களைப் பெறவேண்டும். எனினும், ஐக்கிய தேசியக் கட்சி 24 ஆசனங்களையே பெற்றுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெறவேண்டுமானால், ஜனநாயக மக்கள் முன்னணியின் ஆதரவைப் பெறவேண்டும். இல்லையேல், இரண்டுக்கு மேற்பட்ட கட்சிகள், சுயேச்சைகளின் ஆதரவைப் பெறவேண்டியிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-சி)

## முதலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திடீரென துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா தொடர்ந்து ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைபெற்று வருகின்றார். துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றவுடன் ஜயவர்தனபுர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட துமிந்த சில்வாவிற்கு இரண்டு மணி நேர சத்திரசிகிச்சை அளிக்கப்பட்டது. இதன்போது தலையிலிருந்து இரண்டு ரவைகள் அகற்றப்பட்டன. அதேசமயம், அவசர சிகிச்சைப்பிரிவில் இருக்கும் துமிந்த சில்வாவின் உடல் நிலைமை குறித்து இன்னும் 24 மணி நேரத்தில் மருத்துவர்கள் அறிக்கை வெளியிடுவார்கள் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் இந்தச் சம்பவம் குறித்தான விசாரணைகளை நடத்தும் இரகசியப் பொலிஸார் முதலில் துப்பாக்கியால் சுட்டவர் யார் என்பதைக் கண்டறிவதில் தீவிரமாக உள்ளனர். இது தொடர்பில் அவர்களுக்கு முக்கியமான தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் நம்பகமாகத் தெரியவருகிறது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டதையடுத்து ஆத்திரமடைந்துள்ள அவரது ஆதரவாளர்கள், சிறிஜயவர்தனபுர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள துமிந்த சில்வாவின் மீது தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் கரணமாக அவரைப் பாதுகாக்கும் பொருட்டு துமிந்த சில்வாவின் ஆதரவாளர்கள் ஜயவர்தனபுர வைத்தியசாலையைச் சுற்றிவளைத்துப் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சூட்டுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தன.

சம்பவ இடத்துக்குச் சென்ற ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவா விசாரணைகளை மேற்கொண்டதை அடுத்து சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டது. பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனையை அடுத்து சடலம் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் இராணுவச் சிப்பாய் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார். இது கொலையா? தற்கொலையா? என்பது தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தநிலையில் மற்றொரு சிப்பாயும் சூட்டுக் காயத்தால் உயிரிழந்துள்ளார்.

(உ-323-04)

# 'பேஷியல் கிறீம்' விசமாகி பெண் சாவு

### சடலம் கால்வாயில்

'பேஷியல்' செய்வதற்காக அழகுச் சிகிச்சை நிலையத்திற்குச் சென்ற சங்கீத ஆசிரியை ஒருவரின் முகத்தில் பூசிய கிறீம் ஒன்று விஷமாகி அந்த ஆசிரியையின் உயிரைப் பறித்துள்ளது. அவரின் சடலத்தை அழகு சிகிச்சை நிலையத்தின் உரிமை யாளர் நீர்கொழும்பிலுள்ள கால்வாய் ஒன்றுக்கு அருகில் வீசியுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இதையடுத்து அழகு சிகிச்சை நிலையத்தின் உரிமையாளரும் அவரின் கணவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பிலுள்ள பாடசாலை ஒன்றில் பணியாற்றிய வசந்த அமரதுங்க (வயது - 34) எனும் இந்த ஆசிரியை நீர்கொழும்பு கொச்சிக்கடையிலுள்ள தனது வீட்டிலிருந்து செப்டெம்பர் 24 ஆம் திகதி வெளியேசென்றபின்னர் காணாமல்போனார். மறுநாள் அவரின் சடலம் நீர்கொழும்பு கனல்வீதியில் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த அழகு சிகிச்சை நிலையத்தில் அவரது முகத்தில் பூசப்பட்ட கிறீமொன்று விஷமாகி அவர் இறந்தார் என்பதை பொலிஸார் கண்டறிந்துள்ளனர். அவரின் சடலத்தை அழகு சிகிச்சை நிலையத்தின் உரிமையாளர் தனது கணவரின் உதவியுடன் கால்வாய்க்கு அருகில் கிடத்திவிட்டு சென்றமையும் பொலிஸ் நடத்திய விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பில் நேற்று ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் கரு ஜயசூரிய மற்றும் முதல்வர் வேட்பாளராகப் போட்டியிட்ட முஸம்மில் ஆகியோர் மனோ கணேசனுடன் தொலைபேசியூடாக பேச்சு நடத்தினர் எனவும் அவர் தெரிவித்தார்.

ஐ.தே.கவின் இந்தக் கோரிக்கை குறித்து மனோ கணேசன் உடனடியாகப் பதில் எதையும் வழங்கினார் எனத் தகவல் இல்லை. எனினும் கட்சியின் அரசியல் குழுவுடன் கூடி பொதுவான தீர்மானம் ஒன்றை எடுக்கும் என மனோ கணேசன் ஐ.தே.க. தலைவர்களுக்குத் தெரியப்படுத்தினார் என அறிய முடிகிறது.

இன்று கொழும்பில் கூடும் ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் குழு இதுகுறித்து விவாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**அரசும் ஆராய்கிறது**

இதேவேளை, 16 ஆசனங்களைக் கைப்பற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஏனைய கட்சிகளையும் இணைத்து மாநகர நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்த முடியுமா என்பது பற்றி சட்ட வல்லுநர்களுடன் நேற்று தீவிரமாக ஆலோசித்திருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சித் சட்ட திட்டங்களில் அவசர திருத்தங்களைச் செய்து இப்படியான ஏற்பாட்டைச் செய்ய முடியுமா என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, சிரேஷ்ட அரச சட்டவாதிகள் மற்றும் சட்டத்துறை நிபுணர்களின் ஆலோசனையை பெறப்பட்டது என அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

உள்ளூராட்சி சபைச் சட்டதிட்டங்களில் திருத்தம் செய்து மாநகர சபை நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமாயின் அதற்கு ஜனநாயக மக்கள் முன்னணி ஒத்துழைக்குமா என அறிவதற்கு மனோ கணேசனின்கட்சி முக்கியஸ்தர்களுடன் தொடர்பு கொள்ள அரசின் சிரேஷ்ட உறுப்பினர்கள்நேற்று மாலைவரை முயன்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் அரசின் இந்தக் கோரிக்கையை கவனத்தில் எடுக்கும் யோசனை மனோவுக்குக் கிடையாது என ஜனநாயக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சூழ்நிலையில் இன்று கொழும்பில் இடம்பெறும் ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் குழுக்கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

**ரைப்செற்றர் தேவை**

வடமராட்சி பருத்தித்துறையிலுள்ள பிரபல அச்சகம் ஒன்றுக்கு Page Making தெரிந்த ரைப்செற்றர் (பெண்பிள்ளைகள்) தேவை.
தொடர்புகளுக்கு: 0750389767

கல்வியில் புதிய சகாப்தம் படைப்போம்
**ROYAL ACADEMY**
சங்கானை
**பொருளியல்**
**S. வரதராஜன்**
**A/L 2012**
பாடத்திட்ட வகுப்பு
பணமும் வங்கியும் திங்கள் 3 - 4
வருமான வட்டப் பாய்ச்சல் புதன் 3 - 4
மீட்டல் வினாவிடை வகுப்பு
சந்தைச் செயற்பாடு
திங்கள், புதன் 4.00 - 5.00
பொருளியல் அறிமுகம்
வியாழன் 3.00 - 5.00
**A/L 2013**
நெகிழ்ச்சிக் கோட்பாடு
திங்கள், புதன் 5.00 - 6.00
ஆரம்பம் : 12 - 10 - 11

# மாத்தாய் வடக்கில் இருக்கையில் தமிழக மீனவர்கள் மீது தாக்கு

கொழும்பு, ஒக். 10

இலங்கைக் கடற்படையினர் தாக்கியதில் 15க்கும் மேற்பட்ட இந்திய மீனவர்கள் காயமடைந்துள்ளனர் என்று தமிழகப் பொலிஸாரை மேற்கோள்காட்டி பி.ரி.ஐ. செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் ரஞ்சன் மாத்தாய் யாழ்ப்பாணத்தில் நிலைமைகளை ஆய்வு செய்து கொண்டிருக்கையில் தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டனர் என்ற முறைப்பாடு கிளப்பப்பட்டுள்ளது. இந்திய மீனவர்கள் மீதான தாக்குதலை, இந்தியா மீதான போராகவே புதுடில்லி கருதவேண்டும் என்று மாத்தாயிடம் தமிழக முதல்வர் வலியுறுத்தினார் என்று செய்திகள் வெளியாகிய ஒரு நாள் கழிந்து மீனவர்கள் தாக்கப்பட்ட தகவல்களும் வெளியாகி உள்ளன.

கச்சதீவுக்கு அருகே இந்தியக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் அங்கு வந்த கடற்படையினர், வான்நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தி தடிகளால் தாக்கி இந்திய மீனவர்களை விரட்டியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்களின் 20க்கும் மேற்பட்ட வலைகள் அறுக்கப்பட்டுள்ளன என்றும் முறையிடப்பட்டுள்ளது.

எனினும் வழக்கம்போல் இலங்கைக் கடற்படையினர் இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளனர். ''இது அடிப்படையற்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டு'' என கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

(உ)

# அருள் நங்கைக்கு அழகிய பாராட்டு



யாழ்ப்பாணம், ஒக்.10

யாழ். புதிய உயர் கல்லூரி விரிவுரையாளரும் நிர்வாகியுமாகிய திருமதி அருள்நங்கை சண்முகநாதனின் சேவை நலன் பாராட்டு விழா நேற்று யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் இ.விசாகரூபன் தலைமையில் வெகு கோலாகலமாக இடம்பெற்றது.

மங்கள வாத்தியங்கள் முழங்க விழா நாயகி விருந்தினர்களால் வீதி வழியாக அரங்கு நோக்கி அழைத்து வரப்பட்டார். தொடர்ந்து மாணவிகளின் வரவேற்பு நடனம் அரங்கை அலங்கரித்தது. இதன் பின் ஆசியுரைகள் இடம்பெற்றன. ஆசியுரைகளை நல்லை ஆதின குருமுதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரீகத்துறை தலைவர் வணபிதா ஞா. பிலேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர். வாழ்த்துக்களை யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் வணிக பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் கே.தேவராஜா சூழலியலாளர் பொ.ஐங்கரநேசன் உட்பட பலர் வழங்கினர்.

விழா நாயகியை கௌரவிக்கும் முகமாக விழா ஏற்பாட்டுக் குழுவால் ''அருள்நங்கை'' எனும் நூல் வெளியிடப்பட்டது. வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் கலாநிதி த.கலாமணி நிகழ்த்தினார். விழா நாயகி ஏற்புரை வழங்கினார். (உ-319)

**அறிவித்தல்**

**க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான புலமைப்பரிசில்**

கீழ்வரும் கற்கை நெறிகளை பயில விரும்பும் க.பொ.த. உயர்தரப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு பாடசாலை அதிபர்களின் சிபார்சிற்கு அமைய புலமைப் பரிசில் வழங்க உள்ளோம். விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் பாடசாலை அதிபர்களின் ஊடாக விண்ணப்பிக்கவும்.

Bachelor of Information Technology(UCSC)
CIMA(UK)
Computer Engineering(USA, Canada)
Foundation of Information Technology(UCSC)

MCS
Supported By UNDP/JRRP
தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
324,Palaly Road,Parameswara Junction

Supported by United Nation Development Programme / Jaffna Rehabilitation & Resettlement Projects.

**பிலதெல்பியா மிஷனரி சபை ஆலய பிரதிஷ்டை அழைப்பு**

கிறிஸ்துவுக்குள் அன்புடையீர், கர்த்தருடைய பெரிதான
கிருபையினாலும், ஆசிர்வாதத்தினாலும்
வருகிற 2011 ஒக்ரோபர் மாதம் 11 ஆம் திகதி
செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு
இல.724, கண்டி வீதி, A9 அரியாலை, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
**பிலதெல்பியா மிஷனரி சபையை**
பாஸ்டர் P.S.ராஜமணி
(SIAG General Superintendent, India)
அவர்களால்
பிரதிஷ்டை செய்துவைக்க நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள்
குடும்பத்தோடும் மற்றும் திருச்சபை ஊழியர்கள், தலைவர்களுடனும்
வருகைதந்து திருச்சபையை ஆசிர்வதித்து ஜெபிக்க
அன்புடன் அழைக்கின்றோம்.

பாஸ்டர் போல் சற்குணராஜா
(ஸ்தாபகர் - தலைமைப் போதகர்)
போதகர்கள், மூப்பர்கள் மற்றும் விசுவாசிகள்.

T.P: 0041 - 797 057 467, 0094 771 175 663

**14th Year Remembrance**



Born 28 . 02 . 1928
Died 10 . 10 . 1997

The Rt. Rev.Dr.David Jeyaratnam Ambalavanar
(Second Bishop of J.D.C.S.I)

*" Looking to Jesus.... who for the joy that was set before him endured the cross."*

Hebrews 12.2

Fondly remembered by his family.

Batticaloa
10th October, 2011

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

பல வருட ஆய்வுமூலம் உருவாக்கப்பட்ட புதியமுறையிலான கற்பித்தல் மூலம் பல நூற்றுக்கணக்கான அதிபர், ஆசிரியர்கள், வங்கியாளர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், விற்பனை பிரதிநிதிகளுக்கு ஆங்கிலம் பேசுதலில் முழுமையான தேர்ச்சியினை உருவாக்கிய

MyWay ஆசிரியரின் சனி, ஞாயிறு மற்றும் வார வகுப்புக்களில் நேரடியாக பயிற்சிபெற கடைசி சந்தர்ப்பம்

A/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் நுழைவு மாணவர்கள், பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர்கள், விற்பனை பிரதிநிதிகள் கலந்துகொள்ளும்

**இலவச ஆங்கில வகுப்பு**

அனுமதி, புத்தகம், மற்றும் சான்றிதழ் இலவசம்

**11.10.2011 செவ்வாய் (போயா விடுமுறை தினம்)**

பிரிவுகள் : (ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)
காலை 8-9, 9-10, 10-11, 11-12 மாலை 3-4, 4-5, 5-6

இலகுவாக முழுமையாக ஆங்கிலத்தினை கதைப்பதற்கான MyWay ஆசிரியரின் நேரடி வகுப்பில் கலந்து கொள்ள விரும்புவோருக்கு இதுவே கடைசி சந்தர்ப்பமாகும்

இந்த இலவச அடிப்படை வகுப்பில் கலந்துகொள்வோர் மட்டுமே MyWay இன் வார அல்லது வார இறுதி வகுப்பில் கலந்துகொள்ளலாம்

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.